பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 288 ஆவணி 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை 13 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## ரயில் மோதி விபத்து தாயும் மகனும் பரிதாபச் சாவு

*தந்தையும் மற்றொரு மகனும் உயிருக்குப் போராட்டம்*

கொழும்பு, செப். 13
அம்பலாங்கொடை - கந்தேகொட பகுதியில் பாதுகாப்பின்றி தொடருந் 23

## அரச தலைவர் தேர்தல் தொடர்பில்

# வேட்பாளர்கள் எல்லோரிடமும் கூட்டமைப்பு பேச்சில் ஈடுபடும்

## அதன் பின்னரே இறுதிமுடிவு என்று சம்பந்தன் உறுதிபடத் தெரிவிப்பு



**கொழும்பு, செப்ரெம்பர் 13**
**அரச தலைவர் தேர்தலில் எனக்கு கூட்டமைப்பின் ஆதரவு கிட்டும் என்று 'உதயனுக்கு' நேற்றுத் தெரிவித்தார் அமைச்சர் சஜித் பிரேமதாச. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், வேட்பாளர்கள் அனைவருடனும் பேச்சில் ஈடுபட நாம் தயாராக இருக்கின்றோம். பேச்சின் பின்னரேயே இறுதி முடிவு - என்றார்.** 23



### போதைப் பொருளை வைத்திருந்த விவகாரம்

## நீதிமன்றில் தற்கொலைக்கு முயன்ற நபரால் பரபரப்பு!

யாழ்ப்பாணம், செப். 13
போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரொருவர் கூரிய பொருளொன்றால் தனது கழுத்தைக் கீறி தற்கொலைக்கு முயன்றதால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுப் பரபரப்பு ஏற்பட்டது. குறித்த நபரின் உடைமையில் இருந்தே போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் 23

### அவன்கார்ட் விவகாரம்:

## கோத்தா உள்ளிட்டவர்களை விடுவிக்க அதிரடி உத்தரவு

கொழும்பு, செப். 13
அவன்காட் நிறுவனத்துக்கு மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தை முன்னெடுத்துச் செல்ல அனுமதியளித்தன் ஊடாக அரசுக்கு ஆயிரத்து 140 கோடி ரூபா நட்டதை ஏற்படுத்தியதாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள வழக்கை ஆட்சேபித்து முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தாக்கல் செய்துள்ள மனுவின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், அந்த வழக்கில் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 8 பேரையும் விடுவிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டுள்ளது.
மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாமே 23

## பாதயாத்திரை

யாழ்ப்பாணம், செப். 13
நாட்டில் சமாதானம், நல்லிணக்கம் மற்றும் அமைதி வேண்டி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் வரையிலான பாதயாத்திரை நேற்றுக் காலை ஆரம்பமானது.
இலங்கை முதலுதவி, இந்து சமய தொண்டர் சபை, யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஆகியன இணைந்து இந்தப் பாத யாத்திரையை முன்னெடுத்துள்ளன. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர் திருவிழாவை முன்னிட்டு இந்த யாத்திரைக் குழு அங்கு செல்லவுள்ளது. (ஐ-7)





## சிங்களக் குடியேற்றம்பற்றி ஆணைக்குழுவில் ஆராய்வு

வவுனியா, செப். 13
முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குதொடுவாய், கருநாட்டுகேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள், தமது பூர்விக காணிகள் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பேரில் சிங்களக் குடியேற்றமாக் கப்பட்டமை தொடர்பில் வவுனியா மனித 23

## 9/11 தினத்தை முன்னிட்டு ஈராக்கில் அமெ. தாக்குதல்

வொஷிங்டன், செப். 13
அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மற்றும் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் ஆகியவற்றின் மீது அல்குவைதா தீவிரவாதிகள் நடத்திய 9/11 தாக்குதலுக்குப் பதிலடியாக அமெரிக்கா நேற்றுமுன்தினம் ஈராக்கின் கிழக்குப் 23



## பாகிஸ்தானில் இலங்கை அணிக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் வரலாம்

*தலைமை அமைச்சரின் அலுவலகத்தால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தல்*

கொழும்பு, செப். 13
பாகிஸ்தான் செல்லவுள்ள இலங்கை அணிக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் வரலாம் என தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத் 23

## அனைத்து மக்களுக்கும் சமஅளவிலான உரிமை

*ஜே.வி.பியினுடைய நிலைப்பாடு இது என்கிறார் அநுரகுமார திசாநாயக்க*

கொழும்பு, செப். 13
வடக்கு - கிழக்கு, மலையகம், தெற்கு என நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு சம உரிமை வழங் 23



DFCC சிறுவர் சேமிப்பு
சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்
DFCC JUNIOR
இன்றே DFCC வங்கிக்கு வந்து ஜுனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.
24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத ராசிபலன் 2019

## துலாம்





இந்த பிற்பகுதியில் சனி வக்ர நிவர்த்தி அடைகிறார். லாப ஸ்தானத்திலும், விரைய ஸ்தானத்திலும் சஞ்சரிக்கும் கிர கங்களினால் துலாம் ராசிக்கு இந்த மாதம் எப்படி இருக்கும் என்று பார்க்க லாம்.

மூத்த சகோதர சகோதரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். பதவி உயர்வு, இடமாற்றத்தை கொடுக்கும். கல்வியில் முக்கிய சக்தியை கொடுப்பார் புதன். வீடு மாற்ற, இடம் வாங்க நல்ல நேரம். ராசி அதிபதி இலாப ஸ்தானத்தில் அமர்ந்துள்ளார். 10ஆம் திகதிக்கு மேல் செலவுகள் கூடும். தேவையில்லாத விசயங்களில் தலையிட வேண் டாம். வாக்கு ஸ்தானத்தில் குரு நேர்கதியில் செல்கிறார். கொடுக்க வாக்கை காப்பாற்றுவீர்கள். சேமிப்பு கூடவே தன வரவு அதிகரிக்கும். செலவு களை கட்டுப்படுத்தினால் அற்புதமான மாதமாக அமையும்.

தடைகள் நீங்கும் தடுமாற்றங்கள் சரியாகும். குரு 2 ஆம் இடத்தில் இருப்பதால் ஏதாவது ஒரு வகை யில் பணம் வந்து கொண்டே இருக் கும்.

குரு குடும்பத்தில் இருப்பதால் திரு மண பேச்சு நன்மையை தரும். பிரச் சினைகள் தீரும். வீட்டு செலவுக்குத் தேவையான கடனை வாங்குவீர்கள். சுப நிகழ்ச்சி கள் அதிகம் நடக்கும்.



### தடுமாற்றங்கள் சரியாகும்

17ஆம் திகதிக்கு மேல் கன்னி ராசியில் சூரியன் இணைகிறார். விரைய ஸ்தானத்தில் கோள்கள் இணைவது செலவுகளையும் விரையத்தையும் தரும். செலவுகளை செய்வீர்கள். சனி ராசிக்கு மூன்றாம் வீட்டில் வக்ர நிவர்த்தி அடைகி றார். 18ஆம் திகதிக்கு மேல் உறவி னர்கள் சகோதரர்களிடம் இடை வெளி விட்டு பழகுகள்.

மாணவ மாணவிகளுக்கு மற திகள் நீங்கும். உடல் ஆரோக் கியம் மேம்படும். இதுவரை உங்களுக்கு இருந்த பிரச்சி னைகள் விலகும். செல்வாக்கு அதிகரிக்கும்.

பிள்ளைகள் ஒத்துழைப்பு தருவார் கள். குருவின் சுபப்பார்வையால் நன்மைகள் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாக மாறும்.

# 12 ராசிக்காரர்களும் விநாயகரை வழிபடும் முறை

ஜோதிட சாஸ்திரத்தில் ராகு,கேது ஆகிய கிர கங்கள்தான் மனித வாழ்வைத் தீர்மானிக் கும் சக்திகளாகத் திகழ்கின்றன. இவற்றால் பாதிக்கப் படுபவர்கள் முதலில் வணங்க வேண்டிய தெய்வம் விநாயகர்தான். 12 ராசிக்காரர்களும் விநாயகரை எப்படி வணங்க வேண்டும் என்பது பற்றிப் பார்ப் போம்.

**மகரம்**

ராசிக்காரர்களுக்கு சனியின் பாதிப்பு பெரிதாக இருக் காது. வியாபாரத்திலுள்ளவர்கள் சோதனைகளைத் தாண்டி சாதனை படைப்பார்கள். ராகு கேது பெயர்ச்சி இவர்களுக்குச் சிலபல சோதனைகளைத் தரலாம். அதனால், இவர்கள் தங்களின் வீட்டில் பஞ்சமுக ஆஞ் சநேயரையும் பஞ்சமுக நாகத்தையும் வழிபடுவது நல்லது. குடும்பத்தினருடன் பிள்ளையார்பட்டி விநா யகரை வழிபட்டு வந்தால் சிறப்பான பலன்களைப் பெறுவீர்கள்.

**கும்பம்**

கும்ப ராசிக்காரர்களுக்கு 11ஆம் வீட்டில் நடக்கும் கிரக சேர்க்கைகள் சிறப்பாக இருப்பதால் லாபம் அபரிமிதமாக இருக்கும். முடிவுறாத பிரச்னைகள் முடிவுக்கு வரும். இவர்கள் தங்களின் வீடுகளில் விநாயகர் சிலையை வைத்து அறுகம்புல்லால் அர்ச்சனை செய்து வணங்கி வருவது சிறப்பான பலனையளிக்கும். அந்த அறுகம்புல்லைத் தண் ணீரில் ஊறவைத்து அந்தத் தண்ணீரை அருந்தி வந்தால் உடல் ஆரோக்கியமும் சிறப்பாக இருக் கும். எருக்கம் மலர்களால் அர்ச்சித்தால் கூடுதல் பலன்கள் கிடைக்கும்.

**மீனம்**

மீனம் ராசிக்காரர்களுக்கு 9ஆம் வீட்டிலும் 10ஆம் வீட்டிலும் இருக்கும் கிரகங்களின் மாறுதல்கள் அத்தனை சிறப்பாக இல்லை. அதனால் அவர்கள் தங்களின் உடல்நலனில் கவனம் கொள்வது நல் லது. இவர்கள் குளக்கரையிலிருக்கும் அரசமரத் தடி விநா யகரை வழிபட்டு வந்தால், உடல் ஆரோக்கியமும் சகல ஐஸ்வர்யங்களையும் பெறுவார்கள்.

**போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்**
**வாகன சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்வி விலை கோரல் - 2019/2020**

2019.09.04 ஆம் திகதி மேற்படி கேள்வி கோரலின் 2ஆவது பந்தியில் குறிப்பிடப் பட்ட விடயம் பின்வருமாறு திருத்தப்படு கின்றது. **“ விண்ணப்பங்களை 2019.09.05 முதல் 2019.09.19 வரை மு.ப 9.00 - பி.ப 3.00 மணிவரை யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலைச் செயலாளர் அறையில் பெற்றுக்கொள்ளலாம்.”**

தலைவர்,
**பிராந்திய பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## இன்றைய நாள்




**மேடம்:** சவால்களை ஏற்று செயல்பட எண்ணம் வளரும். தடைகளை தகர்த் தெறிவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.


**இடபம்:** உங்கள் பேச்சில் வசீகரம் உருவாகும். சமூகத்தில் நல்ல வர வேற்புப் பெறுவீர்கள். தொழில், வியா பாரம் செழிக்க கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும்.


**மிதுனம்:** உங்கள் கருத்துகளை மற்றவர் தவறாக உணர்ந்து கொள்வர். குடும்ப விடயங்களை பிறரிடம் பேச வேண்டாம். கூடுதல் முயற்சியினால் தொழில், வியாபார நடைமுறை சீராகும்.


**கடகம்:** சில விஷயங்களில் அதிருப்தி இருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறை வேறும். பணப்பரிவர்த்தனை அதி கரிக்கும். சீரான ஓய்வு ஆரோக்கியம் தரும்.


**சிம்மம்:** தவறு நிகழ்ந்த பணியை சரி செய்வீர்கள். குடும்ப உறுப்பினர் வாழ்த்துவர். தொழில், வியாபாரத்தில் போட்டியை சரி செய்வீர்கள். பணவரவு திருப்திகரமாகும்.


**கன்னி:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். லாப விகிதம் அதிகரிக்கும். குடும்ப விவகாரத்தில் சுமூகத் தீர்வு கிடைக்கும். இயலாதவர்களுக்கு உதவுவீர்கள்.


**துலாம்:** நண்பர் மாறுபட்ட குணத்து டன் பேசுவார். பொறுமை காப்பதால் நட்பினை பாதுகாக்கலாம். தொழிலில் கூடுதல் நேரம் பணிபுரிய வேண்டிய திருக்கும். முக்கிய பணவரவு கிடைக்க தாமதம் ஏற்படும்.


**விருச்சிகம்:** சுற்றுப்புற சூழல் மாறுபட்ட தாக இருக்கும். பொறுமையால் சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். முக்கிய செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.


**தனுசு:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். தன்னை சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் சிறப்பான முறையில் இருக்கும். பண பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு.


**மகரம்:** சிலர் சுயநலம் கருதி உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் அதிகம் பணி புரிவதால் எதிர்பார்த்த பண வரவு கிடைக்கும். ஒவ்வாத உணவு தவிர்ப்பதால் உடல் ஆரோக்கியமாகும்.


**கும்பம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி ஊக்கம் தரும். தொழில், வியா பாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும்.


**மீனம்:** செயல்களில் நிதானம் அவசியம். பேசும் வார்த்தை குளறுபடியா கலாம். தொழில், வியாபாரத்தில் குறை பாடுகளை உடனடியாக சரி செய்வது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்கள்
MATHS GROUP (ENGLISH MEDIUM/ TAMIL MEDIUM) CLASSES
(Grade 6 to O/L) - Mr.S.Tharshan (J.P)
077 454 0529 (National School Teacher)

வீடு வாடகைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கந்தர்மடம் பலாலி வீதியில் மேல் வீட்டின் கீழ்ப்பகுதி வாடகைக்கு உண்டு. அலுவலகம்/ குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 253 0865

பணிப்பெண் தேவை
யாழ் நகரிலுள்ள சிறியகுடும்பம் ஒன்றுக்கு தங்கிநின்றுவேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
075 039 9441

# சிக்கனம் தேவை

அதிகம் செலவழிக்காமல் எதையும் வீணடிக்காமல் இருப்பது சிக்கனம். சிக்கனத்துக்கும் கருமித்தனத்துக்கும் வேறுபாடுஇருக்கிறது. தேவைக்கு மட்டும் செலவிடுவது சிக்கனம் தேவைக்குக் கூடச் செலவிட மறுப்பது கருமித்தனம்.

சிக்கனக்காரர்கள் எதிலும் கவனமாக இருப்பார்கள். அவர்கள் எளிமையாக வாழப்பழக்கப்பட்ட வர்கள். சிக்கனத்தால் எத்தனையோ நன்மைகள் உண்டு. தீமை ஏதுமில்லை. உதாரிகள் வசதி மிக்க குடும்பத்தில் பிறந்திருந்தாலும் சிக்கிரமே கடனாளியாகி விடுவார்கள். வறுமைத் துன்பத்தை அனுபவிப்பார்கள். சிக்கனமாக வாழ்பவர்கள் ஒருபோதும் நெருக்கடிகளுக்கு உள்ளாவதில்லை.

பெரும்பாணக்காரர்கள் தங்களை எளிமையாகக் காட்டிக் கொள்ள முற்படுவார்கள். பகட்டுக்கு ஆசைப்படுபவர்களோ தங்கள் உண்மையான நிலையைவிட உயர்ந்த நிலையில் இருப்பதாகத் தங்களைக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் போலிகள் ஒருபோதும் அசலாவதில்லை. பொய் முகம் கிழிபடுகிற போது அவர்கள் வெட்கித் தலைகுனிய நேரிடும். சிக்கனமாய் வாழ்பவர்கள் தங்கள் வருவாய்க்குட்பட்டு செலவு செய்வதோடு, ஒரு பகுதியை சேமிக்கவும் செய்வார்கள். ஊதாரிகளோ தங்கள் வருவாய்க்கு மீறி செலவு செய்வதோடு கடனாளியாகவும் தங்குவதில்லை.

சிக்கனம் என்பது பணத்தில் மட்டுமா? தண்ணீரையும் மின் சக்தியையும் கூட சிக்கனப் படுத்தலாம். அது வீட்டுக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் நல்லது. தண்ணீர் மின்சக்தி பணம் இவற்றைப் போலவே நேரத்தையும் வார்த்தைகளையும் சிக்கனமாய் செலவு செய்யலாம்.

நேரத்தையும் பேச்சையும் அளவாகப் பயன் படுத்துகின்றவர் தலைமைக்குத் தகுதியானவராயிருப்பார். நேரத்தை வீணடிப்பவர் சூழ் நிலைகளையும் மனிதர்களையும் கட்டுப்படுத்தும் திறனற்றவராகவே இருப்பார். எனக்குச் சிக்கனமாக இருக்கத் தெரியாதே என்று சொல்பவர்கள் முதலில் சேமிக்கத்தொடங்க வேண்டும். சேமிக்கிறவர் நிச்சயம் சிக்கனமாக இருக்கக் கற்றுக் கொண்டு விடுவார்.

மாபெரும் கருத்தரங்கு
க.பொ.த (உ/த) பரீட்சைகளிற்கு தோற்றிய, உயர் கற்கைநெறி மாணவர்களுக்கான
யாழ் மண்ணில்
"பேண்தகு அபிவிருத்தியில் தொழில்சார் கற்கைகளும் பட்டக்கற்கைகளும்"
அனுமதி இலவசம்


- குறுங்கால பட்டக் கற்கைகள் (Top-up Degrees)
- பட்ட மேற்படிப்புக் கற்கைகள் (MA,MBA,M.Sc,M.Phill,Ph.D)
- தொழில் சார் கற்கைகள் (Professional Courses - ACCA,CIMA)
- ஆங்கில கற்கைகள் – IELTS (விசேட கட்டணச் சலுகையில் உடன் பதிவுகள்)
- வெளிநாட்டு விசாக்கள் ஐரோப்பா, சிங்கப்பூர்,மலேசியா, துபாய்க்கான கல்வி விசாக்கள் (Spot Admissions - No IELTS)

கருத்தமர்வில் பங்குபற்ற ஆர்வமுடையவர்கள் 14.09.2019 ஆம் திகதிக்குள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்க விபரங்களினை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் உங்கள் பதிவினை தொலைபேசி ஊடாகவோ அல்லது நேரிலோ உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு - இணைப்பாளர்கள்
தொழில் சார் கற்கைகள் செயலணி
T.P- 0214340229,0773914395, 0776021794

வாடகைக்கு/ குத்தகைக்கு
வவுனியா பண்டாரிக்குளத்தில் வெற்றிகரமாக இயங்கும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும். தொடர்புக்கு
077 606 2716


யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்


DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II
புதிய பிரிவுகள் ஆரம்பம் — உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு
யாழ்ப்பாணம் Mon,Wed,Fri- 8:30 a.m. Mon,Wed,Fri- 3:00 p.m. Sat,Sun - 2:00 p.m.
நெல்லியடி Tue,Thu - 3:30 p.m. Sat,Sun - 2:30 p.m.
சுன்னாகம் Mon,Wed,Fri- 11:30 a.m. Sat,Sun - 11:30 a.m.
கிளிநொச்சி Sat,Sun - 9:00 a.m.
சாவகச்சேரி Tue,Thu - 8:00 a.m.
சண்டிலிப்பாய் Mon,Wed,Fri- 1:30 p.m.
DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
IELTS # Unique Test Tips # 40 hrs with free 4mock exam # Latest course Material ( Book 12)
IELTS Life Skills திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403
M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470
கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) சாவகச்சேரி 021 227 0775
No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) சுன்னாகம் 021 224 1970
சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665
A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி 021 228 5655

STEP TO A WORLD-CLASS
BRITISH DEGREE
REGISTER FOR HND GET FREE LAPTOP i5 8Gen DELL
Leading to BEng (HONS) Pearson HND IN SOFTWARE ENGINEERING
Leading to BA (HONS) Pearson HND IN BUSINESS MANAGEMENT
LATEST
ONLY PLATINUM AWARD WINNER - 2019 (Pearson Annual Awards)
APPLY FOR SEPTEMBER INTAKE
CLASS SCHEDULE WEEK END / WEEK DAYS Further Details 0776974761
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna | Hotline : 021-7 572 572
www.esoft.lk
SRI LANKA'S LARGEST PRIVATE SECTOR HIGHER EDUCATION NETWORK

## மரண அறிவித்தல்

### செல்லையா தாமோதரம்பிள்ளை



பிறப்பு 25.12.1922 இறப்பு 10.09.2019

பளை, வீமன்காமத்தைப் (மாவிட்டபுரம்) பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கு தம்பையப் புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தாமோதரம்பிள்ளை 10.09.2019 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - காமாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பொன்னையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அரியமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சிதம்பரப்பிள்ளை, வேலாயுதம், சுப்பிரமணியம், விசயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குணரட்ணம், புனிதவதி தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நகுலேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற நகுலேஸ்வரன், மற்றும் ஞானேஸ்வரி (கமலா), விக்கினேஸ்வரி (குஞ்சு - ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (யோகு), மகேஸ்வரன் (நாதன் -ஜேர்மனி), முத்தையா (குஞ்சா-ஜேர்மனி), செல்வராசா (செல்லா - சுவிஸ்), சிவக்கொழுந்து (சிவா), கிருபானந்தன் (ஆனந்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீஸ்கந்தராஜா (கனடா), இராஜ்குமார், சிறிதரன் (ஜேர்மனி), வனஜா, ஞானேஸ்வரி (ஜேர்மனி), தர்சினி (ஜேர்மனி), வதனி (சுவிஸ்), கோகுலசிங்கம், கார்திகா (கவிதா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜனி (கனடா), சிறிதர் (சுவிஸ்), காலஞ்சென்ற மயூரி கிரிதரன் (இந்தியா), இரச்சந்திரன் (பவான் - ஜேர்மனி), மயூரன் (குட்டி - சிங்கப்பூர்), விஜி (சித்து), திலீப், தினோ (ஜேர்மனி), விஜிதா, விதுஷா, மேனுஜா, தேனுகன், தினேஷ், துவியன் (ஜேர்மனி), லக்சன், அட்சயன், அனன்யா (ஜேர்மனி), அபிராமி, அஸ்வினி, அஸ்விதா (சுவிஸ்), தனுசாந், கஜிரன், யாதவன், ரசிதா, பகீரதி, ரஜிவினி, அகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும், கருணிகா, யாருசன் (கனடா), துசியன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2019) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக வைரவர் அடைப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.

(CS/26006)

077 060 7108 (கிரி), 077 710 1146 (ஆனந்தி), 077 138 5445 (தினோ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
### இராமகிருஷ்ணன் பாலச்சந்திரன்

தோற்றம் 31.01.1955 — மறைவு 17.06.2019

17.06.2019 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 13.09.2019 வெள்ளிக்கிழமை கீரிமலையில் நடைபெற்று 14.09.2019 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத் தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கற்குளி வடக்கு,
சாவகச்சேரி

குடும்பத்தினர்
0766397956

## நெஞ்சைவிட்டகலாத ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 05 . 1968



மறைவு 26 . 08 . 2018

### அமரர் வசந்தராசபிள்ளை மோகன்

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டுகள் ஆனதே அப்பா!
இன்றும் நீங்கள் எங்களுடன் இருப்பது போல் தினமும்
உங்களை நாம் காண்கின்றோமே அப்பா!
எமக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்தீர்களே அப்பா!
திடீரென எம்மைத் தவிக்க விட்டுச் சென்றது ஏனோ?
செல்வதற்குப் பாதை தெரியாமல் நாம் தவிக்கின்றோமே அப்பா!
என்றும் உங்கள் நினைவுகளுடன் விழிநீர் சொரிகின்றோம் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரம்படி 2ஆம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.
077 516 8146

## கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
## சபைநிதி வேலைத் திட்டம் 2019 (கட்டம் IV)

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப் பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக் குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம்- 021-222-2700, 021-314-2841)இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2019.09.13 ஆம் திகதியிலிருந்து 2019.09.27ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2019.09.30 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கோரப்பட்ட வேலைகளில் **01ஆம் வேலைக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம்** கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து **63** நாள்களும், **மிகுதி வேலைகளுக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம்** கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து **49** நாள்களும் ஆகும்.
09. கேள்விபிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**புனர்நிர்மாண வேலைகள் (1-3வரையானது)**
**மீள் தாரிடல் வேலைத்திட்டம் (04 - 06 வரையானது)**

| இல | வேலை இலக்கம் மற்றும் வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | கேள்வி பிணை வைப்பு காலம் | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | **NP/14/41/(10)02/CF/2019-1**<br>திருநெல்வேலி மரக்கறிச் சந்தையின் படி புனரமைப்பு மற்றும் 1ஆம் மாடிக்கட்டட திருத்தம் - கட்டம் II | 4.07 | 2,000.00 | C8/C7 | 60,000.00 | 29.12.2019 | 90 நாள்கள் |
| 02 | **NP/14/41/(10)02/CF/2019-2**<br>கோண்டாவில் பொது நூலகத்தின் புனரமைப்பு மற்றும் தலைமை அலுவலக கலாச்சார மண்டபத்திற்கான திரைச்சீலையும், பாதுகாப்பு கிறிலும் தயாரித்துப் பொருத்துதல் | 0.75 | 2,000.00 | C9/C8 | 10,000.00 | 15.12.2019 | 60 நாள்கள் |
| 03 | **NP/14/41/(10)02/CF/2019-3**<br>கொக்குவில் இந்து மயானம் அழகுபடுத்தல் | 0.58 | 2,000.00 | C9/C8 | 8000.00 | 15.12.2019 | 60 நாள்கள் |
| 04 | **NP/14/41/(10)02/CF/2019/RT.1**<br>4.1 மணியம் தோட்டம் 5ஆம் குறுக்கு வீதி, அரியாலை<br>4.2 துரைவீதி,கடற்கரை வீதி, அரியாலை,<br>4.3 வீரபத்திரர் வீதி, துறைமுக வீதி, அரியாலை,<br>4.4 ஸ்ரீ முத்துவிநாயகர் வீதி, அரியாலை<br>4.5 கெனடி வீதி, கல்வியங்காடு,<br>4.6 பதிவாளர் வீதி, கல்வியங்காடு<br>4.7 கலைமகள் வீதி, கல்வியங்காடு<br>4.8 பலாலி வீதி, கிளை ஒழுங்கை, திருநெல்வேலி,<br>4.9 சந்திரசேகரப் பிள்ளையார் வீதி, கல்வியங்காடு<br>4.10 கட்டையாலடி இந்து மயான வீதி, திருச்செல்வம் வீதி, கோண்டாவில், | 1.93 | 2,000.00 | C9/C8 | 25,000.00 | 15.12.2019 | 90 நாள்கள் |
| 05 | **NP/14/41/(10)02/CF/2019/RT.2**<br>5.1 தலையாழி வைரவர் கோவில் வீதி, கொக்குவில்<br>5.2 வராகி அம்மன் உப ஒழுங்கை, கொக்குவில்,<br>5.3 சம்பியன் வீதி உப ஒழுங்கை,<br>5.4 சம்பியன் வீதி 4 ஆம் ஒழுங்கை, கொக்குவில்,<br>5.5 பொற்பதி வீதி, குறுக்கு ஒழுங்கை, கொக்குவில், | 0.45 | 2,000.00 | C9/C8 | 6000.00 | 15.12.2019 | 90 நாள்கள் |
| 06 | **NP/14/41/(10)02/CF/2019/RT.3**<br>6.1 ஆலடி வீதி மற்றும் உப ஒழுங்கை, கோண்டாவில்,<br>6.2 செருக்கப்புலம் வீதி, மற்றும் உப ஒழுங்கை,<br>6.3 வாமஸ் வீதி, வாமஸ் வீதி 1 ஆம், 2 ஆம் உப ஒழுங்கைகள் கோண்டாவில்,<br>6.4 சென் செபஸ்ரியார் வீதி, மற்றும் 2 ஆம், 3 ஆம் உப ஒழுங்கைகள் கோண்டாவில்<br>6.5 நெட்டிலிப்பாய் வீதி, 1 ஆம் ஒழுங்கை, மற்றும் ஞானவைரவர் வடக்கு ஒழுங்கை, கோண்டாவில் | 1.25 | 2,000.00 | C9/C8 | 15,000.00 | 15.12.2019 | 90 நாள்கள் |

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2019.09.24**ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. **10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

**2019.09.13**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் உதவியாளர் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பல் கட்டுதல் ஸ்தாபனத்துக்கு பெண் உதவியாளர் தேவை. மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். சம்பளம் தொலைபேசியில் பேசி தீர்க்கப்படும்.

**021 222 9053, 021 222 7893**

## MAJESTIC CINEPLEX
















மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999

CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

## Chundikuli Girls' College Jaffna

### Annual Prize Giving 2019

**Saturday, 14th September, 2019 at 9.00 a.m.**

Chief Guest

Mrs.Eesha Speldewinde
(Principal, CMS Ladies' College, Colombo-7)

Parents, old girls & well wishers are cordially invited

Principal,
Staff & Students



## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள்

**சனிக்கிழமை 14 ஆம் திகதியிலிருந்து திங்கட்கிழமை 16ஆம் திகதி வரை ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்தில்** அருள்வாக்கு கூறுவார்.

**15.09.2019 ஞாயிற்றுக்கிழமை** சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

அடியவர்கள் வந்து இறையருள் பெற்றுச்செல்க.

**அருள்வாக்கின் மூலம் திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாட்டு பயணத்தடை, குழந்தை பேறு, குடும்பப்பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வினை பெற்றுத்தருவார்.**

**பூஜை நேரம் - காலை 10.00 மணி, மாலை 5.00 மணி**

**குறிப்பு - கலாசார உடையுடன் வருகை தரவும்,**
**தொடர்பு - 021 221 9127, 077 801 2226**

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com. 0214931111

## பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் - 2019

**யா/ தம்பாட்டி அ.த.க. வித்தியாலயம், ஊர்காவற்றுறை**

**காலம் :- 2019.09.21 - சனிக்கிழமை**
**நேரம் :- மு.ப. 10.00 மணி**
**இடம் :- பாடசாலையின் பிரதான மண்டபம்**

பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C/32696)(11,17)

அதிபர் / தலைவர்.

## இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
13 . 06 . 1981



வேலவன் அடியில்
25 . 08 . 1999

### செல்வி திருமகள் கனகசபை

திதி-சதுர்த்தசி

தசாப்தங்கள் இரண்டு ஆன போதிலும்
தவியாய்த் தவிக்கின்றோம் உன் நினைவில்
திருமகளே உனதருமை உணர்கின்றோம் - நிதமும்
தரணியிலே உனை விஞ்சி உறவேது எம் மகளே!
சந்நிதியான் தேர்காண மகிழ்வுடனே சென்றாய்
எம் நிதியாம் உனை நாமும் தொலைத்தோமே அந்நாளில்
வேலவன் திருவடியில் அமைதி காண்பாய் எனவே
வேண்டி நிற்கின்றோம் அவன் பாதம் சரணடைந்தோம்

த.மு: 125, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
நி.மு: மீசாலை வடக்கு, மீசாலை.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்

## தைலான் காமராஜ்

**(முறிகண்டீஸ்வரர் ஆலய ஸ்தாபகரும், தர்மகர்த்தாவும், ஐங்கையன் சுவையூற்று உரிமையாளர்)**

**திதி:- பூரணை (13.09.2019)**

மண்ணில்
15.12.1966

விண்ணில்
06.09.2017



அப்பா என்றழைத்த எம் தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
நீங்கிடுமோ எம் துயரம் அப்பா!
நித்தமும் உம் நினைவால்
கண்கலங்கி வாடுகின்றோம்
உங்களை நினைத்து உங்கள் ஆசியுடன்
நித்தம் எம் பணியைத் தொடர்கின்றோம்

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டமானாறு
# ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய
## தேர்த்திருவிழா சிறப்புமலர்
## 13.09.2019

### ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வரலாற்றுச் சுருக்கம்

இலங்கைத் திருநாட்டில் அமைந்த சைவத் திருத்தலங்களில் வரலாற்றுச் சிறப்பும் திருவருட்தன்மையும் கோடானுகோடி பக்தர்களின் பக்திக்குரிய ஆலயமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் யாழ்.மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் சரித்திர தொடர்புடைய தொண்டைமானாறு எனும் வளம்மிக்க கிராமத்தில் அமைந்துள்ளது. உலகில் எவ்விடத்தி லும் காணப்படாத தனித்துவமும் தெய்வத்திருவருள் தன்மையும் புதுமைப் பொலிவும் கொண்டுள்ள இவ்வாலயத்தில் முருகப் பெருமானது திருவருளானது மிகுந்து பிரகா சித்துக் கொண்டிருக்கின்றது. கந்தப் பெருமானின் கருணை வெள்ளம் மடைதிறந்து பாய்கின்றது. அவரை நாடிவரும் அடியார்கள் மட்டுமன்றி ஆங்காங்கே இருந்து பக்தி வழிபாடு செய்வோரும் கருணைக் கடலில் மூழ்கி திருவருட் பிரசாதங்களை தினமும் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாலய மானது மூர்த்தி. தலம். தீர்த்தம் ஆகிய அபரித மார்க்கத்தைக் கொண்டு பூரணம் என்று கூறும் படியாக பத்திர சத்தி முகூர்த்தத்தில் பொலிந்த தன்மையிலுள் முருகன் அடியார் பக்த சிரோன்மணி செல்வச் சந்நிதி மேவிய பூரணனே எனக் கசிந்து பாடியுள்ளார்.

இவ்வாலயம் தெய்வீக கந்தபுராணத்துடன் தொடர்புடையாதலால் இதன் பழைமை அளவிடற்கரிதான தொன்மையைக் கொண்டுள்ளது புலனாகின்றது திருச்செந்தூர் பதியிலிருந்து கந்தப்பெருமான் வீரவாகுத்தேவரை மகேந்திர புரிக்கு சூரனிடத்து தூதனிப்பியதாகக் குறிப்பிட்டு தூதுவரான வீரவாகுத் தேவர் வட இலங்கையின் வல்லி நதிக்கரையில் (தற்போது ஆலயத்தின் மேற்குப் புறத்தே) உள்ள கல்லோடையில் (ஆலயத்தின் வட புறத்தே) காலடி பதித்துச் சூரனிடம் சென்றார். காலடி பதித்த பாதச்சுவடுகள் இன்றும் ஆலய உரிமையாளர்களால் பாதுகாக்கப்படுகின்றது. ஏராளமான பக்தர்கள் பார்வை யிட்டு வணங்கிச் செல்கின்றனர். சூரனிடத்துச் சென்று திரும்பிய வீரவாகுத் தேவர் சந்திக்கால மேற்பட்ட தன்மையினால் சந்திக்கால பூசைக்கடனை வல்லிநதிக்கரையில் செய்தார். இச்சந்திக்காலக்கடன் செய்த இடம் இன்று சந்நிதியாக மருவி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாக மிளிர்கின்றது. இவ்விடத்தில் கந்தப்பெருமானை வழிபாடு செய்த தேவலோக கந்தர்வரின் வரலாறு பக்தி பூர்வமானது.

தேவலோகத்தில் வியாழபகவானது கட்டளைக்கு ஒழுகத்தவறிய கந்தர்வரான ஜராவசு பகவானின் சாபத்துக்கு ஆளாகிப் பூமியில் பிறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கந்தர்வரான ஜராவசு பகவானிடம் தனக்கு சாபவிமோசனந் தருமாறு வேண்டுதல் செய்தபோது பகவான் சாபத்தை மாற்ற முடியாது என்றும் கதிர்காமக்காட்டுப் பகுதியில் யானையாக அவதரிக்கும் போது கதிர்காமக் கந்தனை தரிசிக்க வரும் சிகண்பு முனிவரால் விமோசனமளிக்கப்படு மென்று பணித்தருளினார். சாபம் பெற்ற ஜராவசு அக்காட்டில் யானையாக அவதரித்து பல அட்டகாசங்கள் செய்தது.

இது இவ்வாறிருக்கையில் தேவலோகத்தில் உள்ள சிகண்டி முனிவர் இசைப்பிரியனாக இசை நுணுக்கங்களை அறிய விருப்பமுடையோனாக முருகப் பெருமானிடம் வேண்டுதல் செய்தார். பெருமான் முத்தமிழ் வித்தரான அகத்தியர் தென்பொதிகையில் இருப்பதாகவும் அவரிடம் சென்று அறியுமாறு பணித் தருளினார். இதன் பிரகாரம் சிகண்டி முனிவர் பொதிகை சென்று அகத்தியரிடம் இசை நுணுக்கங்களைத் தெரிந்து கதிர்காமக் கந்தனை வழிபாடு செய்யும் நோக்கில் சீடர்களுடன் வந்து கொண்டிருக்கையில் ஜராகவசு என்னும் கந்தர்வரான யானை அவர்களைத்தாக்க முற்பட்டது. முனிவர் தனது ஞானத்திருஷ்டியினால் சாபத்தையும் விமோசனத்தையும் தெரிந்து முருகப் பெருமானை நினைத்து சண்முக மந்திரத்தை உச்சிசரித்து அருகில் இருந்து வெற்றிலையை நுள்ளி எடுத்து வேலாகச் சென்று அழிக்க விடுத்தார். வெற்றிலையானது கதிர்வேலாக மாறி யானையை வீழ்த்த அவ்விடத்தில் கந்தர்வன் தோன்றி தனது வரலாற்றைக் கூற முனிவர்களும் சீடர்களும் அபயம் அளித்து கதிர்காமம் கூட்டிச் சென்று வழிபட்டனர். பின்னர் சிகண்டி முனிவர் ஜராவசு கந்தர்வனிடம் இலங்கையின் வடபால் அமைந்த வல்லி நதிக்கரையில் வீரபாகு தேவர் வணங்கிய புனித இடத்துக்குச் சென்று முருகப்பெருமானை தியானித்து வழிபாடுகள் செய்யுமாறு பணித்தார். அதன் பிரகாரம் ஜராவசும் வல்லி நதிக்கரையில் தற்போது பூவரசு விருட்சம் அமைந்த இடத்தில் பெருமானைத் தியானித்து பக்தியுடன் மௌனப்பூசை வழிபாடு செய்து முத்தி நிலை பெற்றார். சிகண்டி முனிவர் ஜராவசுவின் சாபத்தைப் போக்கவிடுத்த வெற்றிலை இன்று பெருமான் வீதிவலம் வரும் வேளையில் கதிர்வேற் பெருமானின் நடுப்பாகத்தில் காட்சி தந்து பத்திர சத்தி முகூர்த்தகம் பரவசம் ஆகி பிரகாசிக்கின்றது ஜராவசு வழிபாடு செய்த இடத்தில் அமைந்த

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்.....

தொடர்ச்சி →

செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா இனிதே நடைபெற பிரார்த்திக்கின்றோம்

KIRUBA LEARNERS
கிருபா லேணர்ஸ்
KIRUBA LEARNERS
Govt.Approved A Grade Driving Trainig School
No.1 Driving Training School In North

தலைமைக் காரியாலயம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 071 4546 960
0777225292
DS.589 அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை




★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்

கிளைக் காரியாலயங்கள்:

யாழ்ப்பாணம்
227/6. கே.கே.எஸ் வீதி. சுன்னாகம். (மதவடி அருகில்) 021 224 2022. 071 4546 956
முதலாம் கட்டைச் சந்தி. பருத்தித்துறை. 021 492 3201. 071 4546 961
36. கச்சேரி நல்லூர் வீதி. (கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம். 021 222 6699. 076 722 5292
ஓம்பிளாசா. பருத்தித்துறை வீதி. ஆவரங்கால். 021 222 6688. 071 777 6969
கே.கே.எஸ் வீதி. தெல்லிப்பளைச் சந்தி. தெல்லிப்பளை. 021 224 3737. 071 4546 959
கண்டி வீதி. சாகவச்சேரி. (நீதிமன்றம் அருகில்) 021 227 0700. 071 4546 957
பிரதான வீதி. (பொலிஸ் நிலையம் முன்பாக). நெல்லியடி. 021 300 6550. 071 4546 958
182. சேர் பொன் இராமநாதன் வீதி. திருநெல்வேலி. 021 221 4488. 0777 227 740
காரைநகர் பிரதான வீதி. சித்தங்கேணி. 021 225 2500. 076 212 1299

வவுனியா
216. ஏ9. வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777. 0777 100 444

மன்னார்
94. பிரதான வீதி. மன்னார். 023 225 1656. 077 847 2732

கிளிநொச்சி
ஏ9 வீதி. கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505. 071 454 6955
புளியம்பழச்சந்தி. முல்லைத்தீவு வீதி. விசுவமடு. 021 320 1515. 077 8585 263
நாச்சிக்குடா சந்தி. மன்னார் வீதி. முழங்காவில். 021 300 6544. 070 333 6161
வாடியடி சந்தி. பூநகரி. 021 320 1818. 070 333 7171

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா சிறப்புமலர் - 13.09.2019

## வரலாறு தொடர்ச்சி

பூவரசு விருட்சம் அடியார்கள் பக்தி கொண்டு பூசித்து துன்பங்களை நீக்கும் தெய்வகத்தன்மையைக் கொண்டுள்ளது. இவ்வாலயத் தோற்றத்துக்குக் காரணமான ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஸ்தாபகரான மருதர் கதிர்காமரின் வரலாறும் இவ்வாறு பக்தி பூர்வமானது. வீரவாகுத்தேவரும் ஜராவசு கந்தர்வரும் பூஜித்து வழிபாடு செய்த இத்தலத்தில் மூன்றாம் ஆளாக அன்பாகப் பூசை செய்ய ஆளில்லை என்பதனால் தேவலோகத்தில் பணிவிடை செய்த மருதர் கதிர்காமரை இப்பகுதியில் பெருமான் தோற்றுவித்தார். இவ்வாறு தோற்றிய கதிர்காமர் நாள்தோறும் பூவரசு மரத்தடியில் முருகப்பெருமானை வணங்கியே தன் தொழிலை செய்து வந்தார். நாளடைவில் கதிர்காமரின் பரிபக்குவ நிலை உணர்ந்த பெருமான் அவன் முன் தோன்றி தனக்குப்பூசை செய்யுமாறு பணித்தார். கதிர்காமர் பதைபதைத்துத் தனக்குப் பூசை முறை தெரியாது என்று கதறியழவே கண்ணை மூடுமாறு பணித்து அவரை கதிர்காமம் அழைத்துச் சென்று கதிர்காமப்பூசை முறைகளைக் காண்பித்து வழியில் அவரது வரலாற்றையும் கூறி ஆலமிலையில் அமுது படைத்துப் பூசை செய்யுமாறு பணித்தருளினார். கதிர்காமரும் பக்தியுடன் பூசை வழிபாடு செய்தார். இந்நிலை தொடரவே ஆலயம் அமைத்து வாசலில் வலது பக்கத்தில் பெருமான் தோன்றி இடதுபக்கத்தில் கதிர்காமரை அமர்த்தி நடக்கவிருக்கும் முறைகளை விளக்கி பக்தியுடன் தொடர்ந்து பூசை செய்யவும் வேண்டிய வேளைகளில் சிரமங்களைப் போக்கி குறையின்றி நடத்தவும் அருள்பாலித்தார். கதிர்காமரும் தினமும் பூஜை வழிபாடு முடித்து இடது பக்கத்தில் அமர்ந்து தியானித்து வழிபாடு செய்ததுபோல அவரது சந்ததியினரும் இன்றும் அவ்வாறே பூஜை வழிபாடுகள் முடித்ததும் அமர்ந்து தியானித்து வேண்டுதல் செய்வது வழக்கமாகியுள்ளது. பெருமான் அனுக்கிரகத்தினால் ஆலயம் பொலிவு பெற்று அடியார்களின் நெஞ்சங்களிலும் குடிபுகுந்து சிறப்பாகி வருகின்றது. இவ்வாறு சிறப்பான ஆலயம் அமைந்த கிரமமான தொண்டமானாறு புராதன உன்னத சரித்திர பின்னணியைக் கொண்டுள்ளது. இவ்வாலயத்தின் மேற்குப்புறமாக அமைந்த வல்லிநதியான ஆறு பின்னால் அரசியலுடன் பின்னிப்பிணைந்து முன்பு கடலுடன் சங்கமித்த இந்நதியை அண்டிய பகுதி வல்லிப்பெருவெளியாக விளங்கி பின் வல்லை பெருவெளி என்றும் இந்நதியின் மேலே தென்புறத்தே அமைந்த பாலத்தை வல்லைப்பாலம் என்றும் கூறப்பட்டது. இந்த நிதியின் தொடுவாயில் தொண்டமான் என்னும் அரசன் நதியை வெட்டிக்கடலுடன் சங்கமிக்க விட்டதால் அது ஆறாகியதுடன் இவ் ஆற்றுப்பகுதியை தொண்டைமானாறு என்றும் அழைக்கப்பட்டது. கடல் நீருடன் தொடர்பு கொண்டதால் உப்புநீர் ஆற்றின் பகுதிகளுக்குச் சென்று கரணவாய் பகுதியில் உப்பு விளையல் ஆயிற்று. இந்த உப்புக்களை ஆற்று முனையில் சேமிக்க நாளடைவில் இக்கரை உப்புமால் எனப்பெயர் பெற்று வாணிபமும் சிறப்பானது. அக்காலத்தே ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரும் வணிகமுறையினால் இப்பகுதிக் காணிகளுக்குப் பதிவேடுகள் உண்டாக்கி தோம்பு என்னும் காணி உறுதிகளை ஏற்படுத்தினர். இத்தோம்பு உறுதிகளில் செல்வச்சந்நிதி ஆலய தோற்ற விவரங்கள் இருப்பதும் தொடர்ந்து ஆலயப் பதிவேடுகள் உண்டாகியதும் பதிவேடு முறையும் உருவாகியதால் திரு.மருதர் கதிர்காமருக்குச் செல்வச்சந்நிதி ஆலய தொடர்பு விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பழைமை வாய்ந்த பக்திக்குரிய ஆலயம் 1984 முதல் பல கஸ்டங்களை எதிர்நோக்கி 1986 இல் ஆலயம் பலத்த சேதம் ஆகி உடமைகளின்றி பூசைகளின்றி பூட்டிய நிலையில் இருந்தது. எனினும் பெருமான் திருவருளால் ஆலய உரிமையாளர்கள் அடியார்கள் அளித்த ஊக்கங்களினால் 1986 மகாகும்பாபிஷேகத்துடன் வழமையான பூசை வழிபாடுகள் ஆரம்பமாகித் தொடர்ந்து பல புனருத்தாரண பணிகள் பூர்த்தியாகி புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. ஆலயப் பணிகளும் அன்றாட வசதிகளும் முன்னேற்றமாகி வருவதோடு யாவரும் பரம திருப்தி பெறுகின்றனர்.

இவ்வாலயத்தில் தொன்று தொட்டு கதிர்காமக் கொடியேற்றத்தின்போது பெருமானை உழுத்தம்பிட்டு நிவேகித்து அனுப்புவதும் பின் தீர்த்தமாடிய பின் பயத்தம் துவயலும் இளநீரும் படைத்து வரவேற்பதும் இன்று பக்தியுடன் கொண்டாடும் வழிபாடுகளாக அமைந்துள்ளது. இவ்வூர் ஆண்டியப்பர் என்பவர் இவ்வாலயத்தில் முதல் முறையாகப் பூசை நேர்த்தியினைச் செய்தார். நாளடைவில் அடியார்கள் பலரும் நேர்த்திக்கடனை செய்து வருகின்றனர். இன்று நாட்டில் ஏற்பட்ட சமூக சூழ்நிலையால் வெளியூர், வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் பெருமான் ஆலயத்துக்கு வருகை தருவதுடன் ஆலயம் மேலோங்கி வருவதை உணர்ந்து பல்வேறு பங்களிப்புக்களைச் செய்து திருவருளைப் பெறுகின்றனர்.

சி.செல்வலிங்கம்
( செயலாளர்.)
செல்வச்சந்நிதி ஆலய நிர்வாக சபை.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய
## தேர்த்திருவிழா சிறப்புமலர் - 13.09.2019

சந்நிதியானின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.
துஷானி கிளாஸ் ஹவுஸ்
சகல விதமான ஹவுஸ் பேனிச்சர்ஸ்
பிற்றிங் வேலைகள்,
கிளாஸ் வகைகள், மெத்தை வகைகள்
அனைத்தையும் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்.
இல.114, பிரதான வீதி, நெல்லியடி.
021 226 3076

சந்நிதியானின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.
தீபா Theebaa Jewelery
நகை மாளிகை
ஓடர் நகைகள் தரமான 22 கரட் தங்கத்தில் குறித்த
தவணையில் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, நெல்லியடி. 077 664 8768

செல்வச் சந்நிதியானின் இரதோற்சவம் சிறக்க வாழ்த்துகின்றோம்
S.S.V.R. மல்ரி சென்ரர்
பலகை - தீராந்திவகை- கொங்கிறீற்கல்,
பூச்சாடிகள், ஓடு, கூரை சீற்வகை
Nilkamal பிளாஸ்ரிக் தளபாட வியாபாரம்
மற்றும் போக்குவரத்து சேவை.
றிப்பர் கன்ரர் Hiace வான் (A/C)
நாடவேண்டிய இடம்
S.S.V.R. மல்ரி சென்ரர்
நெடியகாடு, வல்வெட்டித்துறை. 077 654 0056

சந்நிதியானின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.
மனோகரன் ஹாட்வெயார்
உங்களுக்குத் தேவையான கட்டடப் பொருள்கள்,
பெயின்ற் வகைகள், PVC பைப், மாபிள் வகைகள்
என்பவற்றுடன் துவிச்சக்கர வண்டிகள், எலெக்ரிக்
பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிடலாம்.
சாவகச்சேரி வீதி, மந்திகை, புலோலி. தொ.பே : 021 226 4192

சந்நிதியானின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.
சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்
Green Leaf Cream House
T.P: 077 377 3197
N.M.M.V.Road, Nelliady, karaveddy.

சந்நிதியானின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.
Chithamparapillai
Book Depot CBD
Dealers in stationary
School Books, Printing items
and etc.....
No.60,64, Main Street, Nelliady.
Tel: 021 226 3223 Fax: 021 226 4155 Email: Sivamcbd@yahoo.com

சந்நிதியானின் தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.
அருள்நாயகி
சைவ உணவகம்
தரமானதும் சுவையானதுமான
சைவ உணவு வகைகளைப்
பெற்றுக்கொள்ள நாடவேண்டி இடம்
அருள்நாயகி சைவஉணவகம்.
பிரதான வீதி, நெல்லியடி. தொ.பே: 077 905 7749

AGN
MOBILE SHOP
main street, nelliady
agnmobileshop@gmail.com
agnmobileshop
077 343 0211, 077 604 2800, 021 433 0010

செல்வச்சந்நிதியான் திருவருள் யாவருக்கும் கிடைக்கட்டும்
நெல்லியடியில் பிரமாண்டமான புடைவை மாளிகை
விதம் விதமான சாறிவகைகள்,
சல்வார் துணிகள், சேட், ரீசேட்,
பஞ்சாபிகள் இன்னும் ஏராளமான
புடைவைகளுடன்
சிறுவர் முதல் அனைவருக்கும் ஏற்ற
பல வகையான ஆடைகளைப்
பெற்றிடலாம்.
செல்லமுத்தூஸ்
புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
தொ.பே 021 226 3238

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் செல்வச் சந்நிதியான் அருள்பாலிப்பாராக
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில் செய்து
கொடுக்கப்படும். தரம் நாடுவோர்
தவறாமல் நாடுமிடம்
சரவணா மகாலட்சுமி
தங்கமாடம்
இல. 97, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி
mail: Saravanajewelery@gmail.com No.021 226 2111

செல்வச் சந்நிதியான் தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
ஸ்ரீ சுசிலா
ஆபரண மாளிகை
Sri Susila
Gold House
(916 KDM) தங்க நகைகள்
மொத்தமாகக் கிடைக்கும்.
239, பிரதான வீதி, பருத்தித்துறை.
239, Main Street, Point Pedro.
T.P.No: 077 721 0206, 021 226 1003, 021 320 7437

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்னதானக் கந்தனே....!

சேயோன் என்றால் இளமையுடயவனாய்
செவ்வேள் என்றால் செந்நிறமுடையவனாய்
சரவணன் என்றால் சரவணப் பொய்கையில் பிறந்தவனாய்
வரதன் என்றால் வரமளிப்பவனாய்
குமரன் என்றால் என்றும் அவன் இளைஞனாய்

பழனி என்றால் பழமாக இருப்பவனாய்
என் சந்நிதி முருகன் என்றால்
பசித்தோர்க்கு அன்னமளிப்பவனாய்
விளங்கும் அன்னதானக் கந்தனே!

– வட்டூர் செல்வா.

# அன்பர்களை காவல் செய்ய அன்னதானக் கந்தன் தேரேறி வருகிறான்

**மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்**

ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவதுபோல வடபால் செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. அன்னதானக் கந்தனாக தொண்டமானாறு ஆற்றங்கரையினிலே அருளாட்சி செய்து வருகின்ற சந்நிதிக் கந்தனுக்கு இன்று பக்திபூர்வமாகத் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

இன்றைய தேர்த்திருவிழாவிலே ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் வேற்று நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான முருகபக்தர்கள் செல்வச் சந்நிதியில் கூடுகின்ற கண்கொள்ளாக் காட்சியைக் காணமுடிகின்றது. கதிர்காமத்தில் காவடிக் கந்தனாகவும் மாவிட்டபுரத்தில் அபிசேகக் கந்தனாகவும் நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற முருகப் பெருமான் செல்வச் சந்தியில் அன்னதானக் கந்தனாக ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

வட இலங்கையில் வடமராட்சிப் பகுதியில் தொண்டமானாறு என்னும் புராதன நகரம் உண்டு. கருணாகரத் தொண்டமான் எனும் சிற்றரசருடன் தொடர்பூண்ட நகரம். இந்தப் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. தொண்டமான் ஆற்றங்கரையில் கழிமுகத்துக்கு அண்மையில் செல்வச்சந்நிதி முருகன்கோயில் அமைந்துள்ளது.

செல்வச்சந்நிதி ஆலயம் சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை எனும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. கோயில் சூழலில் இயற்கை அழகு எல்லோரையும் ஈர்ப்பது மருத மரக்காடும் பாக்கு நீரைக் கடலும் மருங்கே காணும் வயலும் இடையே கிழக்கே இருக்கும் வல்லை வெளியும் திணை ஒழுக்கம் காட்டும்.

செல்வச்சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர். இந்த ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இரு ஆலயங்களிலும் வேதாகம முறையிலான வழிபாடு இல்லை. பூசையில் மந்திரங்கள் இடம்பெறுவதில்லை. வேறு எந்தக் கோயிலிலும் காணப்படாத சடங்கு முறையே சந்நிதியில் காணப்படுகின்றது. கதிர்காமத்து கொடியேற்ற நாளில் சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாகவும் பின்னர் கதிர்காமத்து தீர்த்தத் திருவிழாவன்று சந்நிதி திரும்பி வருவதாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன.

ஒருநாள் இரவு முருகன், பூசாரியார் கதிர்காமரை நித்திரையில் இருந்து எழுப்பி அப்பா நான் பாதயாத்திரையாக வந்தமையால் பசி, தாகம் அதிகரித்துள்ளது. ஏதும் உண்பதற்குக் கொடு என்று கேட்டாராம். கதிர்காமரும் நான் தங்களுக்கு அமுது படைக்க இவ்வேளை எங்கு போவேன் என்று மனம் நொந்தார்.

உன்னிடம் இருக்கும் சிறிதளவான பயற்றை துவைத்து இளநீரும் தா என்று கேட்டு வாங்கி முருகன் திருவமுது செய்தார். இன்றும் அவ்விதமாக பயற்றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத்திலிருந்து திரும்பி வருகின்ற முருகனுக்கு பூசைக்கு படையல் செய்து வருவது நடைமுறையில் உள்ளது.

செல்வச்சந்நிதி சூழலிலே காணப்பட்ட மடங்கள் சில சிதைந்த நிலையில் இருக்கின்றன. அந்தக் காலங்களில் அம்மடங்களிலே அடியார்கள் தங்கவும் அன்னதானம் நிறைவேற்றவும் வசதியாக அமைந்தன. இன்றும் சந்நிதியான் ஆச்சிரமம், ஆனந்தா ஆச்சிரமம் போன்ற மடங்கள் அந்தப் பணியை நிறைவேற்றி வருகின்றன.

சந்நிதி பூசை நேரங்களில் ஒலிக்கும் பறைமேளம் அன்பர்களை பரவசப்படுத்தும். நிறைந்த கற்பூர ஒளியிலும் செறிந்த புகை மண்டல நடுவிலே மின்னல் போல் ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப்படாதார் எவருமில்லை என்றே கூறலாம். சந்நிதி மூலஸ்தானத்தில் வேலே காட்சியளித்து எம்மை ஆட்சி செய்கின்றது.

மருதர் கதிர்காமராலே வணங்கப்பட்ட வேல் கருவறையில் இறையருளை பொழிந்தவண்ணமாகவே உள்ளது. வீரவேலாக, விண்ணோர் சிறைமீட்ட தீரவேலாக, உமையவள் ஈய்ந்துவந்த ஞானவேலாக சந்நிதிக் கோயிலில் எழுந்தருளி அருளாட்சி புரியும் வேலுக்குத்தான் எத்தனை வல்லமை, எத்தனை மகிமை.

எந்நிதியும் தருவான் சந்நிதியான் என அவன் திருப்பாதத்தை பற்றி, ஈழத்தமிழ் மக்கள் இன்று வேலவன் ஆரோகணித்து வரும் திருத்தேரை வடம் பற்றி வலம் வந்து வாழ்வு கேட்டு நிற்கின்றனர். நிரந்தரமான தீர்வை தந்து தேசத்தில் வாழ்விக்க வேண்டும் என மன்றாடி நிற்கின்றனர்.

## இரதமேறும் சந்நிதியானே எம்மக்களுக்காக இரங்கிடு

ஆற்றங்கரைதனில் வீற்றிருக்கும் சந்நிதி வாழ் முருகா!
அருள் வேண்டி வருவோர்க்கு வரமருளும் முருகா!
அடியவர்களுக்கு அமுதளிக்கும் அன்னதானக் கந்தா!
பச்சைமயில் ஏறிவரும் பாலமுருகா!
பரமனுக்கு உபதேசம் செய்த பாலமுருகா!
நாட்டில் நிம்மதியோ இன்னும் நிலைபெறவில்லை
நல்லாட்சிதனில் இனப்பிரச்சினை, கைதிகள் விடுதலை,
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கதை தொடர்கிறது
இனிதே தீர்வு வொன்று மலர்ந்திட – இன்று
இரதமேறும் சந்நிதியானே எம்மக்களுக்காக இரங்கிடு

- [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நீதி கிட்ட வாய்ப்பில்லை

இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வாவை நியமிப்பது இலங்கையின் உள்நாட்டு விவகாரம். இதில் வெளிச்சக்திகளின் தலையீடு தேவையற்றது, அனாவசியமானது இவ்வாறு ஐ.நா மனித உரிமைகள் சபையில் அழுத்தம் திருத்தமாக அறிவித்துள்ளது இலங்கை.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 42ஆவது அமர்வு ஜெனிவாவில் இடம்பெற்று வருகிறது. இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் கடந்த செவ்வாயன்று கூட்டறிக்கையொன்றை விடுத்திருந்தன. அதில், இராணுவத் தளபதியாக சவேந்திரவை நியமித்தமைக்கு மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட கவலையில் பங்கேற்பதாகத் தெரிவித்திருந்தன. இதற்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பதில் வழங்குகையிலேயே இவ்வாறு தெரிவித்து, சவேந்திரவின் நியமனத்தை நியாயப்படுத்தியுள்ளார் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி ஏ.எல்.ஏ.அஸீஸ். சவேந்திரவின் நியமனத்துக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள நியாயமே இறுதிப் போர் விவகாரத்தில் ஈழத் தமிழர்களுக்கான இலங்கையின் தீர்ப்பு என்பது வெள்ளிடைமலை.

சவேந்திர சில்வா, தமிழீழ விடுதலைப்புலிகளுடனான இறுதிப் போரின்போது, 58ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டிருந்தார். இவருக்கு எதிராக பன்னாட்டு மட்டத்தில் போர்க்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் சவேந்திரவின் நியமனத்துக்கு இலங்கை சொல்லியுள்ள பதில் இறுதிப்போருக்கு இங்கு நியாயம் கிடைக்காது என்பதையே கட்டியம் சொல்கிறது.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின் போது, இலங்கையில் இடம்பெற்றவை இனப்படுகொலைதான் என்று இடித்துரைக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை, 2015ஆம் ஆண்டு பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்பவற்றின் கீழ் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்தது. இதற்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கை இதுகாலும் இந்தத் தீர்மானத்தின் மட்டில் இதய சுத்தியுடன் நடந்து கொள்ளவில்லை.

இந்த வருடம் மார்ச் மாதம் இடம்பெற்ற கூட்டத் தொடரிலும், இலங்கைக்கு மேலும் இரு வருடகாலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்பவை தொடர்பில் ஓர் அறிக்கையையும் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் விரிவான ஓர் அறிக்கையையும் இலங்கை வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை உத்தரவிட்டுள்ளது.

ஆக, இலங்கையின் சார்பாக வெளியிடப்படும் இந்த அறிக்கைகள் சிறுபான்மையினருக்கு நீதியைக் கொண்டுவருவதாக மட்டும் இருக்காது. இதற்கு சவேந்திரவின் நியமனத்துக்கு ஏ.எல்.ஏ.அஸீஸ் வழங்கிய பதிலே சான்று.



# சிங்கள அரசியல்வாதிகளை நம்புவதால் பயன் இல்லை

இந்துமதி

**இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பது தமிழர்களுக்குத் தனி நாட்டைப் பிரித்துக்கொடுப்பதாகு மென பெரும்பாலான சிங்கள மக்கள் கருதுகின்றனர். அவர்கள் தவறாக வழிநடத்தப்படுவதே இதற்கான பிரதான காரணமாகும். அரசியல்வாதிகள் மக்களிடமிருந்து அந்த தவறான சிந்தனையைப் போக்குவதற்கு முயற்சி செய்வதில்லை.**

சிங்கள அரசியல்வாதிகள் அரைத்த மாவையே அரைப்பது போன்று கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். தாம் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் சிங்கள மக்கள குழப்பமடையாத வகையில் பதவியேற்ற ஆறுமாதங்களுக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக அமைச்சரும் ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவாரென எதிர்பார்க்கப்படுபவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டமைப்புத் தலைவர்களுடான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆனால் தீர்வு எட்டப்படும் விதம் தொடர்பாக அவர் எதையும் தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

### தீர்வு வரக்கூடாது என்ற பிடிவாதம்

தமிழர்களுக்கு எவ்வித தீர்வையும் வழங்கக்கூடாது என்பதில் சிங்கள இனவாதிகளும், பௌத்த தேரர்களும் குறியாகச் செயற்படுகின்றனர். தீர்வு விடயத்தில் இவர்களை இணங்க வைப்பது இலகுவான காரியமாகத் தெரியவில்லை. ஆகவே சஜித் கூறியதைத் தமிழர்கள் முற்றாக நம்பிக் கொண்டிருக்க முடியாது. காரியம் நடக்கும் வரையில் அவர் கூறியவற்றை வெறும் வார்த்தைகளாகவே கருத வேண்டும். எனென்றால் சம்பிக்க ரணவக்க போன்ற இனவாதிகள் இனப்பிரச்சினையென ஒன்றுமே இந்த நாட்டில் இல்லையெனக் கூறிவருவதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது தமிழர்களுக்குத்தனிநாட்டைப் பிரித்துக்கொடுப்பதாகுமென பெரும்பாலான சிங்கள மக்கள் கருதுகின்றனர். அவர்கள் தவறாக வழிநடத்தப்படுவதே இதற்கான பிரதான காரணமாகும். அரசியல்வாதிகள் மக்களிடமிருந்து அந்த தவறான சிந்தனையைப் போக்குவதற்கு முயற்சி செய்வதில்லை. ஆனால், தேர்தல் வேளைகளில் மட்டுமே தீர்வு, அதிகாரப் பகிர்வு என்றெல்லாம் வார்த்தையை அளக்கின்றனர். சஜித் பிரேமதாசவும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதைக் காட்டியுள்ளார்.

இதேவேளை- வடக்கு- கிழக்கு மாகாணங்கள் ஒருபோதுமே இணைய மாட்டாதெனவும் தமிழர்கள் ஒருபோதுமே சமஷ்டியை அனுபவிக்க முடியாதெனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் அரச தலைவர் வேட்பாளருமாகிய அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். சிங்கள மக்களைக் கவர வேண்டுமானால் அவர் அப்படித்தான் கூற வேண்டும். ஆனால் தமிழர்கள் மத்தியில் கூறுவதற்கு அவருக்குத் துணிவு இருந்திருக்க வேண்டும்.

### அபிவிருத்தி பற்றியே பேச்சு

இதைவிட ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சிலர், தமிழர் பகுதிகளின் அபிவிருத்தி தொடர்பாகவே பேசி வருகின்றனர். போர் நிறைவு பெற்றதன் பின்னரும் தமிழர்கள் பல்வேறு அவலங்களை எதிர்கொண்டுவருகின்றனர். இவற்றுக்கான தீர்வுதொடர்பாக அரசினால் எதையுமே உருப்படியாக மேற்கொள்ள முடியவில்லை. ரணில் விக்கிரமசிங்க கூட சில விடயங்களைப் பொறுத்தவரையில் நம்ப முடியாத ஒருவராகவே தமிழ் மக்களால் கருதப்படுகின்றார். புதிய அரசமைப்பின் உருவாக்கம், கல்முனை விவகாரம் ஆகியன தொடர்பாக ரணில் வழங்கிய வாக்குறுதிகள் பொய்த்துப் போன நிலையில் தமிழர்கள் எவ்வாறு அவரை நம்புவார்கள்?

பசியால் துடிக்கும் ஒருவனைச் சாவின் பிடியிலிருந்து மீட்க வேண்டுமானால் உடனடியாக அவனுக்குத் தேவையான உணவுகளை வழங்க வேண்டும். இதை விடுத்து விலையுயர்ந்த ஆடைகளை அவனுக்குத் தேவையான உணவுகளை வழங்க வேண்டும். இதை விடுத்து விலையுயர்ந்த ஆடைகளை அவனுக்கு அணிவிப்பதால் எந்தவிதமான பயனும் கிடைத்துவிடமாட்டாது. இதைப்போன்றுதான் தமிழர் பகுதிகளில் வீதிகளை அமைப்பதாலும் பாடசாலைகளுக்கு சுற்றுமதில் அமைப்பதாலும் விளையாட்டு மைதானங்களை உருவாக்குவதாலும் புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நடுவதாலும் தமிழர்களின் அவலங்களைத் தீர்த்து வைக்க முடியாது. அபிவிருத்திப் பணிகளும் வேண்டும். அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வும் வழங்கப்பட வேண்டும்.

தமிழர்கள் என்னதான் போராட்டங்கள் நடத்தினாலும் பேரணிகளை ஒழுங்கு செய்தாலும் தென்பகுதியிலிருந்துதான் அவர்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும். ஏனென்றால் அதிகார இயந்திரம் தெற்கில்தான் நிலைகொண்டிருக்கின்றது என்பதை நாம் மறந்துவிட முடியாது. தென்னிலங்கை ஆட்சியாளர்கள் இடுகின்ற பிச்சையைத்தான் தமிழர்கள் ஏற்க வேண்டுமென்பது அவர்களது தலைவிதியாகவே மாறிவிட்டது. இதை அழிப்பதற்கான வல்லமை எந்தத் தமிழ் அரசியல்வாதியிடமும் கிடையாது. தம்மிடையே ஒற்றுமையைக் கட்டிக்காக்கத் தெரியாத இவர்கள், தமிழர்களைக் காப்பாற்றப் போவதாகக் கூறுவதை வெறும் வேடிக்கையாக மட்டுமே கொள்ள வேண்டும்.

### அபிவிருத்தி என்ற மாயை உதவாது

வெறும் வாக்குறுதிகளும் அபிவிருத்தி என்ற மாயையும் தமிழர்களுக்கு ஒதுபோதுமே உதவ மாட்டாது. அதிலும் தேர்தல் வேளைகளில் வழங்கப்படுகின்ற வாக்குறுதிகளால் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை. மிகவும் மோசமானதொரு கட்டத்தை எட்டி நிற்கின்ற தமிழர்கள் எதிலும் கவனமாகச் செயற்படுதல் அவசியமானதாகும். தமிழ்த் தலைமைகள் தம்மை நம்பியிருக்கும் மக்களுக்கு நல்வழி காட்டவேண்டும். சுயநல அரசியலால் தமிழ் இனத்துக்கு எதுவுமே கிடைத்துவிடப் போவதில்லை. அதுமட்டுமல்லாது தென்பகுதி அரசியல்வாதிகளை முழுக்க முழுக்க நம்புவது ஆபத்தானதாகவே முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரச் சிக்கலை எப்படி எதிர்கொள்கிறது ரஷ்யா?



விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் துறையில் சுணக்கம், பொருளாதாரத்தில் மந்த நிலை இவைதான் இன்று உலகின் பெரும்பாலான நாடுகளின் பொதுவான பிரச்சினைகள். இவற்றை ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையில் அணுகுகின்றன. பொருளாதார அளவில் உலகின் எட்டாவது இடத்தில் இருக்கும் ரஷ்யா என்ன செய்கிறது?

### துணிச்சல் நடவடிக்கை

மிகவும் துணிச்சலான ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கிறது ரஷ்யா. அரசு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க, தன்னுடைய பாதீட்டில் எல்லா இனங்களிலும் 10 சதவீத அளவுக்கு குறைத்துக்கொள்ள துணிகரமாக முடிவு செய்திருக்கிறது.

பணவீக்க விகிதத்துக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் தொடர்பு இருக்கிறது என்று கூறுகிறார் பிரிட்டன் பொருளாதார மேதை ஜான் மேனார்ட் கீன்ஸ். 'வேலைவாய்ப்பை ஊக்குவிக்க வேண்டும் என்றால் பணவீக்கத்தை அனுமதிக்க வேண்டும், அரசு தன்னுடைய செலவை அதிகப்படுத்தினால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும், வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்று அவர் கூறுகிறார். ஆனால், பணவீக்கமும் இருந்து வேலையில்லாத் திண்டாட்டமும் தொடரும் நிலையே இந்தியாபோன்றநாடுகளில்நிலவுகிறது. இந்த நிலையில், பணவீக்க விகிதத்தை ஓரளவுக்குமேல் அனுமதித்தால் நிலமை கையை மீறிப் போய் விடும் என்பதால் ரஷ்யா மாற்றி யோசிக்கிறது. ஓரிரு ஆண்டுகளுக்குப் பத்தியமாக இருந்தால் பின்னர் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தி விடலாம் என்று ரஷ்யப் பொருளாதார நிபுணர்கள் அரசுக்கு யோசனை கூறியுள்ளனர். அரசும் அதை ஏற்றுக் கொண்டுள்ளது.

### முன்னாய்த்தம்

ரஷ்யாவில் எப்போதும் அடுத்த 3 ஆண்டுகளுக்கு பாதீடு தயாரித்துவிடுவார்கள். அடுத்த 2 ஆண்டுகளுக்கான பாதீட்டில்தான் 10 வீதம் குறைத்துக் கொள்ள முன்வந்திருக்கிறார்கள். ரஷ்ய மக்களின் நுகர்வுக் கலாசாரத்தால் பொருளாதாரம் மீட்சி பெறும் என்ற எதிர்பார்ப்பில் முன்னர் இருந்த போதிலும், பொருளாதார நெருக்கடி இருப்பதால் செலவுகளை எல்லாத் துறைகளிலும் குறைத்துக்கொள்வது என்று தீர்க்கமாக முடிவு செய்திருக் கிறார்கள்.

புதிய திருத்தப்பட்ட பாதீட்டின்படி இராணுவ வீரர்களுக்கான ஊதியம் அடுத்த ஆண்டு உயராது. எதிர்காலத்தில் ஓய்வுபெறுவோருக்கான ஓய்வூதிய நிதியத்துக்குக் குறைந்த அளவே சந்தா செலுத்தப்படும். அந்த நிதி இப்போதுள்ள ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் தருவதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும். ரஷ்ய மக்கள்தொகையில் முதியோர்தான் அதிகம். அதனால் அதிக நிதி ஓய்வூதியத்துக்கே செலவாகிறது.

ரஷ்ய அரசின் வருவாயில் 50 வீதம், கச்சா பெற்றோலிய எண்ணெய், எரிவாயு ஆகியவற்றிலிருந்தே கிடைத்து விடுகிறது. கடந்த சில ஆண்டுகளாகவே ரஷ்யர்களின் உற்பத்தித் திறனைவிட அதிக அளவில் ஊதிய உயர்வு கிடைத்துக்கொண்டே வந்தது. இதனால் புட்டினுக்கு மக்களிடையே செல்வாக்கு அதிகரித்தது. ஆனால் அது பொருளாதாரத்துக்கு பாதிப்பாக அமைந்துவிட்டது. இப்போது ஊதியத்தை முடக்கும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவை விட ரஷ்யாவின் பொருளாதாரவளர்ச்சி வேகம்குறைவாகவே இருக்கிறது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

### மந்த நிலை

நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில், ரஷ்யாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (ஜி.டி.பி.) 1.2 வீதம் ஆகவும் அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 2.5 வீதம் ஆகவும் வளர்ச்சி அடைந்தது.

சைபீரிய பாலைவனத்தில் உள்ள ரயில் பாதையை நவீனப்படுத்துவது உள்ளிட்ட அடித்தளக் கட்டமைப்புகளை ஏற்படுத்த, நாட்டின் கையிருப்பு செல்வ நிதியத்திலிருந்து 171 பில்லியன் டொலர் தொகை செலவிடப்படும் என்று அந்த நாட்டு அரச தலைவர் விளாடிமீர்புட்டின் முன்னர் அறிவித்திருந்தார். ஆனால் அறிவித்தபடி ஏதும் செய்யவில்லை. எனவே பொருளாதாரம் மீட்சி பெறவில்லை.

ரஷ்ய மக்கள் தாராளமாகச் செலவு செய்து, பொருளாதாரத்தைநிமிர்த்திவிடுவார்கள் என்று இனியும் எதிர்பார்க்கக் கூடாது என்று முடிவுசெய்து, வளர்ச்சித் திட்ட வடிவத்தையே மாற்றிவிட்டார் தலைமைப் பொருளாதார அறிஞர் விளாடிமீர் திகோமிரோவ். விலைவாசியைக் குறைப்பதே தங்களுடைய முதல் நோக்கம் என்று ரஷ்ய மத்திய வங்கியும் அரசும் அறிவித்துள்ளன.

### கடன் வேண்டாம்

வெளிநாடுகளிடம் கடன் வாங்குவதை புட்டின் அறவே வெறுக்கிறார். மேற்கத்திய நாடுகளிடம் முன்பு கடன் வாங்கி விட்டுப் பட்ட இன்னல்கள் போதும் என்கிறார் அவர். 'பொருளாதார மந்த நிலை ஏற்பட்டவுடனேயே சொந்தமாக நிதி திரட்ட முடியார்விட்டால் வெளிநாடுகளிடமிருந்தாவது கடன் வாங்கி வளர்ச்சியைப் பராமரிக்க நினைப்பதுதான் வழக்கம். ஆனால் நாங்கள் நீண்ட கால நன்மைக்காகச் சில தியாகங்களைச் செய்ய முடிவு செய்திருக்கிறோம்' என்று விளக்கினார் திகோமிரோவ்.

ஆனால் இந்த முடிவு புதிதல்ல. ஏற்கனவே 1990களில் போலந்து போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டதுதான். உள்நாட்டு ஆதாரங்களைக் கொண்டே பொருளாதார வளர்ச்சி பெறுவது என்ற அப்போதைய முடிவால் நாட்டின் வளர்ச்சி வேகம் குறைவாகவே இருந்தாலும், வெளிநாட்டுச் சந்தைகளால் அவற்றைச் சேதப்படுத்த முடியவில்லை. சில நாடுகளில் அப்போது பொருளாதாரச்சுணக்கம் கூடசிறிதுகாலத்துக்குஏற்பட்டது. ஆனால், வெகு விரைவிலேயே பொருளாதாரம் புத்துயிர்பெற்றுமுன்னேற்றம்ஏற்பட்டது. இப்போதைய தங்கள் முடிவால் பொருளாதார வளர்ச்சி 3 வீதம் ஆகத்தான் சில ஆண்டுகளுக்கு இருக்கும், ஆனால், பணவீக்க விகிதம் இப்போதுள்ள 6 வீதத்திலிருந்து 5.5 வீதம் ஆகவோ, அல்லது 4.5 வீதம் ஆகவோ குறைந்துவிடும் என்று ரஷ்ய அரசு மக்களுக்குத் தெரிவித்துள்ளது.

## ஆசிரியருக்கான கடிதம்

# குறை தீர்க்க முன் வரவேண்டும்

வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதிக்குக் கிழக்குப் பக்கமாக உள்ள சிமிழ் கண்ணகைபுரம் வீதி நீண்டகாலமாக எவரும் கவனிப்பார் இன்றி மிகவும் மோசமான முறையில் பயணிகள் பிரயாணிக்க முடியாத நிலையில் குண்டும் குழியுமான நிலையில் உள்ளது. (சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட இந்த வீதியால் தினமும் பல நூற்றுக்கணக்கானவர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் கடலுணவு வியாபாரிகள் பயணிப்பதுடன் அயல் கிராமமான கண்ணகைபுர கிராம மக்கள் அம்பன், குடத்தனை, மாசேரி, தென்னை பனை வளக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் பயணிப்போர் எனப் பலதரப்பட்டவர்கள் பிரயாணம் செய்வதுடன் வட வரணி மக்களின் மனங்களில் என்றும் அருள்பாலித்து அனைவருக்கும் அருள் பாலிக்கும் சிமிழ் கண்ணகை அம்மன் ஆலயமும் உள்ளது. போர் முடிந்து பத்து வருடமாகியும் சரி, போர்க் காலத்திலும் சரி இந்த வீதியை எவரும் இதுவரை சீர்செய்ய முன்வராதது மிகவும் கவலைக்குரிய விடயமே!

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதி மீது அக்கறை கொண்டு, எதிர்வரும் நாள்களில் கவனம் செலுத்தி, பிரயாணிகள் குறை தீர்க்க முன்வரவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் சார்பாகவும் பிரயாணிகள் சார்பாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றேன்.

*அ. அன்பு, வரணி.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வித்துறைக் குறைபாடு பற்றி ஆளுநருடன் பேச்சு

யாழ்ப்பாணம், செப். 13
வடக்கில் கல்வித் துறையிலுள்ள குறைபாடுகள் பற்றியும் அவற்றைத் தீர்ப்பது பற்றியும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கைதடியிலுள்ள முதலமைச்சர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலர், உதவிச் செயலர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் அதில் பங்கேற்றிருந்தனர்.

வடக்கு மாகாணத்தின் சில பாடசாலைகளில் நிகழும் அதிபர்களின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது இரு வாரங்களில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

பாடசாலைகளில் மாணவர் அனுமதிக்காகச் சில அதிபர்கள் முறைகேடாக பணம் அறவிடுகின்றமை பற்றித் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஆளுநர், மாணவர் அனுமதிக்காகப் பணம் பெறுங்கொண்ட சகல அதிபர்கள் தொடர்பாகவும், தான் விவரம் கோரியுள்ளேன் என்று தெரிவித்தார்.

பாடசாலைகளில் அபிவிருத்திச் சங்கச் செயற்பாடுகளில் சில அதிபர்களின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடிய போது ஒரு பிரபல பாடசாலையில் 4 வருடங்களுக்கு மேல் நிர்வாகம் புதிப்பிக்கப்படாமல் இயங்குவது தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்குத் துரித விசாரணை நடவடிக்கைகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

முறையற்ற இடமாற்றங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கு ஒருமாத காலத்துள் தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

போர்க்காலச் சூழலில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறி மீண்டும் நியமனம் பெற்றுக்கொண்ட ஆசிரியர்களுக்கு நீக்கப்பட்ட காலத்துக்குரிய சம்பள ஏற்றங்களை சாதகமாகப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஓய்வூதிய சலுகை பெறாத ஆசிரியர்களின் விவரம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ஆனையிறவு உப்பை பொதியிடுகின்ற தொழிற்சாலையை அரியாலையில் அமைக்கவும்

யாழ்ப்பாணம், செப். 13
நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் உப்பு பொதியிடும் தொழிற்சாலை ஒன்றை நிறுவி பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சபையின் 18ஆவது அமர்வு சபா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்.கௌசல்யா மேற்குறித்த தீர்மானத்தை முன்மொழிந்தார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் முகமாக உப்பு பொதியிடும் தொழிற்சாலை நிறுவவேண்டும். சபைக்குச் சொந்தமான காணி அரியாலையில் உள்ளது. அங்கு குறித்த தொழிற்சாலையை நிறுவி ஆனையிறவு உப்பளத்திலிருந்து உப்புக்களைப் பெற்று அங்கு பொதி செய்வதன் மூலமாக அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியும் என்று உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, நல்லூர்ப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட உணவகங்கள், திருமண மண்டபங்கள் போன்ற உணவு கையாளும் இடங்களில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்து, அவற்றுக்கு மாற்றீடாக வாழையிலை பயன்பாட்டைக் கொண்டு வர வேண்டும்.

**2020 அனுமதியில் நிபந்தனை வேண்டும்**

தற்போதே அதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதன் ஊடாகவும் 2020ஆம் ஆண்டு சபை குறித்த இடங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கும்போது, பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தி அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டும். பொலித்தீன் பாவனைக்கு மாற்றீடாக வாழை இலை பயன்பாடு வருமாக இருப்பின் அதனூடாக வாழைப் பயிர்ச் செய்கை செய்யும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் அதிகரிக்க முடியும்- என்றார். (த-37)



## முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவி

சாவகச்சேரி, செப்.13
தென்மராட்சிப் பிரதேசத்தில் வதியும் இருவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மறுவாழ்வு அமைச்சால் தச்சுத் தொழில் பட்டறைகள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.


மறுவாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளான கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இருவருக்கே இந்த உதவி வழங்கப்பட்டது. பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வனால் இந்தப் பட்டறைகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. (ஐ-9)



## உந்துருளி விபத்தில் இளைஞன் காயம்

சாவகச்சேரி, செப். 13
வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் உந்துருளி மோதியதில் அதில் பயணித்த இளைஞன் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலை வடக்கில் உள்ள உள்ளக வீதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சிறிகார்த்திகேயன் கஜிதன் (வயது - 19) என்ற இளைஞனே காயமடைந்தார். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)



தென்மராட்சி, கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் சப்பரத் திருவிழா நேற்றுமுன்தினமிரவு நடைபெற்றது.

## முதியோருக்கு மருத்துவ முகாம்

முதியோர்களுக்கான மருத்துவ முகாம் எதிர்வரும் திங்கட்கிழமை சாவகச்சேரி, சரசாலை தெற்கு உலக தரிசன மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலகின் முதியோருக்கான தேசிய செயலகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலகம், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மற்றும் சாவகச்சேரி மருத்துவமனை ஆகியவை இணைந்து இந்த மருத்துவ முகாமை நடத்தவுள்ளது. சரசாலை தெற்கு, சரசாலை வடக்கு, மட்டுவில் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வதியும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை மருத்துவமுகாமில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ முகாமில் நீரிழிவு, கண், பல் மற்றும் பொது மருத்துவம் தொடர்பான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-9)

## நூல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.13
யாழ்ப்பாணம் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்துக்கென ஒரு தொகுதி நூல்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது. படிப்பகம் நிகழ்ச்சித்திட்டத்தின் வாயிலாக சிறகுகள் அமையத்தால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி நூல்களே கையளிக்கப்பட்டன.

சிறகுகள் அமைய செயலாளர் சிறீபவான் மற்றும் செயற்பாட்டாளர் உமேஷ் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ-222)



## கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.13
கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கொடிகாமம் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து நேற்று முன்தினம் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் வீட்டை சோதனை செய்தபோது அங்கிருந்து 4 லீற்றர் கசிப்பு மற்றும் 30 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் விடுவிப்பு தொடர்பில் அந்தந்த இடங்களிலேயே ஆராய்வு

## நேற்றைய கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம், செப். 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் மற்றும் திணைக்களங்கள் வசமுள்ள நிலங்களை விடுவிப்பதற்காக எந்தக் கிராமங்கள் அபகரிப்பில் உள்ளதோ அந்தந்தக் கிராமங்களில் கலந்துரையாடி உடனடியாகத் தீர்வை எட்டுவது என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் மற்றும் அரச திணைக்களங்களால் அபகரிக்கப்பட்டுள்ள தனியார் மற்றும் அரசு நிலங்கள் ஆகியவற்றை விடுவிப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம், எட்டப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் அலுவலகம் முன்பாக உள்ள 21 ஏக்கர் நிலத்திலுள்ள படையினர் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்பாக அந்த இடத்தில் இருந்து முழுமையாக விலகி, அந்த நிலங்களை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு பகுதியிலுள்ள மக்களுக்குச் சொந்தமான தனியார் நிலம் 72 ஏக்கர் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்ற பொழுதும் அந்த இடத்தில் தமது வசம் 59. 9 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளதாகப் படையினர் தெரிவிக்கின்றனர். குறித்த நிலத்துக்கு பதில் நிலம் அல்லது காணிக்குரிய பணத்தைப் பெறுவதற்கு பலர் சம்மதம் தெரிவித்தனர் என்றும் படையினர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், அவ்வாறு படையினருக்கு எந்தச் சம்மதமும் வழங்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து கேப்பாப்பிலவு நிலம் தொடர்பாக கேப்பாப்புலவு முகாமுக்கு முன்பாக எதிர்வரும் 21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கூடி, இது தொடர்பில் உரியமக்களுடன் உரையாடி இறுதித் தீர்வை எட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் ஆலங்குளம் கிராமத்திலுள்ள 49 ஏக்கர் நிலம் தொடர்பில் அதே இடத்தில் பி.ப. 2 மணிக்கு கூடி ஆராய்ந்து முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

வனவளத் திணைக்களத்தினர் தொடர்ந்தும் மக்களின் நிலங்களை அபகரிப்பதும், மரங்கள் வளர்ந்த ஒரே காரணத்துக்காக திணைக்களத்துக்குரியது என்று சொந்தம் கொண்டாடுவதும், அதனால் ஏற்படும் பிரச்சினை தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதன் பிரகாரம் 1983 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசிதழ் அடிப்படையில் மட்டுமே திணைக்களம் செயற்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்துக்கு திணைக்களமும் தனது சம்மதத்தைத் தெரிவித்துக்கொண்டது. இதேபோன்று மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் பிரிக்கப்பட்டுள்ள கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு போன்ற பகுதிகளிலுள்ள 2 ஆயிரத்து 143 ஏக்கர் நிலம் தொடர்பில் எதிர்வரும் மூன்றாம் திகதி அதே இடத்தில் கலந்துரையாடல் மூலமாகத் தீர்மானிக்கப்படும் என்று முடிவு எட்டப்பட்டது.

இதனையடுத்து மாவட்டத்தில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் ஆளுகை செய்யும் பிரதேசங்களான நந்திக்கடல், நாயாறு உள்ளிட்ட பகுதிகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இந்தப் பகுதிகளில் செயற்படுத்துவதற்கு என்று வந்த அபிவிருத்திகளைக்கூட மேற்கொள்ள முடியாத காரணத்தால் பெருந்தொகைப் பணம் மாவட்டத்தை விட்டுச் சென்றுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் மூன்றாம் திகதி அதே கிராமத்தில் ஒன்றுகூடித் தீர்மானம் மேற்கொள்வதாக முடிவு எட்டப்பட்டது. (த-105)

### மொழி பெயர்ப்பாளர்கள் 4 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.13

வடக்கு மாகாண சபைக்கு நியமிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் 4 பேருக்கான நியமனங்கள் நேற்று முன்தினம் கைதடி முதலமைச்சர் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் இந்த நியமனக் கடிதங்கள் கையளிக்கப்பட்டன. (ஐ-7)

### ஊழியர்களை விக்கியும் சந்தித்தார்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலுள்ள கல்வி சாரா ஊழியர்களின் போராட்டத்துக்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் நேற்றுச் சென்று நிலமைகளைக் கேட்டறிந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி சாரா ஊழியர்களின்வெற்றிடங்களுக்கு தங்களின் பெயர்கள் உள்வாங்கப்படவில்லை என்றுதெரிவித்து, நேற்று முன்தினம் தொடக்கம் சுழற்சி முறை உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (த-7)



### குருசாமி வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு

கொடிகாமம், செப்.13

யாழ்ப்பாணம், கைதடி குருசாமி வித்தியால யத்தின் பரிசளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை முதன்மை மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ந. ஜெயரூபன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் அவரது பாதிரியாரான உதயன் குழுமத்தின் பணிப்பாளர் திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதா லிங்கேஸ்வ ரன், பரிசளிப்பு விழா நிதிய உறுப்பினரும்யாழ்ப்பாண மாவட்ட செயலக தந்திர உபாய நகர அபிவிருத்தி திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளருமான சி.மயூரன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், சனசமூகநிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி உட்படபலர்கலந்துகொண்டனர். மாணவர்களுக்கான பரிசில்களை முதன்மை விருந்தினர்கள் வழங்கி வைத்தனர். (ஐ-159)

# பிரமிட் முறையில் ஏமாற்றியிருந்தவர்கள் பணத்தைத் திருப்பித் தருகிறார்களில்லை

## மத்திய வங்கியில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு

யாழ்ப்பாணத்தில் பிரமிட் வகை வியாபாரத்தில் ஏமாற்றி இணைக்கப்பட்டு, எங்களிடம் பணம் பெற்று வழங்கிய பொருள் களை மீள ஒப்படைக்கும்போதும் நிறுவனத்தினர் பணத்தைத் திருப்பித்தர மறுக்கின்றனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். இது பற்றி ஒருவர் மத்திய வங்கி யிலும் முறைப்பாடு செய்துள்ளார்.

பலாலி வீதி, கந்தர்மடம் சந்திக்கு அருகில் இயங்கும் பிரமிட் வகை நிறுவனம், ஒரு தொகைப் பணத்தைப் பெற்று, பணத்தின் அரைவாசிக்கேனும் பொருள்களை வழங்காது ஏமாற்றுகின்றது. மேலும் சிலரை இணைத்துத் தருவதன் மூலமே பணமீட்டமுடியும் என்கின்றனர்.

பெறுமதிக்கான பொருள்கள்கிடைக்கும் எனத் தெரி வித்ததை நம்பி கணவரிடம்கூடத் தெரிவிக்காது நகையை அடகு வைத்து 90 ஆயிரம் ரூபா செலுத்தி பதிவுசெய்திருந்தேன் என்று ஒரு பெண் தெரிவித்தார். பின்னர் எமக்கு வழங்கப்பட்டுள்ளபொருள்கள் சந்தை விலையில் 30 ஆயிரம் ரூபாவிலும் குறைவானதாகவே காணப்படுகின்றது. எம் மைத் தொடர்பு கொண்டவர் தற்போது தலைமறைவாகி விட்டார்.

நிறுவனத்துக்குச் சென்றால் உரிய பதில் கூறப்படுவதில்லை. பணத்தையும் திருப்பித் தருகிறார்களில்லை. வழங்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் எந்த சேதாரமுமின்றி மீளவழங்கி எமது பணத்தை ஒப்படைக்குமாறு கணவர் கோரியும் பதிலளிக்கிறார்களில்லை.

பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட மூவருக்கும் பணம் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'என்டர்பிறைஸ் சிறி லங்கா' நிகழ்வில் அமைக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் கூட பீடத்திலும் முறைப்பாடு ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டு இவ்வாறான வியாபார நடவடிக்கை அனுமதிக்கப்பட்டதா? நடத்த முடியுமா? என கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த மத்திய வழங்கியின் பிரதி நிதி, குறித்த வகை வர்த்தக நடவடிக்கை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. வர்த்தக நிறுவனம் எனப் போலியாகப் பதிவு செய்து ஏமாற்று முயற்சியில் குறித்த நிறுவனத்தி னர் ஈடுபடுகின்றனர்.

இவர்களைப் பொலிஸார் இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இது தொடர்பில் நாமும் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்வோம்.

குறித்த நிறுவனம் ஏற்கனவே சாவகச்சேரியில் இயங்கிய சமயம் சாவகச்சேரி நீதி மன்றில் தடை விதிக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், ஆடியபாதம் வீதியில் மண்டபத்திலும் இவ்வாறே ஏமாற்றி ... பெற்றிருந்தனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (த-105)

### கசிப்பு காய்ச்சினாரென கட்டுவனில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 13

வலிகாமம், கட்டுவன் பகுதியில் வீடொன்றில் கசிப்பு காய்ச்சினார் என்ற குற்றச் சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் வீட்டில் கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த வேளை கைது செய்யப்பட்டுள்ளார். 60 போத்தல் கசிப்பு மற்றும் 170 போத்தல்கள் கோடா என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை சிறப்பு பொலிஸ் பிரிவினர் அவரைக் கைதுசெய்து சட்ட நடவடிக்கைக்காக தெல்லிப்பழை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-726)

### மாதாந்தக் கொடுப்பனவுக்கு பதிவுசெய்யவும்

சாவகச்சேரி,செப்.13

நாடுமுழுவதும் உள்ள சிறப்புத் தேவையுடையோருக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தென் மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினர் பிரதேசத்தில் உள்ள சிறப்புத் தேவையுடையோரின் ஆவணங்களைப் பதிவு செய்யும் பணிகளை மேற்கண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கைதிகள் 30 பேருக்கு மூக்கு கண்ணாடிகள்

வவுனியா,செப்.13
சிறைக்கைதிகள் வாரத்தை முன்னிட்டு, வவுனியா சிறைச்சாலையில் உள்ள கண் பார்வைக் குறைபாடுகள் உள்ள கைதிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.
சிறிசபாரட்ணம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் 30 கைதிகளுக்குமூக்குக்கண்ணாடிகள்வழங்கப்பட்டன. அத்துடன் கைதிகளின் பிள்ளைகளுக்குகற்றல்உபகரணங்களும், தண்டப்பணம் செலுத்தமுடியாமைஇருந்த சிறைகைதிகள்இருவருக்கு தண்டத்தை செலுத்துவதற்கானபணமும்வழங்கப்பட்டது.
சிறிசபாரட்ணம் அறக்கட்டளையின் பன்னாட்டு ஏற்பாட்டாளர் ஏ.நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்றநிகழ்வில், அறக்கட்டளையின் முக்கியஸ்தர்களான சபாரத்தினம், கதிர் காமாராஜா, நகரசபை உறுப்பினர்ரி.கே.ராஜலிங்கம், சிறைச்சாலை உயர் அதிகாரிகள், சிறைச்சாலை நலன்புரி சங்க உறுப்பினர்கள், சமூக அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-110)

## சிப்பாயைத் தாக்கினரென மேலும் மூவரை தேடுகிறது பொலிஸ்

முல்லைத்தீவு, செப். 13
மதுபோதையில் சென்று படையினரை தாக்கினர் என்றகுற்றச்சாட்டில்ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் மூவரைப் பொலிஸார் தேடிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
புதுக்குடியிருப்பில் படையினரின்சோதனைநிலையத்தில்கடந்த8ஆம்திகதிஇரவு காவல் கடமையில் நின்ற சிப்பாய்மீதுதாக்குதல்நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே ஆனந்தபுரத்தைச் சேர்ந்த இளைஞன் [illegible] கைது செய்யப்பட்டிருந்தார். அவர் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார். (த-ரி3)

# பாடசாலை வெற்றிடங்களுக்கேற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 13
கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர்களின் நியமன ஆள்ச்சேர்ப்பு பிரமாணக் குறிப்புகளுக்கு முரணானது. பிரதேச செயலர் பிரிவில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப நியமிப்பு செய்யப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் நியமனம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைச்செயலர் பொ.உதயரூபன் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய டிப்ளோமா ஆசிரியர்கள் ஆள்ச்சேர்ப்புக்காக வெளியிட்ட அரசிதழுக்கு முரணாக பிரதேச செயலர் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு முரணாக நியமனம் செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது. 2015 மே மாதம் 8ஆம் திகதி 1914 இலக்கமிடப்பட்ட அரசிதழின் உபபரிவுக்கு ஏற்ப 2015ஆம் ஆண்டு உள்ளீர்க்கப்படுவதற்கான அடிப்படையாக குறித்த பிரதேச செயலர் பிரிவில் நிலவும் ஆசிரியர் வெற்றிடத்தை அடிப்படையாகக் கொண்ட இஸட் புள்ளி அடிப்படையில் கல்லூரி ஆசிரியர்கள் கல்வியியற் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள்.
வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்த 4ஆயிரத்து 286 ஆசிரியர்களில் 50 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் தேசிய பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
இது இலங்கை அரசமைப்பின் சமத்துவக் கொள்கையை மீறும் செயல். கல்வி அமைச்சு தான் தோன்றித்தனமாக வெளிமாவட்டங்களுக்கும் தேசிய பாடசாலைகளுக்கும் நியமனங்களை வழங்கியுள்ளது.
கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர்களின் நியமனம் 1589/30 அரசிதழ் ஆள்ச்சேர்ப்புப் பிரமாணக் குறிப்புகளுக்கும் தாபன விதிக் கோவைகளின் சட்டவிதிகளுக்கும் முரணாக அமைந்துள்ளமையால் ஆசிரியர்களின் நியமிப்பு தொடர்பாக குறித்த பிரதேச செயலர் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.
அரசமைப்பின் 13ஆம்திருத்தச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மாகாண கல்வி அமைச்சின் அதிகாரங்களைக் கவனத்தில்கொள்ளாத கொழும்பு அரசு எவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு கூடிய அதிகாரம் வழங்கும்? என்று சங்கம் கேள்வியெழுப்பியுள்ளது. (த)



## மரங்களை பாதுகாக்கும் நடவடிக்கை

முல்லைத்தீவு,செப்.13
முல்லைத்தீவு நகரப்பகுதியில் நடுகை செய்யப்பட்ட மரங்களைக் கால்நடைகளிடமிருந்து பாதுகாக்கும் நடவடிக்கையில் மாணவர்களும், அரச அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர்.
அரச தலைவரின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' திட்டத்தினூடாக நகரப்பகுதியில் உள்ள வீதியின் இரு மருங்கிலும் 152 மரக்கன்றுகள் அண்மையில் நடுகை செய்யப்பட்டன.
இந்தமரங்களைப்பராமரிக்கும் நடவடிக்கையில் முல்லைத்தீவுமகாவித்தியாலய மாணவர்களும், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தைச் சேர்ந்த அரச அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர்.
நடுகை செய்யப்பட்ட மரங்களைச் சுற்றி கற்கனால்வேலிகள் அமைக்கப்பட்டன.
இந்த நிலையில் கட்டாக்காலி கால்நடைகள் அழிக்காத வண்ணம் நேற்றைய தினம் பனை ஓலை கட்டி பராமரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ-ரி3)





## வகுப்பறை கட்டடம் திறப்பு

கிளிநொச்சி,செப்.13
கிளிநொச்சி, முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தில் புதிதாகஅமைக்கப்பட்ட வகுப்பறைக்கட்டடம் மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.
இந்த நிகழ்வு நேற்றுக் காலை 8.30 மணியளவில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.
அரச தலைவர் செயலகத்தின் 7 மில்லியன் ரூபா செலவில் குறித்த கட்டடம் கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் பொறியியல்பிரிவின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டது.
நிகழ்வில்வடக்கு மாகாண ஆளுநர்சுரேன்ராகவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.
மேலும் கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ. இளங்கோவன், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர். (ஐ-222,7)

## காற்றுடன் கூடிய மழையால் முல்லையில் 4 வீடுகள் சேதம்

முல்லைத்தீவு,செப்.13
முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று பெய்த மழை மற்றும் கடும் காற்றுக் காரணமாக நான்கு வீடுகள் பகுதி யளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட இடர் முகா மைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள உடையார்கட்டுப்பகுதியில் இரண்டுவீடுகளும் மற்றும் ஒரு கொட்டகையும், ஒட்டுசுடுட்டான் பிரதேசத்தில் ஒரு வீடும் கடும்காற்றினால் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை- உடையார் கட்டில் மின்னல் தாக்கத்தால் சிலவீடுகளில்உள்ள இலத்திரனியல்பொருள்கள்பழுதடைந்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி3)





## குழந்தை பராமரிப்பு நிலையம் வவுனியாவில் திறந்து வைப்பு

வவுனியா,செப்.13
வவுனியா மருத்துவமனையில்சீரமைக்கப்பட்ட குழந்தை பராமரிப்பு நிலையம் நேற்றுதிறந்து வைக்கப்பட்டது.
வவுனியா மருத்துவமனை ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் 7.95 மில்லியன் ரூபா நிதியில், இலங்கைக் கடற்படையால் குறித்த கட்டடம் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன்திறந்து வைக்கப்பட்டது
மருத்துவமனைப் பணிப்பாளர் நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றநிகழ்வில்முதன்மைவிருந்தினராகஇலங்கைக்கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பியல் த சில்வா கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார். நிகழ்வில்மாவட்டமேலதிகசெயலர்தி.திரேஸ்குமார், மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை செல்லும் வீதியை சீரமைக்கவும்

முல்லைத்தீவு, செப். 13

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட குமுழமுனை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வீதிகள் சீரின்மையால் பாடசாலை செல்வதில் பல சிரமங்களை எதிர் கொண்டுள்ளார்கள். அதனால் அவற்றை விரைவில் சீரமைத்துத் தரவேண்டும் என்று அதிபர் கோரிக்கை விடுக்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்று, குமுழமுனை ஊடாக அலம்பில் செல்லும் சுமார் 20 கிலோமீற்றர் வரையிலான வீதியில் குறிப்பிட்ட சில பகுதிகளே செப்பனிடப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினரிடம் இது தொடர்பில்தெரியப்படுத்தியும் இதுவரை இந்த வீதி செப்பனிடப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். குமுழமுனை மகா வித்தியாலயத்தில்கல்விகற்பிக்கும் அறுபது வீதமான ஆசிரியர்கள்வெளியிடங்களிலிருந்தே வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பேருந்து சேவை வழங்குமாறு பல்வேறு தரப்பினரிடமும் பாடசாலை நிர்வாகம் கோரிக்கை முன்வைத்த நிலையில் வீதிப் பிரச்சினையைக் காரணம் காட்டிவருகின்றார்கள். எனவே குறித்த வீதியைச் சீரமைத்துத் தருமாறு பாடசாலைஅதிபர்கோரிக்கை விடுத்துள்ளார். (து-ரி3)

# தந்தத்தை அபகரிக்கும் நோக்கில் முல்லையில் சுடப்பட்டதா யானை?

### யானையை மீட்க முன்வராததால் எழுகிறது சந்தேகம்

முல்லைத்தீவு, செப். 13

முல்லைத்தீவில்வெடியில்சிக்கிய யானை ஒன்று, காப்பாற்றப்படாமல்உயிரிழந்துள்ளது. அவ்வாறுஉயிரிழந்தயானையின்தந்தங்கள் அறுத்துச்செல்லப்பட்டுள்ளன. யானைவெடிபட்டுஇரண்டுநாள்களாக விவசாயக் காணிக்குள் பரிதவித்தும், அதை மீட்க வன உயிரியல் திணைக்களம்எந்தநடவடிக்கையும்எடுக்காமையானது மக்கள்மத்தியில் பெரும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.



தந்தத்தை அபகரிப்பதற்காக குறித்த யானை வேண்டுமென்றே இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இலக்கு வைக்கப்பட்டயானைஉயிரிழக்காது அட்டகாசம் செய்ததால் யானையின் தந்தத்தை அபகரிக்க முடியவில்லை. எனவே யானைஉயிரிழந்ததன்பின்னர் அந்தத் தந்தங்கள் அறுக்கப்பட்டுள்ளன என்று சந்தேகிக்கப்படுகிறது.

விவசாயக் காணியில் இரண்டு நாள்களாகவேயானைஉயிருக்குப் போராடுகிறது என்றதகவல் தீயாகப்பரவியபோதும்யானையைக்காப்பாற்றவனஉயிரியல் திணைக்களம் தாமதித்தது மேலும்சந்தேகத்தைஏற்படுத்தியுள்ளது என்று மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

மக்களுடைய காணிகளைப் பிடிப்பதற்கு முண்டியடித்துக் கொண்டு, ஓடிவரும் அரச திணைக்களங்களில் ஒன்று வனஉயிரியல் திணைக்களம். வன உயிரினங்களின், நடமாட்டம் அதிகரித்துள்ள இடங்கள் என்று தெரிவித்தே அந்தத் திணைக்களம்காணிகளைஅபகரிக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறுவனஉயிரினங்களுக்காக போராடும் அந்தத் திணைக்களம் வெடிபட்ட யானையை மீட்க முன்வராதது ஏன் என்ற பெரிய கேள்வியை மக்கள் முன்வைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மதவாளசிங்கன் குளப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாயில் வெடிபட்ட நிலையில்காயமடைந்தகுறித்த யானை விவசாயிகள் நிலத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்தது. உணவு உண்ணமுடியாத நிலையில்தவித்தது. தொடர்ந்து நடக்க முடியாத நிலையில் காணப்பட்ட யானை வெங்காய வெடியில் சிக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் யானையை மீட்க வனஉயிரியல் திணைக்களம் முன்வரவில்லை. இதனால் அந்த யானைநேற்றுமுன்தினம் இறந்தது. எனினும் யானையைப் புதைப்பதற்கோ அல்லது அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவோ எவரும்முன்வரவில்லை எனவிவசாயிகள்தெரிவித்தனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டவனஜீவராசிகள்திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, யானையை மீட்டெடுத்து புதைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், தந்தம் வெட்டப்பட்டு எடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் முள்ளியவளை பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்தது. (ஐ-21,ரி3)



## நெடுநேரம் ஒலித்தவாறு எச்சரிக்கை சமிக்ஞை

வவுனியா, செப்.13

வவுனியா தாண்டிக்குளம் தொடருந்துக் கடவையில் பொருத்தப்பட்டுள்ள ஒளிச் சமிக்ஞை நேற்றுமுன்தினம் பலமணிநேரமாகதொடர்ச்சியாக எச்சரிக்கை ஒலி எழுப்பியவாறும் எச்சரிக்கைச் சமிக்ஞையான சிவப்பு விளக்குஎரிந்துகொண்டிருந்ததால்பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் மாலையிலிருந்து குறித்த ஒளிச் சமிஞ்சை தன்னிச்சையாக ஒலி எழுப்பி சிவப்பு விளக்கு ஒளிர்ந்தபடி இருந்தது. இதனால்வேலைகளைமுடித்துச் செல்வோர், மாலை வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் தொடருந்து வருகின்றது எனக் கருதி அந்தவிடத்தில் காவல் நின்றனர். எனினும் தொடருந்து வரவில்லை.

நீண்ட நேரத்தின் பின்னர் அது சீர்ப்படுத்தப்பட்டது. குறித்த கடவையில் கடந்த வருடம்தொடருந்துவிபத்தில் ஓர் இளைஞன் உயிரிழந்திருந்தார். (து-110)



## சங்காபிசேகம்

முல்லைத்தீவு, செப்.13

முல்லைத்தீவு, மல்லாவி, பாரதிநகர் அருள்மிகு சிறிகாளி அம்மன் ஆலயத்தில் சங்காபிசேகம் நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. வழிபாட்டு நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், மாந்தைகிழக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் தனிநாயகம், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோருடன், பெருந்திரளான அடியவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-222)

### சுகாதாரச் சீர்கேடு

# 3 வர்த்தகர்களுக்கு ரூ.23,500 தண்டம்

### மல்லாவி சுற்றுலா நீதிமன்று விதிப்பு

மல்லாவி, செப். 13

மல்லாவியில் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் உணவு வகைகளை விற்பனைக்கு வைத்திருந்த மூன்று வர்த்தகர்களுக்கு, மல்லாவி சுற்றுலா நீதிமன்று 23 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது.

மல்லாவி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மல்லாவி சுற்றுலா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சுட்டுத்துண்டில் உற்பத்தித் திகதி, காலாவதி திகதி குறிப்பிடப்படாத நிலையில் 42 ஐஸ்கிறீம்களை விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்திருந்ததுடன் தனிநபர் சுகாதாரம் பேணாது [illegible] செய்யாமல் விற்பனை[illegible]டமை மற்றும் றொட்டிகளை றெஜிபோம்பெட்டியில் களஞ்சியப்படுத்தியமை தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வர்த்தகர் ஒருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அவருக்கு 11 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில், வண்டுகள்காணப்பட்ட 10 கிராம் நிறையுடைய 15 மஞ்சள் தூள் பைக்கற்றுக்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சுகாதாரத்துக்குக் கேடான வகையில் வணிக நிலையத்தின் களஞ்சிய அறை வைத்திருந்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (து-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாவனையாளர் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், செப்.13

பாவனையாளர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னாரில் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மாவட்டச் செயலர் சீ.ஏ.மோகன்ராஸின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலனின் மேற்பார்வையில் மன்னார் மாவட்டப் பாவனையாளர் சபை அலுவலக பொறுப்பதிகாரி எம்.பி.எஸ்.கே.றெ[illegible]லின் ஒழுங்கமைப்பின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட செயலக முதன்மை கணக்காளர் எம்.செல்வரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே.திலீபன், அழகியற் கல்வி உதவிப் பணிப்பாளர் பி.எம்.எம்.சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் விழிப்புணர்வுக் கருத்தமர்வில் பலதரப்பட்ட திணைக்களங்களைச் சார்ந்தவர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் [illegible] பலரும் கலந்து கொண்டனர். (ஐ-60)

# முத்திரை தலை வெளியீடு

மன்னார்.செப்.13

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சாதனை பயண தபால் தலை வெளியீடும், சிறுவர் மாணவர் தலைவர்களுக்கான தினமும் இடம்பெற்றன.

பாடசாலையில் அதிபர் அருட்சகோதரர் ரொஜினோல்ட் தலைமையில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றன.

ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலைச் சமூகம் மற்றும் பாடசாலை பழைய மாணவர்கள் சார்பாக பல்வேறு பட்ட கலாசார மற்றும் சமூக நலன் சார்ந்த செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் 150 ஆண்டு சாதனை பயணத்தின் தேசிய அங்கீகாரத்துக்கு என சிறப்பு தபால் தலையானது இலங்கை தபால் திணைக்கள முத்திரை விநியோக பணிப்பாளர் மீஹம மற்றும் தபால் திணைக்கள பரப்புரை பிரிவு அதிகாரி கே. கே.ஜே.பெரேரா முன்னிலையில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் , சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் பிறட்லி , மன்னார் டிலாசால் சபை இயக்குநர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ்,மன்னார் முதன்மை தபால் அதிபர் அந்தோனிப் பிள்ளை சகாயசீலன் உட்பட - ஆசிரியர்கள் , பழைய மாணவர்கள், நிர்வக உறுப்பினர்கள் , அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-56)




# கட்டப்பட்ட வீடுகளுக்கென ரூ.30மில்லியன் கிடைத்தது

## வீடமைப்பு அதிகார சபையின் மன்னார் பணிமனை தெரிவிப்பு

மன்னார், செப். 13

மன்னார் மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அனுமதி வழங்கப்பட்டு, ஆரம்பிக்கப்பட்ட வீட்டு வேலைகளுக்கான நிதியில், வழங்கப்பட்ட வீடுகளில் இதுவரை முடிக்கப்பட்ட வேலைகளுக்கு வழங்குவதற்கு என்று முப்பது மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது.

அந்தப் பணம் இன்றிரவு (நேற்றிரவு) எட்டுமணிக்குள் உரிய பதிவுகளுக்குப் பகிர்ந்தளித்து அனுப்பப்படும் என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபை நிதி வழங்கிக் கட்டத் தொடங்கிய வீடுகளை மக்கள் கடன் பட்டு வேலைகளை முடித்திருந்தனர். எனினும், வீடமைப்பு அதிகார சபை பணம் வழங்காததால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

வீடமைப்பு அதிகார சபையில் அதிருப்தியும் கொண்டிருந்தார்கள். இவற்றைத் தெளிவுபடுத்தும் வகையில் சபையினரின் மாவட்டக் காரியாலயத்தில் நேற்றுமுற்பகல் ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

பொது மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தலைமை அலுவலகத்தால் எமக்கு கிடைக்கும் பணம் முன்னுரிமை அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. தற்பொழுது கிடைக்கப்பெற்றுள்ள முப்பது மில்லியன் ரூபாவும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுவதுடன் வீட்டுத்திட்டப்பயனாளி களுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்பட்ட ஐந்து லட்சம் ரூபா மற்றும் ஏழரை லட்சம் ரூபா பெறுமதியான தொகை முழுமையாக வழங்கப்படும் என்றும் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குள் அரசியல் தலையீடு இருக்காது. தேசிய வீடமைப்புத் தொடர்பாக நடைபெறும் நிகழ்வுகள் ஆகக் குறைந்த செலவுகளில் நடைபெறுவதுடன் ஊழியர்களின் அதிகளவான பங்களிப்புடனேயே நடைபெறுகின்றன.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த சிங்களப் பகுதிகளில் நடை முறைப்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்கள் யாவும் மீளச் செழுத்தவேண்டிய கடன் அடிப்படையில் கொடுக்கப்படு கின்றன. ஆனால், வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படும் வீட்டுத்திட்டங்கள் யாவும் மானிய முறையில் இலவசமாக வடக்கு - கிழக்கு மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்து கொடுக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

வீட்டுத்திட்டங்களை இந்த வருடம் ஆரம்பிக்கும்போது பத்தாம் மாதத்துக்குள் வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று நாம் கூறியிருந்தோம்.

திறை சேரியிலிருந்து பணம் வர சற்றுத் தாமதித்த காரணத்தால் கால அவகாசத்தை நீடிப்போம். வேறு ஏதேனும் காரணத்தால் வீட்டுத்திட்டம் நின்று விடுமோ அல்லது பணம் கிடைக்காமல் விட்டுவிடுமோ என்று மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்குரிய பணம் எந்தக் காரணத்தாலும் தடைப்படாமல் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-213,60)



# கெக்கிராவ நீதிமன்றின் ஆவண அறைக்குள் தீ!

கொழும்பு. செப்.13

கெக்கிராவ நீதிவான் நீதிமன்றின் ஆவணக் காப்பக அறையில் நேற்று மதியம் தீ விபத்து ஏற்பட்டது.

தீயணைப்புப் பிரிவினரும், ஏனையோரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ விபத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (எ)

# யாழ். பல்கலை ஊழியர் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம் , செப்.13

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதில் பக்கச் சார்பு வேண்டாம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள பணிநிலை வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் தற்போது எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பன இடம்பெற்று வருகின்றன. தேர்வுகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினரான த.சித்தார்த்தன் ஊடாக அனுப்பி வைத்த பெயர்களுக்குரியவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை.

இவ்வாறு ஒரு தரப்பு அழைக்கப்படாத காரணத்தால் குறித்த நேர்முகத் தேர்வை நிறுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

எனினும், "யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணி நிலை வெற்றிடங்களுக்கு கடந்த இரு ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் அனுப்பிய விண்ணப்பங்களே அதிகமாக நேர்முகத் தேர்வுக்கு உள்வாங்கப்பட்டன.

அதனால் இந்தமுறை ஏனையோருக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் பரிந்துரை விண்ணப்பங்கள் பரிசீலிக்க [illegible] என்று அவைக் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சித்தார்த்தன் அனுப்பிய விண்ணப்பங்களில் ஊழியர் சங்கத்தில் அங்கம் வகிப்பவர்களின் உறவினரும் உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேநேரம், ஊழியர் சங்கம் ஆரம்பித்துள்ள அடையாளப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு தெரிவித்து அதன் பொதுச்செயலர் செ.கஜேந்திரன் ஊடாக அறிக்கை அனுப்பியுள்ளார்.

இதன் மூலமாக புளொட் அமைப்பு பரிந்துரை செய்த பட்டியலுக்கு முன்னணி யும் களத்தில் இறங்கியுள்ளது என்று பல்கலைக் கழக ஊழியர்கள் சிலர் தெரிவித்தனர். (து-105)



# ராம் ஜெத்மலானிக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

கிளிநொச்சி, செப். 13

இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சரும், உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான ராம் ஜெத்மலானியின் நினைவேந்தல் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

இவர் கடந்த 8ஆம் திகதி இயற்கை எய்தினார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இது நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், மாவை சோ. சேனாதிராசா, வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இவர் ஈழமக்களுக்காகக் குரல் கொடுத்தவர். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக இறுதிவரை வாதாடிய சட்டத்தரணியுமாவார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமையை உறுதி செய்ய இருதரப்புப் பேச்சுகள் அவசியம்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, செப்.13

மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி என்பவற்றை உறுதிப்படுத்துவது தொடர்பான இருதரப்புப் பேச்சுகள் தொடர்ந்தும் நிகழ்த்தப்பட வேண்டியது அவசியம் என்று இலங்கையிடம் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் உறுதியான பொருளாதார மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எப்போதும் தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதத்துக்கும், ஐரோப்பிய ஒன்றியகவுன்ஸிலின்தலைவர் டொனால்ட் டஸ்க்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயங்கள் பேசப்பட்டனஎன்றும்தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியக்கும் இடையில் அண்மைக்காலமாக வலுவடைந்திருக்கும் இருதரப்பு உறவு குறித்தும், இலங்கைக்கு மீண்டும் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டமை தொடர்பிலும் இருதரப்பினராலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

தற்போது இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் காணப்படுவதுடன், அதனுடனான வாணிபத்தின் மூலமான வருடாந்த வருமானம் 5 பில்லியன் யூரோவுக்கும் அதிகமாக உள்ளது. (எ)

# சொத்து விவரங்களை கையளித்தார் ஹரீன்

கொழும்பு, செப்.13

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன்பெர்னாண்டோ தனது சொத்து, பொறுப்பு விவரங்களை அரச தலைவர் செயலகத்தில் கையளித்துள்ளார்.

சொத்து, பொறுப்பு விவரங்களை அரச தலைவர் செயலகத்திடம் கையளிக்காத எட்டு அமைச்சரவை அமைச்சர்கள் மீது ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தது. அதையடுத்தே அந்த எண்மரில் ஒருவரான அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தனது சொத்து விவரங் களைக் கையளித்துள்ளார்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துவதற்கான சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்கள் தமது சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய விவரங்களை அரச தலைவர் செயலகத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட தகவலின்படி கடந்த ஓகஸ்ட் மாதம்20 ஆம்திகதிவரையில்அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் 8 அமைச்சர்கள் தமது சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய விவரங்களை சமர்ப்பித்திருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

சொத்து, பொறுப்பு விவரங்களை வெளியிடத் தவறிய அமைச்சரவை அமைச்சர்களான நவீன் திஸாநாயக்க ஹரீன்பெர்னாண்டோ, மனோகணேசன், எம்.எச். ஏ.ஹலீம், அகிலவிராஜ் காரியவசம், ரவி கருணாநாயக்க, கயந்த கருணாதிலக மற்றும் சஜித் பிரேமதாச ஆகிய எட்டுப்பேருக்கு எதிராக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு இலஞ்ச,ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தது. (எ)

# தனி நபர் ஒருவரால் மட்டும் மாற்றம் ஏற்படுத்த முடியாது

## அநுரகுமார தெரிவிப்பு

தனிநபர் ஒருவரால் நாட்டை மாற்ற முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று நடத்திய கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஒரு தனி நபர் மூலமாக அன்றி ஒரு கூட்டுத் திட்டத்தின் மூலம் மட்டுமே நாட்டை மேம்படுத்த முடியும். அதன் அடிப்படையிலேயே மக்களும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். தேர்தல் வரும்போது மட்டும் பலர் மந்திரவாதிகள் போலும், பேய்கள் போலவும் பல்வேறு வாக்குறுதிகளையும், பரப்புரைகளை முன்வைக்கின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு புதிதல்ல.

ஒரு தனி நபர் நாட்டை மாற்ற முடியாது. அனைத்து முயற்சிகளும் கூட்டாக இருக்க வேண்டும். 2015 ஆம் ஆண்டு தேர்தலில் இரு பெரும் தீமைகளில் ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய நிலை மக்களுக்கு இருந்தது. அவர்களின் புரிதலின் அடிப்படையில் அரச தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், 2019 அரச தலைவர் தேர்தல் வித்தியாசமாக இருக்கும் - என்றார். (எ)

# நிசங்க உட்பட 13 பேருக்கு அழைப்பாணை

கொழும்பு, செப்.13

அவன் கார்ட் மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அந்த நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி உட்பட 13 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன் றில் முன்னிலையாக வேண்டும் என நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் அழைப்பு விடுத்துள் ளது.

அந்தத் தினத்தில், அவன் கார்ட் வழக்கு தொடர்பாக சட்டமா அதிபர் தாக்கல் செய்த 7 ஆயிரத்து 573 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பத்திரிகைகள், பிரதிவாதிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அவன் கார்ட் மிதக்கும் ஆயுத களஞ்சியத்துக்கு வழங்கப்பட்ட அனுமதி காரணமாக அரசுக்கு ஆயிரத்து 140 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ)

# சிறிலங்கன் எயார்லைஸ் மடிக் கணினிகளுக்கு தடை

கொழும்பு, செப்.13

15 அங்குல அப்பிள் மெக்ப்ரோ மடிக் கணினிகளை விமானத்தில் எடுத்துச் செல்வதற்கு சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தடைவித்துள்ளது.

இந்த மடிக்கணினி தீப்பற்றக்கூடிய அபாயத்தைக் கொண்டுள்ளதாலேயே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

15 அங்குல மெக்ப்ரோ மடிக் கணினியின் பற்றரி அதிகளவில் சூடாகும் நிலை காணப்படுகின்றது என்று அதை உற்பத்திசெய்த நிறுவனம் அறிவித்திருந்த நிலையிலேயே சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இவ்வாறு தடை செய்துள்ளது.

விமானப் பயணங்களை மேற்கொள்வோரில் இவ்வாறான தொழில்நுட்பசாதனத்தைப் பயன்படுத்துவோராயின் அதனை உற்பத்தி செய்த நிறுவனத்திடம் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

# பிறரை விமர்சிக்கும் தகைமை கோத்தபாயவுக்குக் கிடையாது

## லால் காந்த தெரிவிப்பு

கொழும்பு, செப்.13

அரசியல் மேடைகளில் பிறரை விமர்சிக்கும் தகைமை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்குக் கிடையாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகத் தேசிய நிதி மோசடி, ஜனநாயக மீறல் உட்படப் பல குற்றச்சாட்டுக்கள்தொடர்பானவழக்குகள் தற்போதும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. அவ்வாறானவர்களால் சிறந்த நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.

தேசிய நிதி மோசடி, ஜனநாயக மீறல் உள்ளிட்ட சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்தவர்கள், மீண்டும் மக்களாணையைப் பெற்றுக் கொள்வதற்கு நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்கள்போல தேர்தல் பரப்புரை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். கடந்த அரசு மக்களின் தேசிய நிதியை கொள்ளையடித்தது.

கடந்த அரசின் முறையற்ற ஆட்சிக்கு எதிராகவே 2015ஆம் ஆண்டு பெரும் போராட்டத்தின் மத்தியில் நல்லாட்சி அரசைக் கொண்டு வந்தோம். கடந்த அரசின் பிரதி விம்பமாகவே நடப்பு அரசும் தேசிய நிதியை மோசடி செய்தது இரண்டு பிரதான கட்சிகளின் நிர்வாகமும் உழைக்கும் மக்களின் உழைப்பைக் கொள்ளையடித்துள்ளன. என்றார். (எ)

# ஒரே மேடையில் வேட்பாளர்கள் மார்ச் 12 இயக்கம் நடவடிக்கை

இந்த முறை அரச தலைவர் தேர்தலில் போட்டியிடவுள்ள சகல வேட்பாளர்களையும் ஒரே மேடையில் கொண்டு வந்து மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று மார்ச் 12 இயக்கம் அறிவித்துள்ளது.

சகல வேட்பாளர்களையும் ஒரே மேடையில் ஒன்று கூட்டு வதற்கான சகல நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. ஒரே மேடையில் சகல வேட்பாளர்களையும் கொண்டு வந்து பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பது இதன் பிரதான நோக்கமாகும் என அந்த இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கையால் மக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் இடையிலான தொடர்பு பலமடையும். இதனால், இலங்கையின் அரசியல் போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கின்றோம். அத்துடன் இதுபோன்ற நடவடிக்கையொன்று இதுவரையில் இலங்கை வரலாற்றில் இடம் பெறவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் 11 பேர் கடத்தல்:

# வெள்ளைவான் தொடர்பில் பல தகவல்கள் கிடைத்தன

### குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, செப்.13

கொழும்பு மற்றும் அதை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உட்பட 11 பேரைக் கடத்திச்சென்று, கப்பம் பெற்றுக்கொண்டு, காணாமல் ஆக்கிய சம்பவத்தில், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளை வான் தொடர்பில் பல்வேறு தகவல்கள் விசாரணைகளில் இருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.) நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

54-9238 எனும் இலக்கத்தை கொண்ட அந்த வெள்ளை வான், கடற்படையின் நடவடிக்கை பிரிவு பணிப்பாளரின் கீழ் வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் - கடத்தல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் கடற்படை நடவடிக்கை பிரிவு பணிப்பாளராக இருந்த அதிகாரியை விசாரித்து வாக்கு மூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - குற்றப்புலனாய்வுப் பிரிவு கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்கவுக்கு அறிவித்தது.

இந்த கடத்தல்கள் மற்றும் காணாமல் ஆக்கல் விவகாரம் தொடர்பில் விசாரணை செய்யும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக கொள்ளை தொடர்பிலான விசாரணை அறைப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா மேலதிக விசாரணை அறிக்கையுடன் இந்த விடயங்களை நீதிவானுக்கு அறிவித்தார்.

5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்திச் சென்று கப்பம் பெற்றுக் கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில், எழுத்து மூலம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அப்போதைய பணிப்பாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்கவுக்கு 2009ஆம் ஆண்டு மே 27ஆம் திகதி கிடைத்த உண்மை நிலமைகள் மறைக்கப்பட்ட முறைப்பாட்டின் பின்னணியில் அரச தலைவர் சட்டத்தரணி சவேந்ர பெர்ணாண்டோ உள்ளமை தொடர்பில், அவரை விசாரணை செய்ய தேவையான நீதிமன்ற உத்தரவு அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும், அவரை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா நீதிவானுக்கு சுட்டிக்காட்டினார்.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, தெஹிவளை, வத்தளை மற்றும் கட்டுநாயக்க உள்ளிட்ட பல பிரதேசங்களில் பல்வேறு உத்திகளை கையாண்டு இந்த கடத்தல்கள் அரங்கேற்றப்பட்டிருந்தன. தெகிவளையில் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள அலி ஹாஜியார் அன்வர் என்பவரது வீட்டில் வைத்து அவரும் ரஜீவ நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹம்மட் திலான், மொஹம்மட் சாஜித் ஆகிய ஐந்து மாணவர்களும் கடத்தப்பட்டிருந்தனர். இவர்களை விட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், மன்னார் அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன் மற்றும் ரொஷான் லியோன், கொட்டாஞ்சேனையை சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையை சேர்ந்த தியாகராஜா ஜெகன் உள்ளிட்டோரும் கடத்தப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக கொள்ளை விசாரணைப் பிரிவு விசாரித்து வருகின்றது. அது தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள 15 பேரில் ஒருவர் சிறை அதிகாரிகளால் முற்படுத்தப்பட்ட நிலையில் ஏனையோரில் ஒருவரைத் தவிர ஏனையோர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மன்றில் முன்னிலையாகினர். முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவின் பாதுகாப்பு உத்தியோகத்தரும், சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றியவருமான லெப்டினன்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்க, கடற்படை சிப்பாய் லக்ஷ்மன் உதய குமார, நலின்பிரசன்னவிக்ரமசூரிய, தம்மிக தர்மதாஸ , கித்சிறி மற்றும் சிறப்பு புலனாய்வு பிரிவின் பணிப்பாளராகவும் கடற்படை ஊடகப் பேச்சாளராகவும் அப்போது பதவி வகித்த கொமாண்டர் டி.கே.பி. தஸநாயக்க, கடற்படை வீரர்களான கஸ்தூரிகே காமினி, அருணதுஷார மெண்டிஸ், சஞ்ஜீவ பிரசாத் திலங்க சேனாரத்ன, அண்ணாச்சி எனப்படும் இம்புலாவல உப்புல் சமிந்த, கடற்படை புலனாய்வாளர் ஹெட்டி ஹெந்தி, நீர் கொழும்பு படகு உரிமையாளர் என்டன்பெர்னாண்டோ, கடற்படை வீரர் சம்பத் ஜனக குமார ஆகியோரே முன்னிலையாகியிருந்தனர். இரண்டாம் சந்தேக நபரான கன்சைட் நிலத்தடி இரகசிய வதை முகாம் எனச் சந்தேகிக்கப்படும் முகாமின் பொறுப்பாளராக அப்போது இருந்த லெப்டினன்ட் கொமாண்டர் தரத்தை உடையதற்போது கொமாண்டராக பதவி உயர்த்தப்பட்டுள்ள சுமித் ரணசிங்க மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் வெலிசறை கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறுகின்றார் என்று மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டது. (எ)

# இனிமேலும் இழுத்தடிப்புக்கு இடமில்லை முன்வைத்த காலை பின்வைக்கமாட்டேன்

### சஜித் மீண்டும் தெரிவிப்பு



கொழும்பு, செப். 13

"ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் அறிவிப்பில் இனியும் இழுத்தடிப்புக்கு இடமில்லை, அதேபோல் நான் முன்வைத்த காலை பின்வைக்கப் போவதும் இல்லை" இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அரச தலைவர் வேட்பாளர் விடயம் தொடர்பில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நான் நேரில் கூற வேண்டியவற்றைக் கூறிவிட்டேன். அவரும் என்னிடம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்து விட்டார். எனது நிலைப்பாட்டிலிருந்து நான் மாறமாட்டேன். எனக்குச் சாதகமான நிலமை வரும் என்றே கருதுகிறேன். இன்னும் சில தினங்களில் மக்கள் எதிர்பார்க்கும் ஆரோக்கியமான செய்திகள் அறிவிக்கப்படும்" - என்றார். (ம-22)

## தனித்துப் போட்டியிட்டாலும் சு.க வெற்றிபெறுவது உறுதி

### குமார வெல்கம கூறுகின்றார்



கொழும்பு, செப். 13

"அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேறெந்தக் கட்சியுடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிட வேண்டிய தேவையில்லை. தனித்துப் போட்டியிட்டாலும் சுதந்திரக் கட்சி வெற்றிபெறும். இது உறுதி' இவ்வாறு சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டைப் பற்றியும், கட்சியைப்பற்றியும் சிந்தித்தால் நாம் தனித்தே போட்டியிட வேண்டும். சுதந்திரக் கட்சி, பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி அமைப்பதில் சின்னம் குறித்து இரு தரப்பிலும் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றமையை அறிய முடிகின்றது. ஆனால், தற்போது கட்சியோ - சின்னமோ முக்கியத்துவமல்ல. நாட்டைப் பற்றியே சிந்திக்க வேண்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சின்னமான வெற்றிலைச் சின்னத்தில் பொதுமக்கள் முன்னணி போட்டியிடத் தீர்மானித்தாலும் எனக்கு அதில் திருப்தியில்லை. காரணம் யாருடனும் கூட்டணி அமைப்பதை நான் விரும்பவில்லை.

ஏனைய சிறு கட்சிகளுடன் இணைந்து சுதந்திரக் கட்சி அரச தலைவர் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அவ்வாறு தனித்துப் போட்டியிட்டாலும் நிச்சயமாக வெற்றிபெற முடியும்" - என்றார். (ம-22)

## அடுத்த அரசதலைவரை சு.க வே தீர்மானிக்குமாம்

கொழும்பு, செப். 13

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணியமைக்கவோ அல்லது அந்தக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையோ சுதந்திரக் கட்சிக்குக் கிடையாது. இவ்வாறு சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். அவர் மேலுக்கும் தெரிவித்ததாவது:

'எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் மிகவும் முக்கியமான தேர்தலாகும். நாட்டின் அடுத்த அரச தலைவரைத் தெரிவு செய்யும் பொறுப்பைக் கையிலெடுத்து சுதந்திரக் கட்சி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்காக அனைவரும் ஒன்றிணையும் சந்தர்ப்பத்தில் குறித்தவொரு கட்சியின் சின்னத்தை மாத்திரம் பயன்படுத்தாது பொதுச் சின்னத்தைத் தெரிவு செய்வதே பொருத்தமாக இருக்கும் - என்றார். (ம-22)

## சீன பாதுகாப்பு அதிகாரியை சந்தித்தார் ராணுவத் தளபதி

இராணுவப் பயிற்சியை மேம்படுத்துவது தொடர்பாக இலங்கைக்கான சீன தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரி சூஜியான் வெல் மற்றும் இராணுவத் தள பதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் கலந்துரையாடியுள்ளனர்.

இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இருநாடுகளுக்கு இடையிலான உறவு முறையை மேம்படுத்தும் விடயம் தொடர்பாகவும், பயிற்சிநெறிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சீன பாதுகாப்பு இணைப்பதிகாரியால் முன்வைக்கப்பட்ட புரிந்துணர்வுக்கும், ஒத்துழைப்புக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்த இராணுவத் தளபதி சீன இராணுவத்துடன் உறவு முறையை மேம்படுத்துவதற்கான தனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

சந்திப்பை நினைவுபடுத்தும் முகமாக இவர்கள் இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாரிக் கொள்ளப்பட்டன. இதில் சீனதூதரகத்தின் பிரதி பாதுகாப்பு இணைப்பதிகாரியும் இணைந்து கொண்டிருந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை மாவட்டத்தில் திடீரெனக் கடும் காற்று!



கொழும்பு, செப்.13
அம்பாறை மாவட்டத்திலுள்ள சில பகுதிகளில் நேற்றுத் திடீரென வீசிய பலத்த காற்று காரணமாக வீதியோர கடைகள் சேதமடைந்ததுடன் போக்குவரத்தும் சிறிது தடைப்பட்டது.

நேற்றுப்பகல் முதல் மாவட்டத்தில் மணித்தியாலத்துக்கு ஏறத்தாழ 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியதுடன் மழையும் தொடர்ந்து பெய்தது. பொத்துவில் முதல் பெரியநீலாவணை வரையான கடற்பிராந்தியங்களில் கடல் அலை 2 அல்லது 3 மீற்றர் வரை உயர்வடைந்த நிலையில் காணப்பட்டது. அச்சம் காரணமாக மீனவர்கள் எவரும் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

கல்முனை - பாண்டிருப்பு மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய பகுதிகளில் வீசிய காற்றால் வீடுகளுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் மரங்கள் சிலவும் முறிந்து வீழ்ந்துள்ளன.

அதையடுத்து அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (எ)

# இணக்கத்துக்கு வராவிட்டால் சு.க. விளைவைச் சந்திக்கும்!

### எச்சரிக்கின்றது பெரமுன

கொழும்பு, செப்.13

அரச தலைவர் தேர்தல் தொடர்பாக சுதந்திரக் கட்சி ஒரு புரிந்துணர்வை எட்டாவிட்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில்நேற்றுமுன்தினம்எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேமஜயந்த, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
உடன்பாட்டை இறுதி செய்வதற்கான நேரம் விரைவாக கழிந்து கொண்டிருக்கிறது. 2015 நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 95 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

2018 ஏப்ரலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அணியில் 36 உறுப்பினர்கள் இருந்தனர். அதற்குப் பின்னர் 22 பேராக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை, சரத் அமுனுகமவும், மோகன் லால் கிரேரோவும் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்த பின்னர், 20 ஆக குறைந்தது. அவர்களில் 6 பேர் இப்போது ஐ.தே.கவுக்கு ஆதரவு அளிக்கின்றனர்.

இப்போது 14 ஆக உள்ள சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில், பெரும்பாலானோர் வேட்பு மனுக் கோரப்பட்டதும், கோத்தாபய ராஜபக்சவின் பக்கம் வந்து விடுவார்கள். அதனால் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 ஆக குறைந்து விடும். மக்கள் விடுதலை முன்னணி மற்றும் அதிலிருந்து பிரிந்த தேசிய சுதந்திர முன்னணியை விட சிறிய கட்சியாக அது மாறி விடும் - என்று அவர்கள் தெரிவித்தனர். (எ)

## ரணில்– சஜித் பேச்சுக்களுக்கு கூட்டங்கள் தடையாக இருக்கா

### அசோக அபேசிங்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.13
தலைமை அமைச்சர் ரணிலுக்கும் அமைச்சர் சஜித்துக்கும் இடையிலான பேச்சுக்கு சஜித் ஆதரவுக் கூட்டங்கள் தடையாக அமையாது என்று இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் ரணிலுக்கும் அமைச்சர் சஜித்துக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 10 ஆம் திகதி இரவு நடைபெற்றது. சில உடன்பாடுகள் எட்டப்பட்ட நிலையில் இந்தப் பேச்சு தொடர்ந்தும் இடம்பெறவுள்ளது.

சஜித் ஜனாதிபதி வேட்பாளராக வரவேண்டும் என வலியுறுத்தும் ஆதரவுக் கூட்டங்கள் மாத்தளை, மொனராகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் எதிர்வரும் நாள்களில் இடம்பெறவுள்ளன.

இதுவரையில், பதுளை, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களில் இந்த ஆதரவுக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# திருமண பந்தத்தில் இணைந்தார் நாமல்



கொழும்பு, செப்.13
எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவின் மகனும், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச நேற்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.

அவர் திலக் வீரசிங்க தம்பதியினரின் மகளான 22 வயதுடைய லிமினி வீரசிங்கவை திருமணம் செய்து கொண்டார். கொழும்பு கங்காராம விகாரையில் நாமல் ராஜபக்ச மற்றும் லிமினி வீரசிங்க ஆகியோரின் திருமணம் இடம்பெற்றது. திருமண வரவேற்பு நிகழ்வு வீரகெட்டியவிலுள்ள கால்டன் இல்லத்தில் இடம்பெற்றது. (எ)

## மகேந்திரனை நாடு கடத்த ஆவணங்கள் கையளிப்பு

கொழும்பு, செப்.13
மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாடு கடத்துவதற்கான ஆவணங்கள் சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த ஆவணங்களை சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சிடம் கையளிக்கவே தற்போது தூதரகத்துக்கு அனுப்பப்பட்டுள்ள என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி, நிஷார ஜெயரத்ன தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அவர் தொடர்பான தகவல்களை சிங்கப்பூர் அரசிடம் கையளிப்பதற்காகன 21 ஆயிரம் பக்கங்கள் அடங்கிய ஆவணம் ஒன்றை சட்டமா அதிபர் வெளிவிவகார அமைச்சிடம் அண்மையில் கையளித்திருந்தார். (எ)

# மதத் தீவிரவாதிகளாலேயே மதப் பிரச்சினை வருகிறது

### தமிழ்ச் சங்கத் தலைவர் தெரிவிப்பு

தலைமன்னார், செப். 13
ஒவ்வொரு மதங்களிலும் சமய தீவிர வாதிகள் காணப்படுகின்றனர். இவர்களாலேயே சமயப் பிரச்சினைகள் தலைதூக்கி வருகின்றன. இவர்களை இனங்கண்டு வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் பட்சத்தில் சமயங்களுக்கிடையே உருவாகும் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையும் தொடர்பாடலுக்கான பயிற்சி நிலையம் அமைப்பும் இணைந்து, மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சக வாழ்வையும் முன்னெடுத்து வரும் நோக்குடன் முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கருத்துக்களைப் பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களாகிய நாம் விரும்பியோ, விரும்பாமலோ இந்த நாட்டை விட்டு, வேறு நாட்டுக்குக் குடிபெயர்ந்து போகப்போவதில்லை.

நாம் இங்கு இருக்கும்போது ஒருவருடைய முகத்தை ஒருவர் பார்க்கத்தான் வேண்டும். இந்த மண்ணில்தான் நாம் வாழப்போகின்றோம். இது அடிப்படையான விடயம்.

எல்லாச் சமயங்களிலும் தீவிர தன்மையுள்ளவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தங்களைச் சார்ந்த சமயங்களை மிகவும் அன்பு செய்கின்றவர்கள்போல் செயற்பட்டாலும் அந்தளவு மதத்துக்கு எதிரான செயல்களைத்தான் செய்கின்றார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு மதத்திலும் ஐந்து, பத்து வீதமானவர்கள்தான் இருக்கின்றார்கள். ஆனால் பெரும்பாலான மக்கள் சேர்ந்து வாழ்ந்தவர்கள். தற்பொழுது நடந்து கொண்டிருக்கின்ற சம்பவங்களை நினைத்து மனதுக்குள் மனம் புழுங்கிக் கொண்டு இருக்கின்றனர் - என்றார். (த-60)

## கோத்தபாயவின் மனுவை ஏற்குமாறு மன்று உத்தரவு

கொழும்பு, செப்.13
அவன்கார்ட் வழக்கு தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி முன்வைக்கப்பட்ட மனுவை நிராகரித்து, கொழும்பு நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு சட்டவிரோதமானது என தெரிவித்து கோத்தபாய ராஜபக்சவால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள்பாதுகாப்புசெயலரால்முன்வைக்கப்பட்ட மனுவை ஏற்றுக்கொள்ளுமாறு மேன்முறை யீட்டு நீதிமன்ற நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் நேற்று உத்தரவிட்டுள்ளனர்.

அவன்கார்ட் மெரியட் நிறுவனத்துக்கு மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை நடத்திச் செல்வதற்கு அனுமதிவழங்கியதன்ஊடாகஅரசுக்கு11.4கோடிரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று கூறி, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கோத்தபாய ராஜபக்ச மற்றும் ஏழு பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தலைவர் தேர்தலுக்காக போலி முகநூல் கணக்குகள்!

## தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.13

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலை இலக்காகக் கொண்டு அதிகளவான போலி முகநூல் கணக்குகள் மற்றும் டுவீற்றர் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் தலைவர் ரஜீவ் யசிரு இதனைத் தெரிவித்துள்ளார்.

பல தரப்பினருக்கும் எதிராக அவதூறை ஏற்படுத்தும் மற்றும் குரோதத்தை தூண்டும் வகையிலான கருத்துக்கள் வெளியிடப்படுவதற்கான வாய்ப்புகள் இதனால் அதிகரித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலின்போது முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களைக் கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக் குழுவால் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவுக்கு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் தலைவர் ரஜீவ் யசிரு ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# தெரிவுக் குழு சாட்சியம் பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, செப்.13



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்னிலை யாவது தொடர்பாக தேசிய பாதுகாப்பை கருத்தில்கொண்டு முடிவெடுப்பேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு தொடர்பான துறை மேற்பார்வைக் குழுவின் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அந்தக் குழுவின் முன்பாக, விரும்பினால் மட்டுமே முன்னிலையாகுமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். ஆயினும் தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டும் ஜனநாயகத்தை மதிக்கும் ஒரு நபராகவும் ஒரு முடிவை எடுப்பேன்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நாடுஎதிர்நோக்கியநேர்ந்த துன்பியல் சம்பவம் மீண்டும் நாட்டில் ஏற்படுவதற்கு இடமளிக்காதிருப்பதற்கு அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல்களில் 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தனர். பலர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல்கள் குறித்து ஆராய்வதற்காக சிறப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 20க்கும் மேற்பட்டோர் சாட்சியம் வழங்கியிருந்தனர்.

ஆனால், தெரிவுக்குழுவின்மூலம் புலனாய்வுதகவல்கள் கசிகின்றன என்று தெரிவித்து, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்திருந்தார். எனினும் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

இந்தநிலையில் சாட்சியமளிக்க வர வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவுக் குழு கோரியிருந்தது. (எ)

# மாவின் விலையைக் குறைக்காது பாணின் விலை குறைக்கப்படாது!

## பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, செப்.13

கோதுமை மாவின் விலையைக் குறைப்பதற்கு வாழ்க்கைச் செலவு குழு கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளதால் பாணின் விலையைக் குறைக்க வேண்டும் என்று கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பீ ஹரிசன் பேக்கரி உரிமையாளர் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

எனினும் மா விலை தொடர்பாக உத்தியோகபூர்வமாக எமக்கு அறிவிக்கப்படவில்லை. மா விலை குறைக்கப்படாமல் பாண் விலையை குறைக்க முடியாது என்றும், அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடம் தொடர்பாக அமைச்சர் ஹரிசன் தெரிவித்துள்ளதாவது:

எமக்கு அறிவிக்காமலேயே பேக்கரி உரிமையாளர்கள் பாண் விலையை அதிகரித்துள்ளனர். டொலரின் பெறுமதி அதிகரித்துச் சென்றமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால்தான் பாண் விலை அதிகரிக்கப்பட்டது என்று கூறுகின்றனர். அவர்களது பிரச்சினைகளை எம்மிடம் அவர்கள் நேரடியாகத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்பட்டால் எம்மால் அதற்கான நடவடிகக்கைகளை முன்னெடுக்க முடியும். பேக்கரி உற்பத்திகளில் விலையை அதிகரிக்க வேண்டுமானால் அதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய சட்டரீதியானநடவடிக்கைகள் இருக்கின்றன. முதலில் அவர்கள் வாழ்க்கைச் செலவு குழுவுக்கு இது தொடர்பாக அறியப்படுத்த வேண்டும்.

பின்னர் இது தொடர்பான யோசனையை நாம் அமைச்சரவையில் சமர்ப்பித்து, அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டால் மாத்திரமே விலையை அதிகரிக்க முடியும். அவர்கள் அவ்வாறு முறையாக எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. எமக்கு அறிவிக்காது இரு சந்தர்ப்பங்களில் பாண் விலையை அதிகரித்துள்ளனர்.

அவர்களது பிரச்சினைகளை எம்மிடம் முன்வைத்து, கலந்துரையாடிதீர்வொன்றை எடுக்கும் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ள பாண் விலையைக் குறைக்க வேண்டும் என்று கோரியுள்ளோம் - என்றார். (எ)

# கஞ்சிப்பானைக்கு கைபேசிகள்: ஆறு பேர் கைது

கொழும்பு, செப்.13

காலியுள்ள பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கஞ்சிப்பானை இம்ரானுக்கு கொண்டுசெலப்பட்ட உணவுப் பொதியில் 2 கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் அவரது தந்தை மற்றும் சகோதரர் உட்பட 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், கைத்தொலைபேசிகளின் சார்ஜர்களும் மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# மாவை அதிகமான விலைக்கு விற்றவர்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, செப்.13

கோதுமை மாவை அதிக விலைக்கு விற்பனை செய்த 200க்கும் அதிகமான வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 5 நாள்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் பிரியந்த விஜேசிங்க தெரிவித்தார்.

அதிகரிக்கப்பட்ட கோதுமை மாவின் விலையைக் குறைத்து உடன் நடைமுறைக்குவரும் வகையில் மீண்டும் பழைய விலையிலேயே கோதுமை மாவை விற்பனை செய்வதற்கு நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 6அம் திகதி ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 5 ரூபா 50 சதத்தால் கோதுமை மா நிறுவனங்கள் அதிகரித்தன. கோதுமை மாவின் விலையை அதிகரித்தமை தொடர்பிலான விடயங்களை முன்வைப்பதற்காக, வாழ்க்கைச் செலவுக் குழுவுக்கு கோதுமை மா நிறுவனங்கள் அழைக்கப்பட்டிருந்தன. அந்தச் சந்திப்பில் பழைய விலையில் கோதுமை மாவை விற்பனை செய்வதற்கு நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்தன என்று வாழ்க்கைச் செலவுக் குழு குறிப்பிடுகின்றது.

இந்த இணக்கப்பாடு தொடர்பில் சிங்கப்பூரிலுள்ள தங்களின் தலைமை அலுவலகத்துக்கு அறிவித்ததன் பின்னர், அதை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக கோதுமை மா நிறுவனங்கள் அறிவித்துள்ளன. (எ)

# தெரிவாகும் அரசதலைவருக்கு அமைச்சுப் பதவிகள் கிட்டாது!

## முஜுபுர் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப்.13

அரச தலைரின் நிறைவேற்று அதிகாரத்தை 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் முழுமையாக கட்டுப்படுத்தவில்லை. ஆனால், இந்த அரசமைப்பின் பிரகாரம் 2020 இல் தெரிவாகும் அரச தலைவர் அமைச்சு பதவிகளையும் பெறுப்பேற்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜுபுர் ரஹுமான் தெரிவித்தார்.

வெகுசன ஊடக அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை பாதுகாப்பு அமைச்சுடன் இணைத்துக் கொண்டமையானது அரசியல்ரீதியில் பல்வேறு கேள்விகளை தோற்றுவித்துள்ளது. எவ்வாறாயினும் இந்த விடயமானது கொள்கை ரீதியான பிரச்சினையாகவே கருத வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவருக்குத் தற்போது எந்த அதிகாரமும் இல்லை என்றும், தலைமை அமைச்சர் பதவிக்கே அதிக அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன என்றும் அரச தலைவர் தெரிவித்துள்ளார். ஆனால், மிகக் குறுகிய காலத்திலேயே தனக்கு இன்னும் அதிகாரம் இருக்கிறது என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளார்- என்றார். (எ)

# பயங்கரவாத தாக்குதல்: கைதானோருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, செப்.13

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தடை செய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புபட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 64 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்று மட்டக்களப்பு நீதிவான் ஏ.சி. ரிஸ்வானிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

நுவரெலியாவில் உள்ள தேசிய தௌஹீத் ஜமாத் தலைமையகத்தில் ஆயுதப்பயிற்சிபெற்றனர்என்ற சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியை சேர்ந்த 64 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவேந்திரா - கர்தினால் நேரில் சந்தித்துப் பேச்சு

**கொழும்பு, செப். 13**

**இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா - கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இடையிலான சந்திப்பு கர்தினாலின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**

பேராயரின் இல்லத்துக்குச் சென்ற இராணுவத் தளபதியை பேராயரது தனிப்பட்ட உதவியாளர் கலாநிதி ஜவன் விதானகே, இராணுவ கிறிஸ்தவ சங்கத்தின் தலைவர் பிரிகேடியர் மஞ்சுள கருணாரத்ன ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் இராணுவத் தளபதி பேராயரை சந்தித்துக் கலந்துரையாடலை மேற்கொண்டார். இதன்போது இராணுவத் தளபதி எதிர்காலத்தில் இராணுவ நல்லிணக்க முயற்சிகள், பேரழிவுக்குள்ளான சீயோன் தேவாலயம் மற்றும் கட்டுவபிட்டி தேவாலயத்தின் சீரமைப்பு பணிகள், தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிகளுக்கு இராணுவத்தின் ஒத்துழைப்பு தொடர்பாக கர்தினாலுக்கு விளக்கிக் கூறினார்.

எங்கள் நாட்டு மக்களால் போற்றப்பட்ட ஒரு அனுபவமிக்க இராணுவ அதிகாரி என்ற முறையில் நாட்டுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கான உங்கள் முயற்சிகளில் எனக்கு முழு நம்பிக்கையுள்ளது. அத்துடன் எதிர்வரும் தினங்களில் தேர்தல்கள் இடம்பெறவிருப்பதனால் உங்களுக்கு பெரிய பொறுப்புக்கள் வழங்கப்படும் என்று நினைக்கின்றேன் என்று கர்தினால் இராணுவத் தளபதிக்குத் தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# குழந்தையைபிரசவித்த பெண் திடீரென மாயம்!

கொழும்பு, செப்.13

குழந்தையைப் பிரசவித்த பெண் ஒருவர் காணாமற் போயுள்ளார். இந்தச் சம்பவம் நாவலப்பட்டிய மாவட்ட மருத்துவமனையில் நடந்துள்ளது.

கடந்த மாதம் 31ஆம் திகதி வயிறு வலி காரணமாக நாவலப்பிட்டிய மாவட்ட மருத்துவமனையில் பெண் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது வயிற்றைச் ஸ்கேன் செய்து பார்த்த போது அவர் குழந்தை பிரசவிக்கும் நிலையில் உள்ளமை கண்டறியப்பட்டது. அதையடுத்து அவர் முதலாம் திகதி சந்திர சிக்சை மூலம் பெண் குழந்தையைப் பிரசவித்தார்.

பிரசவத்தின் பின்னர் சிசு மோசமான உடல் ஆரோக்கியத்தில் இருந்த காரணத்தால் நாவலப்பிட்டிய மாவட்ட பொது மருத்துவமனையின் சிசு சிகிச்சை பிரிவில் சிசுவைச் சேர்ப்பித்தனர். பின்னர் கடந்த 6 ஆம் திகதி வங்கியில் கடன் தொகை ஒன்றை பெற வேண்டி உள்ளது என்று தெரிவித்து அந்தப் பெண் மருத்துவமனையில் இருந்து வெளியேறியுள்ளார். அந்தப் பெண் மீண்டும் மருத்துவமனைக்கு வராததால் சம்பவம் தொடர்பில் வைத்தியர்கள் நாவலப்பிட்டிய பொலிஸாருக்கு அறிவித்தனர். அந்தப் பெண் மருத்துவமனையில் வழங்கியிருந்த விலாசம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், அவர் அந்த வீட்டில் வாடகைக்கு தங்கியிருந்துள்ளார் என்றும், பின்னர் அங்கிருந்து சென்றுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. (எ)

## அரச தலைவர் பரப்புரைக்காக சஜித் அரச வளங்களை பயன்படுத்துகிறார்

*தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், செப். 13

அரச தலைவர் தேர்தல் தொடர்பான அறிவித்தல்கள், பரப்புரைகளுக்காக அமைச்சர் சஜித் பிரேமதாசா தற்போது அரச வளங்களை பயன்படுத்துகின்றார் என தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. உண்மையை ஆராயும் ஆணையமே இந்த முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளது.

குறித்த மன்றத்தின் ஏற்பாட்டாளரான பீ.சி.தெசலவத்தவினால் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இந்த ஆண்டின் இறுதியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டும், நாட்டின் அரச தலைவர் தேர்தலில் தானும் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளதாக அமைச்சர்களில் ஒருவரான சஜித் பிரேமதாசா தெரிவித்துவருகின்றார். அவ்வாறான அறிவித்தல்களை அரச நிதியில் இடம்பெறும் திட்ட நிகழ்வுகளிலும் தெரிவிக்கின்றார். இவ்வாறு அரச நிதியில் இடம்பெறும் திட்டங்களில் அரச நிதியில் பரப்புரை மேற்கொண்டு தனக்கு வலுச் சேர்ப்பதானது தேர்தல் சட்ட விதிமுறையாகும் என்றுள்ளது. (ம-105)

# போதைப் பொருள் வைத்திருந்தாரென இளவாலையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 13

இளவாலை பனிப்புலம் பகுதியில் போதைப் பொருள்களை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை சிறப்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் குற்ற புலனாய்வுப் பிரிவினர் போதைப் பொருள் வாங்குவோர் போன்று சந்தேக நபரின் இடத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போது சந்தேக நபரை பிடித்துச் சோதனையிட்டபோது அவரிடமிந்து ஒரு கிராம் 265 மில்லிக் கிராம் ஐஸ் போதை பொருள் மற்றும் கஞ்சா மீட்கப்பட்டன. அவர் கைது செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கைக்காக இளவாலை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-723)

# வவுனியாவில் மாணவனை காணவில்லை



வவுனியா, செப். 13

வவுனியா, பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் ஜெ.கனிஸ்டன் (வயது -14) என்ற மாணவனைக் காணவில்லை என்று மாணவனின் தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பூந்தோட்டம் காந்திநகர் பகுதியிலிருந்து மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனது அப்பம்மா வீட்டுக்குச் செல்வதாகத் தெரிவித்து, கடந்த 7ஆம் திகதி மதியம் ஈருருளியில் வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். இரவாகியும் சிறுவன் அப்பம்மா வீட்டுக்குச் சென்றிருக்கவில்லை. அயவலர்கள் மற்றும் உறவினர்களின் உதவியுடன் பெற்றோர் சிறுவனைத் தேடியும் பயனளிக்கவில்லை.

சிறுவன் வீட்டிலிருந்து புறப்பட்டபோது நாவற் கலர் சேட் மற்றும் கறுப்பு ஜீன்ஸ் அணிந்திருந்தார். அவரை கண்டால் 076 0158241 என்ற இலக்கத்துக்குத் தகவல் தருமாறு தந்தை ஜெயராசா கோரியுள்ளார். (து-ரி4)

# ராஜிதவுக்கு எதிராக நேற்று திருமலையில் ஆர்ப்பாட்டம்




கொழும்பு, செப்.13

திருகோணமலை பொது மருத்துவமனைக்கு முன்பாக அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ராஜித சேனாரத்னவின் செயற்பாடுகளால் எதிர்காலத்தில் வடக்கு- கிழக்கில் மருத்துவர்களுக்கு அதீத தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலவுகின்றது என்று தெரிவித்தே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"வடக்கு- கிழக்குக்கு வைத்தியர்கள் வேண்டாமா" "வைத்தியர்களிடம் மாற்றத்தில் அரசியல் தலையீடு வேண்டாம்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை [illegible] வாறு ராஜித சேனா[illegible]வுக்கு எதிரான வாசகங்களை உபயோகித்தும் மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் சுமார் [illegible] கொண்டனர். (எ)

# விபத்தில் பெண் உயிரிழப்பு

கொழும்பு, செப்.13

மாஹரகம - பொல்வத்த பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முற்பகல் நடந்துள்ளது. இருவர் பயணித்த முச்சக்கர வண்டி, பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

பன்னிபிட்டியை நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டி சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் தடம் புரண்டு சென்று, எதிர் திசையில் வந்த சொகுசுப் பேருந்து ஒன்று மீது மோதியுள்ளது.

அதில் படுகாயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதியும், பயணித்த பெண்ணும் ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அந்தப் பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாஹரகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்து மக்களுக்கு கூட்டணியே உதவுகிறது

## வேலுகுமார் கூறுகின்றார்

கொழும்பு, செப். 13
மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டகையோடு கிடைத்திருக்கவேண்டிய உரிமைகளைக்கூட தமிழ் முற்போக்கு கூட்டணியே தற்போது பெற்றுக்கொடுத்து வருகின்றது. மலையக அரசியல் தலைமைகள் அன்று தூரநோக்குச் சிந்தனையுடன் செயற்பட்டிருந்தால் முழுமையானதொரு சமூக மாற்றத்தை நோக்கிப் பயணித்திருக்கலாம் இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

நாவலப்பிட்டியில் நடந்த நிகழ்வொன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய அரசுகள் மலையக மக்களுக்கு துரோகங்களையே கட்டவிழ்த்துவிட்டன. குடியுரிமை பறிக்கப்பட்டதுடன், ஒப்பந்தங்கள் மூலம் எம் உறவுகளை பிரித்தெடுத்து இந்தியாவுக்கு அனுப்பினர். பல்வேறு போராட்டங்களுக்குப் பின்னர் மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது. தமிழ் முற்போக்குக் கூட்டணி உதயமாகிய பின்னரே மலையகத் தமிழர்களுக்கு உரிமை அரசியலை முழுமையாக அனுபவிக்கக் கூடிய சூழ்நிலை உதயமாகியுள்ளது. நிலவுரிமை, வீட்டுரிமை ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்துள்ளோம். லயன் யுகத்துக்கு முடிவு கட்டும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளோம். வெகுவிரைவில் அதனை வெற்றிகரமாக செய்துமுடிப்போம் - என்றார். (த)

# அரசதலைவர் தேர்தலில் வெற்றிபெறுபவரே கட்சியினது தலைவர் என்ற விதி கிடையாது

## ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர் தகவல்

**கொழும்பு, செப். 13**
**அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெறும் நபரே கட்சியின் தலைமைப் பதவியை வகிக்க வேண்டும்' என்ற சரத்து ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. 1994ஆம் ஆண்டிலேயே குறித்த சரத்து நீக்கப்பட்டுவிட்டது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.**

ஐ.தே.கவின் பொதுச் செயலராக செயற்பட்ட காமினி அத்துகோரளவினால் 1994ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட முக்கிய யோசனையின் பிரகாரமே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச களமிறங்கி வெற்றிபெற்றால் கூட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படாது - என்று குறித்த நபர் தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகங்கள் மேலும் செய்தி வெளியிட்டுள்ளன.

கட்சி தலைமைப் பதவி பறிபோய்விடும் என்ற அச்சத்தாலேயே அரச தலைவர் தேர்தலில் சஜித்தை களமிறக்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயங்குகிறார் என தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே ஐ.தே.க. தரப்பிலிருந்து மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரூபவாஹினி விவகாரம்

# அரச தலைவர் மைத்திரியின் முடிவுக்கு சுதந்திர ஊடக அமைப்பால் கண்டனம்!

நாட்டில் சிறந்ததொரு ஆட்சியை முன்னெடுப்பதாகவும், அரசமைப்பின் பிரகாரம் அரச தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்த மாட்டேன் என்றும் உறுதியளித்து ஆட்சிபீடமேறிய ஓர் அரச தலைவரால் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் பாதுகாப்பு அமைச்சுக்குக் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியது என்று தெரிவித்துள்ளது சுதந்திர ஊடக அமைப்பு. (ம)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நினைவுச் சின்னங்கள் தேவை!

## இலங்கைக்கு ஐ.நா அறிவுறுத்தல்

கொழும்பு, செப். 13
இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை நினைவு கூருவதற்கான நினைவுச் சின்னங்களை அமைக்கும் நடவடிக்கையை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும். அதற்கான நிதியுதவியை வழங்க வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான ஐ.நா குழு கோரியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளும்போது அவர்களை நினைவு கூருவதற்கான நினைவுச் சின்னங்களும் வாய்ப்புகளும் குறைந்தளவே உள்ளன. இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டமை தொடர்பான அனைத்துச் சம்பவங்கள் குறித்தும் உடனடி விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படவேண்டும். இந்த சூழமைவில் சாட்சியங்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படுவது அவசியம் என்றுள்ளது. (ம)

# தற்கொலைதாரியின் உடற்பாகங்களை புதைப்பதற்கு நீதிமன்றால் அவகாசம்!

மட்டக்களப்பு, செப். 13
மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் உடற்கூற்று அறையில் வைக்கப்பட்டிருக்கும் தற்கொலை குண்டுதாரியான முகமட் ஆசாத்தின் தலை மற்றும் உடற்பாகங்களை பிரச்சினைகள் எதுவும் இன்றி எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் புதைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மட்டக்களப்பு நீதிவான் ஏ.சி.றிஸ்வான் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டார்.

குறித்த தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இருவரின் வழக்கு விசாரணை நேற்று வியாழக்கிழமை மட்டு. நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இதன்போது நீதிவான் மருத்துவமனையின் உடற்கூற்று அறையில் வைக்கப்பட்டிருக்கம் உடற்பாகங்களை மாவட்டச் செயலர் ஊடாக பிரச்சினைகள் இன்றி எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் புதைக்குமாறும், அதன் அறிக்கையை அன்று நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கட்டளையிட்டுள்ளார்.

**பின்னணி**

உயிர்த்தஞாயிறு தினத்தன்று மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடி பிரதேசத் தைச் சேர்ந்த 34 வயதுடைய முகமட் ஆசாத் என்பவரின் தலை மற்றும் உடற்பாகங்களை அரச செலவில் புதைக்குமாறு மாவட்டச் செயலருக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.



இந்த நிலையில் இதனை மட்டு புதூர் ஆலையடி மயானத்தில் புதைக்க முற்பட்டபோது, அதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அவ்வாறே கள்ளிங்காடு மற்றும் காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் புதைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் உள்ளூராட்சி மன்றங்களில் உடற்பாகங்களை புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இவ்வாறான நிலையில் கடந்த மாதம் மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் இரவோடு இரவாக இந்த உடற்பாகங்கள் புதைக்கப்பட்ட நிலையில் இதற்கு பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் உட்பட பலர் எதிர்ப்பு தெரிவித்து, கல்லடி பாலத்தில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வீதிமறியல் போராட்டத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்மீது கண்ணீர் புகைக்குண்டு தடியடி நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்ததுடன் அமைதிக்கு பங்கம் விளைவித்த குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் உட்பட 5 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இதனையடுத்து கடந்த மாதம் இந்து மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த குறித்த உடற்பாகங்கள் நீதவான் முன்னிலையில் தோண்டி எடுத்து மீண்டும் மட்டு போதனா மருத்துவமனையின் உடற்கூற்று அறையில் வைக்கப்பட்டுள்ளன. (ம)

## எழுக தமிழுக்கு ஆதரவுகோரி

# பேரவையின் இணைத்தலைமை சம்பந்தனுடன் நேற்றுப் பேச்சு!

யாழ்ப்பாணம், செப். 13
எழுகதமிழ் பேரணிக்கு ஆதரவுகோரி த்மிழ் மக்கள்பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் நேற்று உரையாடினார் என்று தெரியவருகிறது.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16ஆம் திகதி முன்னெடுக்கவுள்ள எழுக தமிழ் நிகழ்வுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முழுமையான ஆதரவை நல்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்துள்ளதோடு, கட்சிகள் சார்பில் எழுக தமிழ் நிகழ்வில் பங்குபற்றலுக்கான அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு, பேரணிக்கு எதிர்ப்பில்லை என்று தெரிவித்த சம்பந்தன் பங்குபற்றல் தொடர்பில் கருத்து எதையும் தெரிவிக்கவில்லை என்றும் தெரியவருகிறது. (ம-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயும்...

துக் கடவையில் பயணித்த மூடுந்து ஒன்றின் மீது தொடருந்து மோதி இடம்பெற்ற விபத்தில் மூடுந்தில் பயணித்த தாய் மற்றும் மகன் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த தந்தை மற்றும் மற்றுமொரு மகன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-22)

## 9/11 தினத்தை....

பகுதியில் தொடர் தாக்குதலை நடத்தியது.

9/11 தாக்குதலின் பின்னர் அமெரிக்கா ஒவ்வொரு நினைவு தினங்களிலும் பயங்கரவாதிகளின் நிலைகளின் மீது தொடர் தாக்குதல்களை நடத்துவது வழமை. இந்த ஆண்டு ஈராக்கின் கிழக்குப் பகுதியில் உள்ள பயங்கரவாதிகளின் நிலைகளின் மீது தாக்குதலை நடத்தியது. குறித்த நிலைகள் அல் குவைதா அமைப்பினருடையதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)

## பாகிஸ்தானில்...

தப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இலங்கை அணி சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது இலங்கை அணியின் வீரர்கள் பயணித்த பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதன் பின்னர் வேறெந்த அணிகளும் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடுவதைத் தவிர்த்து வருகின்றன. இந்த நிலையில் பாகிஸ்தானுக்குச் சென்று மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும், மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரிலும் விளையாடுவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்தது.

இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னணி வீரர்கள் 10 பேர் தொடரில் இருந்து விலகியுள்ளனர். இந்த நிலையிலேயே பாகிஸ்தானில் இலங்கை அணிக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளது என்று தலைமை அமைச்சர் அலுவலகத்தால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## கோத்தா...

நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் டில்ருக்சி டயஸ் விக்ரமசிங்க, ஆணைக்குழுவின் எழுத்து மூல அனுமதியைப் பெறாமலேயே கோத்தபாய உள்ளிட்ட 8 பேருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே அப்படித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிவான் நீதிமன்றம் எடுத்த தீர்மானத்தை கைவிட்டு 8 பேரையும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்குமாறும் கோத்தபாய ராஜபக்சவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

எனினும், இலஞ்ச, ஊழல் சட்டத்தின் 78 (1) ஆம் பிரிவின் கீழ் ஆணைக் குழுவின் எழுத்து மூல அனுமதியைப் பெற்றுக்கொண்டு, இந்த விவகாரத்தில் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டுள்ளவர்களுக்கு எதிராகப் புதிதாக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்ய எந்தத் தடையும் இல்லை என மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-22)

## சிங்களக்...

உரிமை அலுவலகத்தில் ஆணைக் குழுவினருக்கு நேற்று முறையிட்டனர். தமது முறைப்பாட்டின் பின்னர் அவர்கள் தெரிவித்ததாவது:

1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடமை புரிந்த மாவட்டச் செயலர் மற்றும் இராணுவத்தினரின் கட்டாய பணிப்பின்பேரில் பல அழிவுகளைச் சந்தித்து எமது பகுதிகளிலிருந்து வெளியேறியிருந்தோம். 1990ஆம் ஆண்டு மீளக் குடியமர்த்தப்பட்டு அதே ஆண்டில் மீளவும் வெளியேற்றப்பட்டு வேறு இடங்களில் வாழ்ந்துவந்தோம். போர் முடிவுற்று 2012ஆம் ஆண்டு மீளவும் குடியமர்த்தப்பட்டோம். எமது காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் தயாரான நிலையில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தால் எமது காணிகள் பறிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். குறிப்பாக ஆமையன்குளம், ஊத்தராயன்குளம், அடையாதான் குளம், கூமாவடிக்குளம், தட்டாமலை, சின்னக்குளம், குஞ்சுக்குளம், நாயடிச்சமுறிப்பு போன்ற பகுதிகளில் வயல்காணி, மேட்டுகாணி என ஆயிரத்து 31 ஏக்கர் அளவிலான காணிகள், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன. இதனால் எமது பொருளாதார நிலை மிகவும் பின்னடைவை நோக்கிச் சென்றுள்ளது.

இந்தக் காணிகள் எமது கிராம மக்களுக்குச் சொந்தமான பேமிற் மற்றும் உறுதிப் பத்திரங்களைக் கொண்ட காணிகளாகவுள்ளன. சட்டவிரோத காணி சுவீகரிப்பு நடவடிக்கை மூலம் இலங்கையின் நீதி மற்றும் நியதிச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன. எனவே மனித குலம் சந்தித்திருக்காத அத்தனை பேரழிவுகளுக்கும் முகம் கொடுத்த சமூகம் என்ற ரீதியில் அப்பாவி மக்களாகிய எங்களின் குரல்களுக்குச் செவிசாய்த்து இன நல்லிணக்கத்தையும், தேசிய ஐக்கியத்தையும் மேலாக விரும்பும் நாம் அமைதியான முறையில் எமது காணிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அனைவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்று தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பான கோரிக்கை கடந்த மாதம் 28ஆம் திகதி மாவட்டச் செயலர் ஊடாக அரச தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கோரிக்கை அனுப்பப்பட்டு 14 நாள்கள் கடந்த நிலையிலும் எமக்கான தீர்வுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. எனவே அடுத்தகட்டமாக நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும், சட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது என்று மேலும் தெரிவித்தனர். (த-20)

## நீதிமன்றில்...

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். இதனால் சந்தேக நபர் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபரின் மறியலை மன்று நீடித்தது. இதையடுத்தே அவர் தற்கொலைக்கு முயற்சித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## அனைத்து...

கப்பட வேண்டும். இதுவே ஜே.வி.பியின் நிலைப்பாடு. இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் அரச தலைவர் வேட்பாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்று நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கை நிலமை இன்னமும் கீழ் மட்டத்திலேயே இருக்கின்றது. எல்லாவிதமான குறைபாடுகளும் அங்கு தலைவிரித்தாடுகின்றன. தோட்டப்பகுதி மக்களையும் எமது சகோதரர்களாக ஏற்றுச் செயற்படுவதை விடுத்து அவர்களை ஒதுக்கி ஓரங்கட்டும் நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த மக்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளமானது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு எந்தவிதத்திலும் போதுமானதாக இல்லை. வாழ்க்கை நிலையில் மட்டுமல்ல சமூக வாழ்க்கை நிலையும் கீழ்மட்டத்தில்தான் உள்ளது. கொழும்பில் பங்களாவொன்றில் வேலை செய்வதற்கு ஆள் தேவையெனில், தோட்டப்பகுதி பிள்ளையொன்று இல்லையா எனக் கேட்கின்றனர். ஹோட்டலில் பாத்திரம் கழுவுவதற்கு ஆள் தேவையெனில் தோட்டப்பகுதியிலிருந்து பையன் ஒருவரைத் தேடிக்கொள்ள முடியாதா எனக் கேட்கின்றனர். எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு எங்கே சமூக அந்தஸ்து வழங்கப்படுகின்றது?

நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்கியும், அவர்களின் வாழ்க்கைநிலை கீழ்மட்டத்திலேயே இருக்கின்றது. ஆகவே, தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மட்டுமல்ல அவர்களின் சமூக நிலையையும் மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் உருவாக்கப்படும். அவர்களும் இந்த நாட்டு பிரஜைகளே! அவர்களுக்கும் எங்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கின்றது? அவர்களையும் இந்த நாட்டின் சம உரிமைகளை அனுபவிக்கின்ற மக்களாக அங்கீகரிப்போம்.

அதேவேளை, வடக்கு - கிழக்கு, மலையகம், தெற்கு என நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு சம உரிமை வழங்கப்படவேண்டும். இதுவே ஜே.வி.பியின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் பின்வாங்க மாட்டோம் - என்றார். (ம-22)

## வேட்பாளர்...

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி ஒன்றும் செய்யமுடியாது. அவர்களைப் பகைத்துத் தமிழர்களின் ஆதரவைப் பெறமுடியாது. ஆகவே, அவர்களுடன் கட்டாயம் பேச்சு நடத்துங்கள்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்க விருப்பப்பட்டுக் கொண்டிருக்கும் சஜித் பிரேமதாசவிடம் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய சந்திப்பின்போது ஆலோசனை கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் சஜித் பிரேமதாசவை வினவியபோதே அவர் தெரிவித்ததாவது:

'ஐ.தே.கவின் அரச தலைவர் வேட்பாளராக நான் போட்டியிடும் விருப்பத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை நான் தனிப்பட்ட ரீதியில் நேரில் சந்தித்து ஏற்கனவே தெரிவித்துள்ளேன். எனக்கு ஆதரவு வழங்குமாறும் அவர்களிடம் கோரியுள்ளேன். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் நான் சந்திக்கவில்லை. தலைவர் சம்பந்தன் உட்பட சில பேருடன்தான் தனிப்பட்ட ரீதியில் பேச்சுக்களை நடத்தியுள்ளேன். எனவே, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் நான் ஒரே நேரத்தில் சந்தித்து எனக்கு ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கவுள்ளேன். ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக நான் களமிறங்க வேண்டும் என்பதில் பெரும்பாலான வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் உறுதியாக உள்ளனர். எனவே, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனக்கே ஆதரவு வழங்குவார்கள். இதில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன்' - என்றார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் நிலைப்பாட்டைக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரச தலைவர் தேர்தல் தொடர்பில் இன்னமும் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவு வழங்கும் என்று இதுவரை முடிவெடுக்கவில்லை. எனினும், சகல வேட்பாளர்களுடனும் மனம் திறந்து பேச நாம் தயாராக இருக்கின்றோம். அந்தப் பேச்சின் பின்னர் மாவட்ட ரீதியில் தமிழ் மக்களின் கருத்துக்களையும் கேட்டறிவோம். இறுதியில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் பேசிய பின்னரே எவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் முடிவெடுப்போம். இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருக்கின்றோம். கண்ணை மூடிக்கொண்டு நாம் தீர்மானங்களை எடுக்க முடியாது. அனைவரினதும் கருத்துக்களையும் கேட்டறிந்தே இறுதி முடிவெடுக்க வேண்டும் - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, ஐரோப்பா தாக்கப்படும் அல்கொய்தா தலைவர் எச்சரிக்கை

கெய்ரோ, செப்.13

அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளைக் குறிவைத்து தாக்க வேண்டும் என்று அல்கொய்தா தலைவர் அய்மான் அல் ஜவாஹிரி காணொலி ஒன்றில் தெரிவித்தார்.



அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலின் 18ஆவது ஆண்டு நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், அல்கொய்தா தலைவர் அவர்தம் ஆதரவாளர்களுக்கு இந்த அறிவிப்பை விடுத்தார்.

அந்தக் காணொலியில் அல் ஜஹாவிரி மேலும் தெரிவித்ததாவது: அல்கொய்தா அமைப்பின் பற்றாளராக இருக்கும் சிலர், எதிரி நாட்டு இராணுவத்தினரிடம், பொலிஸாரிடம் சிக்கிச சிறைக்குள் சென்றவுடன் தங்களின் எண்ணத்தில் இருந்து மாறிவிடுகிறார்கள். அது தவறானது. அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை நினைத்து எம்முடைய எண்ணத்தை மாற்றக்கூடாது. ஜிகாதியாக மாறிவிட்டால், நம்முடைய நோக்கமும் முழுமையும் இராணுவத்தை இலக்காக வைக்க வேண்டும். அமெரிக்க இராணுவம் உலகின் அனைத்து இடங்களிலும் தங்களின் இருப்பை வெளிப்படுத்தி இருக்கிறது. உலகின் கிழக்கில் இருந்து மேற்குவரை அமெரிக்க இராணுவம் பரவி இருக்கிறது.

நாடுகள் அமெரிக்கர்களால் சிதறிடிக்கப்படுகின்றன, இதைத் தடுக்க வேண்டும். அல்கொய்தா அமைப்பில் உள்ளவர்கள் அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகத் தாக்குதலை அதிகப்படுத்த வேண்டும்- என்றார்.

**அய்மான் அல் ஜவாஹிரி**

2011ஆம் ஆண்டு பாகிஸ்தானின் அபாத்தாபாத்தில் அமெரிக்க இராணுவத்தால் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின், அந்த அமைப்புக்குத் தலைவரானவர் எகிப்தைச் சேர்ந்த மருத்துவரான அல் ஜவாஹிரி. ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பதுங்கி வாழ்ந்து வந்த அல் ஜவாஹிரிக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு மோசமான நிலையில் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால், அது உறுதிப்படுத்தப்படவில்லை .அல்கொய்தா அமைப்பில் வளர்ந்துவரும் இளம் தலைவர் ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்சா பின் லேடன் உள்ளார் என்று கூறப்பட்டாலும், அமெரிக்காவல் அவர் கொல்லப்பட்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் செய்தியும் உறுதி செய்யப்படவில்லை. இந்த நிலையிலேயே அல் ஜவாஹிரியின் காணொலி வெளியாகியிருக்கிறது.




# நளினியின் பிணை நீடிப்புக்குத் தடை!

சென்னை, செப்.13

இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக உள்ள நளினி, அவரது மகளின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக அண்மையில் பிணையில் விடு விக்கப்பட்டிருந்தார். அவருடைய பிணையை நீடிப்பதற்குக் கோரப்பட்ட மனுவைச் சென்னை உயர் நீதிமன்றம் மறுத்தது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது: மகளுக்குத் திருமண ஏற்பாடுகள் செய்வதற்காகப் பிணை வழங்கக் கோரி வழக்குத் தொடர்ந்த நளினிக்கு, ஒரு மாதப் பிணை வழங்கி ஜுலை மாதம் 5ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அவருக்கு, மேலும் ஒரு மாதப் .பிணை நீடிப்பு வழங்கிச் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நிலையில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி வரை பிணை நீட்டிப்பு வழங்கக் கோரி நளினி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிணை நீட்டிப்புக்கு நீதிபதிகள் மறுப்புத் தெரிவித்து அந்த மனுவைத் தள்ளுபடி செய்தனர்.



மிகப் பெரிய, பல ரொக்கெட்களைக் (மல்டி) காவிச் செல்கின்ற ஏவு கணைச் சோதனையை அண்மையில் நடத்தியது வடகொரியா. வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் அதைப் பார்வையிட்டுச் சிரித்து மகிழ்கிறார்.

## மரக்கன்றுகளைத் தின்றன என்ற குற்றச்சாட்டில்

# ஆடுகளைக் கைது செய்த இந்தியப் பொலிஸார்

மரக்கன்றுகளைத் தின்ற குற்றத்தில் ஆடுகள் இரண்டைக் கைது செய்தனர் இந்தியப் பொலிஸார். இந்தச் சம்பவம் இந்தியாவின் ஆந்திராவில் நடந்தது. அங்குள்ள தொண்டு நிறுவனம் ஒன்றால் நடப்பட்ட மரக்கன்றுகளை 2 ஆடுகள் தொடர்ந்து தின்றதால், அவற்றைக் கைது செய்ததாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தொண்டு நிறுவனத்தினரால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே குறித்த ஆடுகளைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அந்த குறித்த ஆடுகள் இரண்டும் சோ்ந்து மரக்கன்றுகளைத் தின்று கொண்டிருந்த சமயத்தில் அவற்றைக் கைது செய்ததாகப் பொலிஸார் ஆடுகள் மீதான குற்றச்சாட்டை ஆதாரபூர்வமாக வலுப்படுத்தினர். இதன் பின்னர் ஆடுகளின் உரிமையாளரான டோர்னகொண்டா ராஜையா என்பவர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று ஆடு ஒன்றுக்கு ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்தி அவற்றை மீட்டுச் சென்றார்.




# சிரியாவில் அமெரிக்காவும் ரஷ்யாவும் போர்க் குற்றங்களில் ஈடுபடுகின்றன

## ஐ.நா. குற்றச்சாட்டு

வோஷிங்டன், செப்.13

அமெரிக்கா, சிரிய அரச படைகள், ரஷ்யப் படைகள் ஆகியன சிரியாவில் போர்க் குற்றங்களில் ஈடுபடுவதாக ஐக்கிய நாடுகளின் விசாரணைக் குழு குற்றஞ்சாட்டியது.

சிரியாவில் கடந்த மாத இறுதியில் இருந்து இந்த மாதம் 10 ஆம் திகதி வரை போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அந்தக் காலப்பகுதியில் ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வான் வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பொது மக்கள் பலர் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.




இந்த நிலையிலேயே சிரியாவில் அமெரிக்கா அண்மையில் நடத்திய தாக்குதலிலும் ரஷ்யா மற்றும் சிரிய அரசு நடத்திய தாக்குதல்களிலும் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் விசாரணைக் குழு கூறியுள்ளது. இந்தத் தரப்புகள் சிரியாவிலுள்ள பாடசாலைகள், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்திப் போர்க் குற்றங்கள் புரிவதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.


**சிரியா உள்நாட்டுப் போர்**

சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும், ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடக்கிறது. அது தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இதில் ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவளிக்கிறது. ஆயுதக் குழுக்களுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கிறது. ஆயுததாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரச படைகளால் மீட்கப்பட்டு விட்டன. அவர்களின் பிடியில் உள்ள கடைசி இடமான இட்லிப் மாகாணத்தில் இறுதிப்போர் நடந்து வருகிறது.

இந்த உள்நாட்டுப் போரில் இதுவரை பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆஸ்திரேலியாவின் சன்ஷைன் கடற்கரையை ஒட்டியுள்ள பெரேஜியன் ஸ்பிரிங்ஸ் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயால் மரங்கள் எரிந்து சாம்பராகின. பிரேசில், இந்தோனேசியா, ஆஸ்திரேலியா எனக் காட்டுத் தீச் சம்பவம் அதிகரித்து வருகிறது.

# இந்தோனேசியா காட்டுத் தீயால் மலேசியாவுக்கு மூச்சுத் திணறல்!

கோலாலம்பூர், செப்.13

இந்தோனேசியாவின் சுமத்ரா மற்றும் காலிமந்தான் ஆகிய பகுதிகளில் பல்வேறு இடங்களில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. இந்தக் காட்டுத்தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. இந்தத் தீ மேலும் சில இடங்களுக்குப் பரவ வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.



அது தொடர்ந்து பரவி வருவதால் மலேசியா உள்ளிட்ட இந்தோனேசியாவின் அயல் நாடுகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வேகமாகப் பரவிவரும் குறித்த காட்டுத் தீயால் ஏற்பட்டுள்ள புகை மூட்டம், காற்றின் வேகத்தில் அயல் நாடுகளுக்குப் பரவிப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்தத் தீயால் அதிகளவு பாதிப்பு மலேசியாவுக்கு ஏற்பட்டுள்ளது. மலேசியாவின் பல்வேறு பகுதிகள் புகைமூட்டத்தால் பாதிக்கப்பட்டுள் ளன. அங்குள்ளவர்களுக்குச் சுவாசப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

மலேசியாவின் சிலாங்கூர், சரவாக், பகாங், ஜொகூர் ஆகிய ஐந்து மாநிலங்கள் மற்றும் கோலாலம்பூரைச் சேர்ந்த பல பகுதிகள் இந்தக் காற்று மாசால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மலேசியா அரசு தெரிவித்தது.

நுரையீரல் மற்றும் இதயப் பிரச்சினை உள்ளவர்கள் இந்தக் காற்று மசால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அரசின் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள் ளது. மலேசியா அத்துடன் சிங்கப்பூர், புரூனே உள்ளிட்ட நாடுகள் இந்தோனேசியாவில் தற்போது ஏற்பட்டுள்ள காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவுக்கு போர் தோல்வியை அளிக்கும்

### எச்சரிக்கை விடுத்தது ஈரான்

தெஹ்ரான், செப்.13



ஈரான் மீதான அமெரிக்காவின் போர் நாட்டம் தோல்வியில் முடியும் என்று ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் போர் நாட்டமும், விரோதப்போக்கும் தோல்வியில்தான் முடியும். இதை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும்.

அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பாக ஈரான் மேற்கொண்ட உறுதிப்பாடுகளை மேலும் குறைப்பதற்குத் தயாராக இருக்கிறோம் - என்றார்.

அணுசக்தி ஆராய்ச்சி மேம்பாட்டுத் துறையின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தவுள்ளதாகவும், யுரேனியத் தயாரிப்புத் தொடர்பாக உள்ள ஒப்பந்தத்தைக் கைவிட முடிவு செய்திருக்கிறோம் என்றும் கடந்த வாரம் ஈரான் தெரிவித்தது.

2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அணு ஆயுத ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளை மீறி யுரேனியத் தயாரிப்பில் ஈரான் ஈடுபடுவதாகச் செய்திகள் வெளியாகின. அமெரிக்கா இதைக் கடுமையாக விமர்சித்தது. இந்த நிலையிலேயே ஈரான் அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கலைக்கப்பட்டது கனடாவின் நாடாளுமன்றம்

ஒட்டோவா, செப்.13

கனடாவின் தலைமை அமைச்சரான ஜஸ்டின் டுரூடோவின் பரிந்துரைக்கு அமைவாக அந்த நாட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜஸ்டின் டுரூடோவின் முடிவுக்கு ஆளுநர் ஜெனரல் ஜூலி பயேட் அனுமதி அளித்தார்.

கனடா நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்குத் திட்ட மிட்டுள்ள தாக ஜஸ்டின் டுரூடோ மீது விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

### வர்த்தகப் போர் விவகாரம்

## அமெ. பொருள்களுக்கான வரியை நீக்கியது சீனா!

பீஜிங், செப்.13



அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 16 வகைப் பொருள்களின் வரியை நீக்கியது சீனா.

உலகின் இருபெரும்பொருளாதார நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனா இடையே ஒரு ஆண்டுக்கும் மேலாக வர்த்தகப் போர் நீடித்து வரும் நிலையில் இந்த வரி நீக்கம் நிகழ்ந்துள் ளது.

அமெரிக்காவில் இருந்து சீனாவுக்கு இறக்குமதியாகின்ற இறால், பண்ணை விலங்குகளுக்கான மீன் உணவு, புற்று நோய்க்கான மருந்து உள்ளிட்ட 16 வகைப் பொருள்களுக்கே வரியை நீக்கியுள்ளது சீனா. இந்த வரிவிலக்கானது எதிர்வரும் 17ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என்றும்- ஓர் ஆண்டுவரை நடைமுறையில் இருக்கும் என்றும் - அறிவிக்கப்பட்டுள் ளது. இதைவிடவும் இன்னும் சில அமெரிக்கப் பொருள்களுக்கு வரிவிலக்கு அளிப்பது குறித்துப் பரிசீலித்து வருவதாகச் சீன வரிவிதிப்பு ஆணையகம் தெரிவித்தது. சீனாவின் இந்த வரிவிலக்கு முடிவை வரவேற்ற அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சீனாவின் இந்த முடிவு பொருளாதார ரீதியிலான பேச்சுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தும்- என்றார்.

அமெரிக்கா - சீனா இடையிலான வர்த்தகப் போர் சீனாவின் வணிக நலன்களையும், வளர்ச்சியையும் பாதித்துள்ளது என்று அரசியலவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## டொரியன் புயல் தாக்கியதில் 2500 பேரைக் காணவில்லை!

நசாயு, செப்.13

பஹாமஸில் டொரியன் புயல் தாக்குதல் காரணமாக 2ஆயிரத்து 500 பேர் காணாமற் போயுள்ளதாக அந்த நாட்டின் தேசிய பேரிடர் முகாமை தெரிவித்தது. கரிபீயன் தீவுகளில் உள்ள பஹாமஸ் மற்றும் அபகோ தீவுகளை டொரியன் புயல் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கியது. இதில் பெரும் சேதம் பஹாமஸ் தீவுக்கு ஏற்பட்டது. இந்தத் தலைமுறைக்கான பேரழிவை இந்தப் புயல் விட்டுச் சென்றிருக்கிறது என்று டொரியன் தாக்கம் குறித்து பஹாமஸின் தலைமை அமைச்சர் கூறினார். டொரியன் புயல் தாக்கத்தால் பஹாமஸில் 43 பேர் சாவடைந்தனர். 70 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 2ஆயிரத்து 500 பேர் காணாமற் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.13
சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 5ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் மற்றும் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை வட்டு. வை.எம்.எச்.ஏ மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுன்னாகம் வொரியஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மேற்படி போட்டியில் வெற்றி பெறும் அணி பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறும் இறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை லெவன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியுடன் மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக விளையாட்டு உத்தியோகத்தர் செ.ரம்மியராகுலன்,வட்டு இளைஞர் மன்றத் தலைவர் அ.பகீதரன்,மதிப்புறு விருந்தினர் ஜே/179 கிராம சேவையாளர் சிறிஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(23)

---

யாழ்ப்பாணம்,செப்.13
காளி கோவிலடி சனசமூக நிலையத்தின் பவள விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டத்திலுள்ள அழைக்கப்பட்ட 12 கடினப் பந்து துடுப்பாட்ட அணிகளுக்கு இடையிலான லீக் முறையிலான ரி-20 துடுப்பாட்ட போட்டி இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் முதலாவது ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரண்டாவது ஆட்டத்தில் திருநெல்வேலி துடுப்பாட்டக்கழக அணியை எதிர்த்து ஹட்லியைஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.மூன்றாவது ஆட்டத்தில் அரியாலை சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து 'ஏபி' விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. நான்காவது ஆட்டத்தில் ஹட்லியைஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்ரோறியா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. ஐந்தாவது ஆட்டத்தில் 'ஏபி' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. ஆறாவது ஆட்டத்தில் விக்ரோறியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்டக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,செப்.13
கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கான கீர்த்திகன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது.காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,செப்.13
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 6 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்களைக்கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர் வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெறவுள்ளது. (23)

### கோலூன்றிப் பாய்தலில்

# மகாஜனக் கல்லூரிக்கு ஓர் தங்கம், ஓர் வெள்ளி

யாழ்ப்பாணம்,செப்.13
இலங்கை பாடசாலைகள் மெய்வன்மை சம்மேளனம் நடத்தும் 89 ஆவது ஜோன்ராப்பெற் மெய்வன்மைப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஓர் தங்கம், ஓர் வெள்ளிப் பதக்கங்களைக் கைப்பற்றியது. கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் சி. தீபிகா 3.11 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும்,



வி.யதுர்சிகா 2.70 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

### தேசிய பரா மெய்வன்மைப் போட்டியில்

## தங்கப் பதக்கங்களை வென்ற அஹமட் அனீக் மதிப்பளிக்கப்பட்டார்



தேசிய பரா மெய்வன்மைப் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களைவென்றுசாதனை படைத்த வீரர் எம்.எம். அஹமட் அனீக் நேற்று வியாழக்கிழமை காத்தான்குடி அந்நாஸர் மகா வித்தியால யம்.மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்று நோய் பிரிவு ஆகியவற்றால் மதிப்பளிக்கப்பட்டார்.

காத்தான்குடி அந்நாஸர் மகா வித்தியாலய மதிப்பளிப்பு நிகழ்வில் பாடசாலை அதிபர் தலைமையின் கீழ் பாடசாலை சமூகம் சாதனை வீரருக்கு மதிப்பளித்தது. அத்தோடு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்று நோய் பிரிவினராலும் அவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

## மதிப்பளித்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம்.செப்.13
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வட மாகாண குத்துச்சண்டை போட்டியில் பதக்கங்கள் பெற்ற முசலி பிரதேச வீர, வீராங்கனைகளுக்கான மதிப்பளித்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை முசலி பிரதேச செயலர் வசந்தகுமார் தலைமையில் முசலி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வீர. வீராங்கனைகளின் பெற்றோர் மற்றும் முசலி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (23)



## அலுவலக கட்டடத் திறப்பு

யாழ்ப்பாணம்.செப்.13
கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்துக்கான அலுவலக கட்டடத்திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டசங்க தலைவர் அ.றொஜிஅலோசியஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண துடுப்பாட்டச் சங்கத் தலைவர் யோ.ரதீபன், மதிப்புறு விருந்தினராக கிளிநொச்சி மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்தின் முன்னாள் தலைவர்களான வைத்தியர் மா.ஜெயராசா.க.சௌந்தராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.13
மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.மற்றுமொரு ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

---

யாழ்ப்பாணம், செப்.13
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுத்தொடரில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் வைகறை விளையாட்டுக்கழக அணி 11: 1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 7 : 4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் அணியில் மார்ஷ்

கூடுதல் பந்து வீச்சு வாய்ப்புக்காக 5ஆவது டெஸ்ட் போட்டியில் துணைத் தலைவர் ட்ராவிஸ் ஹெட்டிற்குப் பதிலாக மிட்செல் மார்ஷ் ஆஸ்திரேலிய அணியில் இணைக்கப்பட்டிருந்தார். ஆஷஸ் 5ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது.

சில காலங்களாக மிட்செல் மார்ஷ் சிறந்த உடல்தகுதியை கொண்டிருக்கவில்லை என்ற காரணத்தால் அவரை அணி நிர்வாகம் அணியில் இணைக்காது அவருக்குப் பதிலாக ட்ராவிஸ் ஹெட்டை இணைத்தது.


தற்போது டிராவிஸ் ஹெட்டை நீக்கி அவருக்குப் பதிலாக மீண்டும் மிட்செல் மார்ஷ் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

ட்ராவிஸ் ஹெட் நீக்கியது குறித்து ஆஸ்திரேலியா அணித் தலைவர் டிம் பெய்ன் தெரிவிக்கையில்;

ட்ராவிஸ் ஹெட் ஏன் ஆடவில்லை என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். 10 டெஸ்ட்கள் ஆடியுள்ளார். ஆரோக்கியமான சராசரி வைத்துள்ளார். இந்த டெஸ்ட் போட்டியை வெல்ல வேண்டும் என்பதற்காக யாரையாவது நீக்கிவிட்டு கூடுதல் பந்து வீச்சாளர்களை இணைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அதனால் அவருக்குப் பதிலாக மிட்செல் மார்ஷை இணைத்துள்ளோம். ஆனால், ட்ராவிஸ் ஹெட் ஆஸ்திரேலிய அணியின் எதிர்காலம் ஆவார். மேலும் டெஸ்ட் தொடரை வெற்றியுடன் முடிக்க அதே பந்து வீச்சு வரிசையையே களமிறக்குகிறோம். ஆகவே அவர்களின் சுமையைக் குறைக்க கூடுதல் பந்து வீச்சாளர்கள் தேவைப்பட்டது. இதனையடுத்து மிட்செல் மார்ஷை உள்ளே கொண்டு வர முடிவெடுத்தோம்.

மிட்செல் மார்ஷ் சகலதுறை ஆட்டக்காரர் என்பதால் துடுப்பாட்டத்திலும் அவர் ட்ராவிஸ் ஹெட் போல் பங்களிப்பு செய்ய முடியும் -என்றார்.



### ரொனால்டோ ஹட்ரிக் கோல்

# போர்த்துக்கல் அதிரடியாட்டம்

ஐரோப்பிய கண்டத்தில் உள்ள கால் பந்து நாடுகளுக்கு இடையிலான யூரோ சம்பியன்ஷிப் தொடர் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்கேற்பதற்கான தகுதிச் சுற்றுகள் தற்போது நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் போர்த்துக்கல்- லிதுவேனியா அணிகள் மோதின. இதில் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் முதல்பாதி ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்தார். பதிலுக்கு லிதுவேனியா அணி ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் 1:1 என்ற நிலையில் சமநிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் 61ஆவது நிமிடத்திலும், 65 ஆவது நிமிடத்திலும், 76 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து ஹட்ரிக் கோல் அடித்து அசத்தினார் போர்த்துக்கல் அணி வீரர் ரொனால்டோ.

இறுதி நேரத்தில் அந்த அணியின் வீரர் வில்லியம் ஒரு கோலைப் போட இறுதியில் போர்த்துக்கல் அணி 5:1 என்ற கணக்கில் லிதுவேனியா அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்திய அணியில் ஷுப்மான் கில்



தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெறும் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் முதன் முறையாக இளம் வீரர் ஷுப்மான் கில் வாய்ப்பு பெற்றுள்ளார். அதேசமயம் கே.எல். ராகுல் நீக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ளது. இதற்கான 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

3 டெஸ்ட் போட்டிகளும் உள்நாட்டில் நடப்பதால், அஸ்வின் விளையாடும் 11 பேர் கொண்ட அணியில் இடம் பெற அதிகமான வாய்ப்புள்ளது. இலக்குக் காப்பாளர் பணிக்கு ஏற்கனவே விருதிமான் சாஹா, ரிஷப் பந்த் ஆகியோர் இருக்கின்றனர். இதில் ஷுப்மான் கில் வேறு இடம் பெற்றுள்ளார். [illegible] தொடரில் 3 இலக்குக் காப்பாளர்கள் இடம் பெற்றுள்ளனர்.

வேகப்பந்துவீச்சில் பும்ரா, முகமது ஷமி, இசாந்த் சர்மா, ஆகியோரும், சுழற்பந்து வீச்சில் ரவிந்திர ஜடேஜா, குல்தீப் யாதவும் இடம் பெற்றுள்ளார்கள்.

இந்திய அணி விவரம்:

விராட் கோக்லி (அணித் தலைவர்), மயங்க் அகர்வால், ரோஹித் சர்மா, சட்டேஸ்வர் புஜாரா, அஜின்கயே ரஹானே, ஹனுமா விஹாரி, ரிஷப் பந்த், விருதிமான் சாஹா, ரவிச்சந்திர அஸ்வின், [illegible] ஜஸ்பிரித் பும்ரா, இசாந்த் சர்மா, முகமது ஷமி, சுப்மான் கில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக் கிண்ணத்தை மட்டும் வெல்லவில்லை

### சஞ்சய் பாங்கர் தெரிவிப்பு

என்னுடைய ஐந்து வருட துடுப்பாட்ட பயிற்சியாளர் பணிக் காலத்தில் இந்திய அணி உலகக் கிண்ணப் போட்டிகளைத் தவிர சிறப்பாகவே விளையாடியது என்று சஞ்சய் பாங்கர் தெரிவித்துள்ளார்.



இந்திய அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராக பணி புரிந்தவர் சஞ்சய் பாங்கர். மேற்கிந்தியத்தீவுகளுடனான தொடருடன் அவருடைய பதவிக்காலம் முடிவடைந்தது. அவருக்குப் பதிலாக விக்ரம் ரத்தோர் தற்போது துடுப்பாட்ட பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தான் பணிபுரிந்த காலத்தில், இந்திய அணி சிறப்பாகவே விளையாடியது சஞ்சய் பாங்கர் என்று தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

2014 ஆம் ஆண்டிலிருந்து இந்திய அணி கடந்த வந்த பாதையை நான் திரும்பி பார்க்கிறேன். கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலிடத்தில் இருந்துள்ளது. 52 டெஸ்ட் போட்டிகளில் 32 போட்டிகளில் வெற்றி பெற்றோம். உலகக் கிண்ணப் போட்டியை மட்டுமே நாம் வெல்லவில்லை.

மீண்டும் பயிற்சியாளராக நியமிக்கப்படாததால் ஏமாற்றம்தான். ஆனால் வாய்ப்பு தந்ததற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு நன்றி சொல்லியாக வேண்டும்- என்றார்.



## டோனியின் ஓய்வு வதந்தி மனைவி சாக்ஷி விளக்கம்

டோனி ஓய்வு குறித்து வரும் செய்திகள் அனைத்தும் வதந்திகள் என, அவரது மனைவி சாக்ஷி தனது ருவிற்றரில் விளக்கம் அளித்துள்ளார்.

இந்திய அணித்தலைவர் விராட் கோக்லி தனது ருவிற்றரில் என்னால் மறக்க முடியாத போட்டி என்று குறிப்பிட்டு டோனியுடன் இணைந்து ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 2016ஆம் ஆண்டு உலகக் கிண்ண காலிறுதியில் விளையாடிய ஆட்டத்தை நினைவு கூர்ந்து இருந்தார். அத்துடன் 'ஸ்பெசல் நைட்' எனவும் குறிப்பிட்டிருந்தார்.

விராட் கோக்லியின் ருவீற்றைவைத்து, டோனி ஓய்வு பெறலாம் என்ற செய்தி தீயாக பரவியது. அவர் இரவு 7 மணிக்கு பத்திரிகையாளர்களை சந்திக்கிறார் என்றும் செய்தி வெளியானது.

இதற்கிடையில் தென்னாபிரிக்கா தொடருக்கான இந்திய டெஸ்ட் அணி அறிவிக்கப்படும்போது, தேர்வுக்குழு தலைவரான பிரசாத், அப்படி எந்தத் தகவலும் இல்லை என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் டோனியின் மனைவி சாக்ஷி தனது ருவிற்றர் பக்கத்தில் அதெல்லாம் வதந்திகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
|---|---|
| 1603 | 12.09.2019 |

வெற்றி இலக்கங்கள்: 15 39 41 60 E

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ.37, 479, 552/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 775

## அத கோடிபதி

ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 729
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.09.12

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,336,760/-

வெற்றி இலக்கங்கள்: 19 41 51 61 M

விசேட வெற்றி இல. 6307

அபிவிருத்தி லொத்தர் சபை

## போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

SLAS
விசேட வகுப்புக்கள்
வெள்ளி (இன்று)
சனி, ஞாயிறு
9.00 - 3.30

கணக்காளர் சேவை
சனி, ஞாயிறு
9.00 - 4.00

* கூடிய நேரம்
* குறைந்த கட்டணம்

தொடர்புகளுக்கு 076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

## கருத்தரங்கு தொடர் - 10

SLAS OPEN / limited
யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக நுட்ப வழி காட்டல் வளவாளர்

R.திரவியராஜ் (SLAS)
பொது விவேகம்
முகாமைத்துவ விவேகம்

K.தெய்வேந்திரம் (SLAS)
பொது நிர்வாக விடய ஆய்வு
14.09.2019 சனி
9.00 am - 4.00 pm

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
0761661986, 0771116739

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 12.09.2019 | 2615 | கபிலம் |

இடபம்

வெற்றி இலக்கங்கள்: 01 25 48 49

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,143,404/=

13.09.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை கடும்நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 15.08.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **கனகரத்தினம் ஜெயானந்தம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.09.2019) சனிக்கிழமை அதிகாலை 04.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**சாவகச்சேரி வீதி, துன்னாலை தெற்கு, கரவெட்டி.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




தமிழ் இலங்கையர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் கலைஞர்களுக்கான அரச விருது - 2019 வழங்கும் வைபவம் 02.09.2019 திங்கட்கிழமை அன்று கொழும்பு தாமரைத்தடாகத்தில் இடம்பெற்றது. அதில் எமது சாரங்கம் இசைமன்ற முதல்வர் **திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் "கலைச்சுடர்"** என்ற விருதையும் அவரது புதல்வன் (மன்ற இசை ஆசிரியர்) **செல்வன் ரஜீந்திரன் சுரசாஹித்தியன் "கலை இளவரசன்"** என்ற விருதையும் பெற்றிருந் தார்கள் அவர்களை மனமார வாழ்த்துவதுடன் மேன் மேலும் சிறந்த விருதுகளை பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

**சிவா - உடுப்பிட்டி**




## Certificate in English

க.பொ.த.சாதாரணதரத்தில் ஆங்கில பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக் கான அடிப்படைப் பாடநெறி ஆகும்.
மாணவர்களுக்கு மிக அடிப்படையான ஆங்கில அறிவு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த ஆரம்பத்தினை பெற்றுக்கொடுக்கும்.

## Diploma in English

மாணவர்கள் அடிப்படை ஆங்கில அறிவுக்கு மேலதிகமாக அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆங்கில அறிவைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தும் பாட நெறி.

## Diploma in Information Technology

தகவல் தொழில்நுட்பம், அடிப்படை கணினி அறிவுகளான MS Office, Computer Hardware, Basic Graphic Designing, Internet, E-mail & Social Media என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சிறந்த பாட நெறி ஆகும்.

BLC CAMPUS

வகுப்புக்கள் ஆரம்பம் 16.09.2019

## Smart Up

ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் (MS Office, Internet & E-mail, Hardware, Graphic Designing), சிங்களம், Soft Skill மற்றும் ஆளுமை விருத்தி என்பவற்றை உள்ளடக்கிய ஒரு தீவிர பயிற்சிக் கற்கைநெறியாகும்.

- தனியார் நிறுவனங்கள், அலுவலகங்களில் உடனடி வேலைவாய்ப்பு ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு இப்பயிற்சி உதவியாக அமையும்.
- உயர்கல்வி நிமித்தம் பட்டப்படிப்பு அல்லது தொழிற் கற்கைநெறி ஒன்றைத் தொடர இருப்பவர்களுக்கு இப்பயிற்சி நெறி அடிப்படையாகவும் உந்து சக்தியாகவும் இருக்கும்.
- பாடநெறி முடிவில் 3 சான்றிதழ்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வர்.

◇ Diploma in English ◇ Diploma in IT
◇ Certificate in Spoken Sinhala

உடன் அழையுங்கள் - 0777174443

www.blccampus.edu.lk

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 | E - info@blccampus.edu.lk

QUEST INTERNATIONAL UNIVERSITY  LINCOLN UNIVERSITY COLLEGE  Recognized by:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.